இதழ் 1 ஜனவரி 2026

# மானிடவியல்

## அரையாண்டு இணைய ஆய்விதழ்

# ஆசிரியர் குழு

*ஆசிரியர்: பெ.தமிழ் ஒளி, சமூக மனிடவியலாளர்*
*இணை ஆசிரியர்: சி. மகேஸ்வரன், மேனாள் இயக்குனர், பழங்குடி ஆய்வு மையம்*

*குழு*

- *செ. கார்மேகம், மேனாள் இந்திய ஆட்சிப் பணி*
- *சூ. அன்ரனி நோர்பேட், மேனாள் பேராசிரியர், புவியியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்*
- *ஆ. தனஞ்செயன், மேனாள் பேராசிரியர், நாட்டார் வழக்காற்றியல், தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை*
- *சா. பாலுசாமி – மேனாள் பேராசிரியர் தமிழ் இலக்கியத்துறை, சென்னை கிறித்துவக் கல்லூரி*
- *வை. செல்வம் – மேனாள் நிர்வாக இயக்குனர், ம. சா. சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்*
- *வீ. செல்வகுமார் –தொல்லியல் பேராசிரியர், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*
- *ரா.ரெங்கலட்சுமி – நிர்வாக இயக்குனர், ம. சா. சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்*

*ஆய்வுக் கட்டுரைகள் அனுப்ப*

*ஆய்வுக்கட்டுரை வெளியிட 'மானிடவியல்' ஆய்விதழை தேர்தெடுத்தமைக்கு நன்றி.*
*ஆய்வுக்கட்டுரையை* manidaviyal@gmail.com *என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.*
*ஆய்வுக்கட்டுரையை பத்து பக்க அளவிற்கு 1.5 வரி இடைவெளி விட்டு மென் படியாக (*soft copy*) அனுப்ப வேண்டுகிறோம்.*

*தொடர்புக்கு*

B *5 கனகாம்புஜாம் அபார்ட்மெண்ட்ஸ்,*
*14 ஆறாவது நிழற்சாலை, அசோக் நகர், சென்னை – 600 083*
*மின்னஞ்சல்:* manidaviyal@gmail.com

# மானிடவியல்

**அரையாண்டு இணைய ஆய்விதழ்**

# பொருளடக்கம்


*தமிழில் மானிடவியல்.............................................07*

*இனவரைவியல்: கருத்தாக்கமும் செயல்முறையும்..........09*
*பெ.தமிழ் ஒளி*

*வரலாறு, தொல்லியல் ஆய்வுகளில் இனவரைவியல், இனத்தொல்லியலின் பங்கு......................................34*
*வீ.செல்வகுமார்*

*அறிவியலையும், மக்கள் பங்கேற்பினையும் அடிப்படையாக கொண்ட கண்டல்காடுகள் மீட்டுருவாக்கம் மற்றும் கூட்டு மேலாண்மை......................................57*
*வை. செல்வம்*
*பெ.தமிழ் ஒளி*

*பிறமலைக் கள்ளர்க்குப் பாத்தியப்பட்ட கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவில் குறவர் சமுதாயத்தினர்க்கு அளிக்கப்படும் முதல் மரியாதை: ஒரு சமூக மானிடவியல் பார்வை....................................84*
*சி. மகேசுவரன்*

*கொல்லிமலை மலையாளிப் பழங்குடிகளின் சிறுதானிய வேளாண்மையும் அகத்தார் வகைப்பாடும்....................97*
*ரா. ரெங்கலட்சுமி*

*மானிடவியலில் மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ள நேரும் சிக்கல்கள்.........................................................122*
*எத்திராஜ் அகிலன்*

## தலையங்கம்

# தமிழில் மானிடவியல்

சமூகம் மற்றும் சமூக வாழ்க்கை என்பது உயிரினங்களில் மனிதனுக்கு மட்டுமே உள்ள தனித்துவமான நடைமுறை ஆகும். மானிடவியல் எனும் அறிவுப்புலம் மனித இனத்தின் தனித்துவமான 'பண்பாடு' எனும் கருத்தாக்கத்தினையும் அதன் இயக்கவிசையே குறிப்பிட்ட அச்சமூகத்தின் வாழ்க்கை முறை என்றும் வரையறுக்கிறது. சமூக அமைப்பு, சமூக உட்பிரிவுகள், சமூக நிறுவனங்கள், சமூக நெறிமுறைகள், பண்பாட்டு விழுமியங்கள், கலை உணர்வு, கலைத் திறன் என இவையாவும் சமூக வாழ்க்கையின் அடிப்படைக் கூறுகளாக அமைகின்றன. சமூகம் என்பது என்ன? அது எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறது? அதன் நடைமுறைச் செயல்பாடுகள் யாவை? அச்செயல்பாடுகள் ஏன் தொடர்மாற்றங்களுக்கு உட்படுகின்றன? பண்பாட்டு பன்மையம் (cultural diversity) ஏன்? பன்மையத்தை ஏன் போற்ற வேண்டும்? உயிரியல் பன்மையத்துடன் இதன் ஊடறுப்பு, சமூகத்தில் நிலவும் பாலின வேற்றுமைகள்/சமத்துவம் ஏன்? போன்ற கேள்விகளுக்கு பதில் அறிவதற்கான ஆர்வம் மனித மனத்திற்கு எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கிறது. அந்த ஆர்வத்திற்கான விளக்கங்களை, அறிவியல் பூர்வமான ஆய்வுகள் மூலம் திண்ணியமான முடிவுகளை முறைப்படி கண்டறிவதற்கான முயற்சியே மானிடவியல். இந்த அறிவுப்புலம் மேற்கத்திய நாடுகளில் தோன்றி ஏறக்குறைய இரண்டரை நூற்றாண்டுகள் ஆயினும் தமிழில் இதன் அறிமுகம் மிகச் சொற்ப அளவே நிகழ்ந்திருக்கிறது.

இன்று மானிடவியலின் பங்களிப்பும், பயன்பாடும் அடிப்படையில் மனிதச் சமூக செயல்பாடுகளைப் புரிந்து கொள்வது, சமூகம், நிலைத்த மேம்பாடு அதற்கான தொழில் நுட்பம், சமூகத்தின் மீள்திறன், பின் நவீனத்துவம், காலனிய நீக்கம், பேரிடர் மேலாண்மை, என எல்லா நிலைகளிலும் அதி வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஏன் இன்றைக்கு வளர்ந்துவரும் அதி நவீன தொழில் நுட்பமான செயற்கை நுண்ணறிவு துறையிலும் மனித மாண்போடு கூடிய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு குறித்து மானிடவியலாளர்கள் தங்கள்

பங்களிப்பினைச் செய்து வருகின்றனர். இத்தகையைச் சூழலில்தான் தமிழில் மானிடவியலை எழுத்துவதற்கான இந்த முயற்சி.

தமிழில் மானிடவியல் என்பது பெரும் பணி, அந்த இடத்தை இட்டு நிரப்புவது பெரும் சவால், இதற்கு ஆய்வாளர்களின் தொடர் பங்களிப்பும் கூட்டு முயற்சியும் அவசியம். தேவைக்கேற்ப பல்துறைகளின் கருத்தாக்கங்களும், ஆய்வுமுறைகளும் ஒன்றிணைத்து செய்யும் துறையிடை ஆய்வு முறையின் பலன் என்பது ஆய்வு முடிவுகள் ஆழமான புரிதலை எட்ட வழி வகை செய்கிறது. எனவே பல்துறை சார்ந்த ஆய்வாளர்களின் கூட்டு முயற்சி ஆய்வின் தரத்தினைக் கூட்டும். தமிழ் மானிடவியல் என்கிற அரையாண்டு இணைய இதழை தமிழில் வெளியிடுவதில் மூலம் ஆய்வாளர்களிடையே கருத்து பரிமாற்றத்திற்கு இது ஒரு தளமாக இருக்கும்.

# இனவரைவியல்: கருத்தாக்கமும் செயல்முறையும்


## பெ.தமிழ் ஒளி*



*கட்டுரைச்சுருக்கம்: சமூக மானிடவியலில் ஆரம்ப காலத்தில் எழுதிய இனவரைவியல் நூல்களே இவ்வறிவுப்புலத்திற்கு ஒரு வலுவான அடித்தளமாய் அமைந்தது. இனவரைவியல் ஒரு சமூகம் குறித்து முழுதளாவிய பார்வையுடன் அச்சமூகப் பண்பாடு வாழ்க்கைமுறை குறித்து ஆய்வாளர் எவ்வித தற்சார்புமின்றி விவரிப்பு, விளக்கங்களுடன் உரையாக்கம் செய்வது. இந்தியாவில் இனவரைவியல் ஆய்வு 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய காலனி அரசுகள் இங்கு உள்ள சமூகங்களைப் புரிந்துகொள்ள ஆவணப்படுத்துவதில் தொடங்கியது. இந்திய விடுதலைக்குப் பின் மானிடவியலாளர்கள் இந்திய கிராம வாழ்க்கை குறித்து எழுதுவதில் ஆர்வம் காட்டினர். 20ஆம் நூற்றாண்டின் அறிவுத்தளத்தில் பெரும் மாற்றங்களை உருவாக்கிய பின் நவீனத்துவம் இனவரைவியல் எழுத்துக்களிலிலும் அதன் தாக்கத்தை உண்டாக்கியது. அண்மைக் காலங்களில் பிறதுறைகளிலும், மெய்நிகர் உலகிலும் இனவரைவியல் ஆய்வுகள் பயன்படுத்தப்படுகிறது. துறை இடை ஆய்வின் மூலம் புதிய தளங்கள், வடிவங்கள் என இனவரைவியல் ஆய்வு வளர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்ச் சூழலில் சமூகப் பண்பாட்டுப் பன்மையத்தினை பதிவுசெய்யும் வகையில் இனவரைவியல் நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இனவரைவியல் பற்றிய தெளிவும், அறிவும், ஈடுபாடும் தமிழ்ச் சூழலில் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளவும் இங்கு நிலவும் சமூகப் பண்பாட்டு பன்மைத்துவத்தை புரிந்து கொள்வதற்கான கருத்தாக்கங்களையும், கோட்பாட்டையும் வளர்த்தெடுக்க வழி வகுக்கும்*


### தொடக்கவுரை

*தமிழ் ஆய்வுலகில் கடந்த சில ஆண்டுகளாக வெவ்வேறு சமூகங்கள் குறித்து தமிழில் இனவரைவியல் (*Ethnography*) அல்லது இனக்குழு வரைவியல் நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இது தமிழ் சமூகத்தில் நிலவும் பண்பாட்டுப் பன்மையத்தினைப் (*cultural diversity*) பதிவிடும் ஒரு செயலாகவும், குறிப்பிட்ட ஒரு சமூகப் வாழ்க்கைமுறை*


* *சமூக மானிடவியலாளர், மின்னஞ்சல்:* Thamizoli@hotmail.com

குறித்த ஆழமான புரிதல் பெற மேற்கொண்ட முயற்சியாகவும் கருதலாம். இதனால் பொதுச் சமூகத்தில் பண்பாட்டுப் பன்மையம் குறித்த புரிதலும், அறிதலும், அதற்கானத் தேவையும் கூடும் என நம்பலாம். மேலும் இனவரைவியல் ஒரு சமூகத்தின் தனிப்பட்ட அடையாளங்களையும், சமூக நடத்தைகளுக்குள் மறைந்திருக்கும் உள்ளார்ந்த பொருண்மைகளையும், சமூகங்களிடையே நிலவும் வேற்றுமை/ஒற்றுமைகளையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்குகிறது. பண்பாட்டு பன்மையம் என்பது முக்கியமாகப் பாதுகாக்கப்பட வேண்டியதும் போற்றப்பட வேண்டியதும் ஆகும், ரூத் பெனடிக்ட் (Ruth Benedict, 1887 - 1948) என்கிற அமெரிக்கப் பெண் மானிடவியலாளர் 'மானிடவியல் என்கிற கல்விப்புலத்தின் குறிக்கோளே, இவ்வுலகினை பண்பாட்டு வேற்றுமைகளைக் காப்பதற்கான உலகமாக உருவாக்குவதுதான்' என்று குறிப்பிடுகிறார்.

இனவரைவியல் என்பது சமூக மானிடவியலின் ஒரு மூலக் கருத்தாக்கம். இனவரைவியல் குறிப்புகளும், கட்டுரைகளும் ஆய்வு நூல்களுமே மானிடவியல் என்கிற அறிவுப்புலத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு ஒரு வலுவான அடித்தளத்தையும், அவ்வறிவுப்புலத்திற்கான தனித்துவம், அடையாளம் ஆகியவற்றையும் பெற்றுத்தந்தன. இனவரைவியல் என்பது ஒரு சமூகப் பண்பாடு அல்லது இனக்குழு பற்றி எழுதப்படும் நம்பகமான விளக்கவுரை ஆகும், அதை வாசிப்பவருக்கு அச்சமூக வாழ்க்கைமுறையினை தெளிவாக, நுட்பமாக கண் முன் கொண்டு நிறுத்துகிறது. இனவரைவியல் என்பது ஒரு சமூக யதார்த்தத்தை சமூகப் பிரதியாகவும் உருவாக்குகிறது.

அடுத்து தெரிந்துகொள்ளவேண்டியது இனவரைவியல் என்கிற சொல் மானிடவியல் மற்றும் பிற சமூக அறிவுப்புலங்களில் சூழலுக்கேற்ப பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவது இது ஒரு கருத்தாக்கம் (concept), இனவரைவியல் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகம் குறித்த சூழல், அதன் பண்பாட்டுக்கூறுகள், சமூக நிறுவனங்கள், சமூக அமைப்பு, குடும்பம் எனும் நடைமுறை, திருமணம், வழிபாடு, சடங்குகள், வாரிசுரிமை போன்ற செயல்முறைகள், சமூக நிகழ்வுகள் இவற்றில் மறைந்திருக்கும்

பொருள்கள் குறித்துப் பேசுவது. இரண்டாவதாக, மேற்கண்ட கருத்தாக்கத்தின்படி ஒரு சமூகப் பண்பாடு பற்றி முழுதளாவியப் பார்வையுடன் எழுதப்படும் ஒரு எழுத்து வகை (genre). மூன்றாவது ஒரு ஆய்வு முறையாக (method) மானிடவியல், சமூகவியல், உளவியல், புவியியல் போன்ற அறிவுப்புலங்களில் களஆய்வில் அப்பண்பாடு குறித்த பண்பறித் தரவுகள் (qualitative data) சேகரிக்கப் பயன்படுத்துவது. இனவரைவியல் என்பது ஒரு ஆய்வாளர் தன்னுடைய சமூகத்தினையன்றி மற்றொரு சமூகத்தின் பண்பாட்டு வாழ்க்கைமுறை குறித்து அக்குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலுக்குள் தகுந்த ஆய்வுமுறைகளை பயன்படுத்தி தரவுகளை சேகரித்து விவரித்து எழுதுவது. ஒரு ஆய்வாளர் தனது நீண்ட கால சொந்த அனுபவத்தின் மூலம் களத்தில் தான் கவனித்ததை, பார்த்ததை, கேட்டதை, அறிந்து கொண்டதை எவ்விதமான தற்சாய்வுமின்றி உரையாக்கமாக எழுதுவது.

பொதுவாக ஒரு சமூகத்தின் இனவரைவியல் இ.பி.டைலர் பண்பாடு குறித்து 1871 ஆம் ஆண்டு எழுதிய புகழ்பெற்ற வரையறையின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது. இங்கே அவசியம் கருதி இன்றளவிலும் தவிர்க்கப்படாமல் பல்கலைக்கழகங்களின் மானிடவியல் வகுப்புகளில் பயிற்றுவிக்கப்படும் அந்த வரையறையை காணலாம். பண்பாடு என்பது "பல்வேறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பண்பாட்டுக்கூறுகளின் முழுமை - அக்கூறுகள் முறையே அறிவு, நம்பிக்கை/வழிபாட்டு முறை, கலை, விழுமியங்கள், நெறிமுறைகள், மரபார்ந்த செயல்பாடுகள், இவைகள் தவிர மனிதன் ஒரு சமூகத்தின் உறுப்பினராகச் செயல்பட முயன்று பெறும் திறன்கள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியது". இவ்வரையறையின் அடிப்படையில் ஒரு சமூகம் குறித்து முழுதளாவிய அணுகுமுறையில் இனவரைவியல் எழுதப்படுகிறது.

## இனவரைவியல் களஆய்வு

மானிடவியலின் மரபான களஆய்வு என்பது இவ்வறிவுப்புலத்தின் தனித்துவமான ஆய்வுமுறை. ஆய்வு செய்யும் சமூகத்தின் மக்களிடையே குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது

தங்கி அச்சமூகத்தின் உள்ளிருந்து அச் சமூகப்பண்பாடு குறித்து அறிந்து கொள்வது, இயல்பான சூழலில் ஆழமான ஈடுபாட்டுடன் அச்சமூகக்தின் பலதரப்பட்ட மக்களின் தினசரி வாழ்க்கைச்செயல்பாடுகள், பல்வேறு சமூகநிகழ்வுகள் குறித்து தீவிர களஆய்வின் மூலம் தரவுகள் சேகரிப்பது, குறிப்பெடுப்பது, மீண்டும் சரிபார்ப்பது, ஒழுங்கமைப்பது, அவற்றைப் பிரதிகளாக்குவது என பல செயல்பாடுகளை உள்ளடக்கியது. மானிடவியல் ஆய்வின் தனித்துவதைப்பற்றி மூத்த மானிடவியலாளர் டிம் இங்கோல்ட் (2008) குறிப்பிடுகையில் இது 'அவர்களை' பற்றிய ஆய்வு அல்ல மாறாக அவர்களுடன் 'சேர்ந்து' செய்யும் ஆய்வு என்று குறிப்பிடுகிறார். மரபான ஆய்வுக்களம் என்பது ஆய்விற்கு தேர்தெடுத்துக்கொண்ட சமூகம் வசிக்கும் ஒரு குடியிருப்பாக இருக்கலாம் அல்லது பல குடியிருப்புகளை உள்ளடக்கிய ஒரு நிலப்பரப்பாக இருக்கலாம்.

களத்தில் தரவுகள் சேகரிக்க 'பங்கேற்பு உற்றுநோக்கல்' (Participant observation), அச்சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களிடமும் இயல்பாக உரையாடிக்கேட்டறிதல், இதில் கிடைக்கும் தகவல்களிலிருந்து பெரும் ஊகங்களுக்கு மேலும் தொடர்ச்சியாகக் கேள்விகள் கேட்டு மேலும் தரவுகள் சேகரித்தல் அதிலிருந்து ஆழமான புரிதல்களைப்பெறுதல் எனத் தொடரும். இதில் அச்சமூகத்தின் மனித நடத்தைகள் அதற்கு அப்பண்பாட்டுச் சூழலில் அளிக்கப்படும் பொருள்கள் அதற்கான எடுத்துக்காட்டுகள், உண்மை நிகழ்வுகள் என ஆதாரத்தோடு சுட்டிக்காட்டப்படும். ஒரு இனவரைவியலாளர் கேள்விகள் கேட்பதற்கு இணையாக உள்ளூர் மக்களின், செயல்களை, உரையாடல்களை, அவர்கள் அளிக்கும் பதில்களை முழுகவனத்துடன் பொறுமையாக கவனிக்கப் பழகியிருக்க வேண்டும். இது தவிர களத்தில் கிடைக்கும் ஆவணங்கள், புழங்கு பொருட்கள், கலைப்பொருட்கள் இவைகளும் தரவுகள் சேகரிக்க ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படும். இவ்வாறு சேகரித்து, ஒழுங்கமைத்த தரவுகளிலிருந்து அச்சமூகத்தின் இனவரைவியல் கட்டமைக்கப்படும்.

இனவரைவியல் ஆய்வுமுறைகள் புரிந்துகொள்வதற்கு, கையாள்வதற்கு எளிதான முறைகளாகவே தோன்றும் ஆனால் களத்தில் அவைகளைப் பயன்படுத்தும் தீவிரத்தை பொறுத்தே கிடைக்கப்பெரும் தரவுகளின் தரமும், அளவும் இருக்கும். ஏன்,

எதற்கு, எவ்வாறு, எந்தச் சூழல் என்பதற்கான முழுமையான தகவல்கள் அச் சமூக பண்பாட்டின் உள்ளார்ந்த பொருண்மைகளை புரிந்து கொண்டு மேலோட்டமான விளக்கவுரையாக இல்லாமல் முழுமையான, திண்மையான இனவரைவியல் எழுத உதவும். போதிய தரவுகள் இல்லாமல் எழுதுவது இனவரைவியல் ஆகாது, மாறாக அச்சமூகம் குறித்த குறிப்புகளின் ஒரு சிறு தொகுப்பாகவே இருக்கும்.

களஆய்வில் புறவயப்பார்வை (etic) முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. மரபான மானிடவியல் ஆய்வு ஒரு ஆய்வாளனுக்கு வலியுறுத்துவது தன் சமூகம் தவிர்த்து பிறிதொரு சமூகத்தினை ஆய்வு செய்ய வேண்டும் என்பதே. இதற்கான முக்கிய காரணம், ஆய்வாளனின் தற்சாய்வு, உள்ளுணர்வு (subjectivity) ஆகியன அவர் சார்ந்த சமூகத்தில் ஆய்வில் ஈடுபடுகையில் புறவய யதார்த்தினை புரிந்து கொள்வதில் ஏற்படும் மனக்குறுக்கீடுகள் ஆய்வில் உண்மை அறிதலை பாதிக்கக்கூடும். இதனால் இனவரைவியல் ஒரு புறவயமான யதார்த்தினை கட்டமைப்பது பாதிப்படையக்கூடும் என எச்சரிக்கிறது. தவிர மானிடவியல் ஆய்வில் அகவயப்பார்வை (emic) என்பது ஒரு ஆய்வாளர் தான் சார்ந்த சமூகத்தின் உள்ளிருந்து ஆய்வு செய்வது அல்ல, மாறாக ஒரு ஆய்வாளன் தான் சாராத பிறிதொரு சமூகத்தினை ஆய்வு செய்யும் பொழுது எவ்வாறு அச் சமூக மக்களின் பார்வையில்/ காண்ணோட்டத்தில் சமூக நிகழ்வுகளை, நடத்தைகளை புரிந்து கொள்வதற்கான ஒரு ஆய்வு முறை. எனவே மானிடவியல் ஆய்வு களத்தில் ஆய்வாளரின் இடம், அடையாளம் என்பது அச் சமூகத்தில் உள்ளிருப்பவர் - வெளியிருப்பவர் (insider - outsider) என்கிற சமநிலையில் நின்று கொண்டு ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும்.

ஒரு ஆய்வாளன் முற்றிலுமாய் தவிர்க்கவேண்டியது அல்லது மிகுந்த கவனத்துடன் இருக்கவேண்டியது தன் சமூகக் கண்ணோட்டத்தின் (உயர்ந்தது /சரி எனக் கருதும்) அடிப்படையில் பிற பண்பாட்டு நடைமுறைகள், நம்பிக்கைகள் மற்றும் நடத்தைகளை மதிப்பிடும் மனப்பான்மை (ethnocentric).

## உரையாக்கம்

உரையாக்கம் (textualization) இனவரைவியல் எழுதுவதற்கான முக்கிய தொடர் செயல்பாடாகும். ஆய்வுக்களத்தில் அனுபவபூர்வமாகக் காண்பதை, கேட்பதை, கவனிப்பதை, நிலவும், நிகழும் சூழலைக் குறிப்பெடுப்பது, பதிவிடுவது பிறகு அத்தரவுகளை சீர்செய்து, ஒழுங்கமைப்பது. அடுத்த கட்டமாக சமூகத்தின் அமைப்புகள், சூழல், நிகழ்வுகள், நடைத்தைகள் குறித்து உரைநடை வடிவில் தேவையான அளவிலான விவரங்களைக் கொண்ட விரிவுரையாக எழுதுவது எனலாம். இதற்கு ஆதாரமாக களத்தில், ஆய்வாளர் அனுபவத்தில் சேகரித்த தரவுகள் இருக்க வேண்டும். சில சூழல்களில் இந்த விவரிப்புகள் சமூகம் குறித்த நுண் பகுப்பாய்வையும் கொண்டிருக்கும். இந்த விவரிப்புகள் களத்தில் என்ன நிகழ்ந்தது எதற்கு, எவ்வாறு நிகழ்ந்தது என்பதை வசிப்பவர் அறிந்து கொள்ள உதவும். பொதுவாக இவ்விவரிப்பில், பகுப்பாய்வு மற்றும் விளக்கம் இரண்டுக்குமான முக்கியத்துவம் இருக்கும். வாசகர் இனவரைவியலை ஆர்வமாகப் படிக்கப் போதிய அளவு விவரிப்புகள் ஆதாரங்களுடன் இருக்கவேண்டும், அவ்விவரிப்புகள் பகுப்பாய்வினையும், அளித்திருக்கும் விளக்கத்தினையும் புரிந்து கொள்ள உதவ வேண்டும்.

களத்தில் தரவுகளை சேகரிக்கும் பொழுது, அல்லது தகவல்களாகத் தொகுக்கும் பொழுது, இறுதியில் ஆரம்பகட்ட முடிவுகளை எழுதும்போது ஆய்வில் பங்கேற்றவர்களிடம் பேசி சரிபார்த்து அவைகளின் மெய்தன்மைக் குறித்து உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம். இந்த செயல்பாடு தேவையிருப்பின் மேற்கொண்டு தரவுகளோ, தகவல்களோ சேர்ப்பதற்கான வாய்பினை அளிக்கும்.

உரையாக்கத்தின் அடுத்த நிலையில் பொருத்தமான கருத்துருவாக்கங்கள், கோட்பாடுகளோடு தொடர்புபடுத்தி பண்பாட்டு அர்த்தங்களை உரைநடை வடிவில் விளக்கவுரையாக இனவரைவியல் எழுதுவது. மேலும் தேவைக்கேற்ப மானிடவியல் அல்லது பிற அறிவுப்புலங்களின் கோட்பாட்டுக் கருத்துக்களையும் இணைத்து எழுதுவதின் மூலம் விளக்கவுரைகளின் ஆழமும்,

நுட்பமும் கூடும். எனவே ஒரு தரமான விளக்கவுரை எழுத மானிடவியல், மற்றும் பிற சமூக அறிவுப்புலங்களில் உள்ள கருத்தாக்கங்கள், கோட்பாடுகள் குறித்த அறிவும், செய்திறனும் இனவரைவியலாளருக்கு அவசியம்.

இனவரைவியல் எழுத்து என்பது விரிவான விவரிப்பாகவும், வாசகனின் ஆர்வத்தைத் தூண்டும் விதத்திலும், உயிர்ப்புடனும் இருக்கவேண்டும். இது ஒரு ஆய்வு சார்ந்த எழுத்து எனினும் களச்சூழலை, மக்களின் அனுபவங்களை, உணர்வுகளுக்கு இயன்றவரை உயிரோட்டமுள்ள ஒரு படைப்பாக்க நடையில் எழுத வேண்டும். படிக்கும் வாசகர் களத்தில் தான் காண்பது போன்ற ஒரு உணர்வை கொடுக்க வேண்டும். இனவரைவியல் எழுத களத்தில் தகவல்கள் சேகரிப்பதும் அதை அச்சமூகப் பண்பாடு குறித்த ஒரு முழு விளக்கவுரையாகக் கட்டமைப்பதும் ஒரு நெகிழ்வான படைப்பாக்கச் செயல்முறையாகும்.

களஆய்வு மற்றும் உரையாக்கத்தின் தீவிரம் பற்றிப் குறிப்பிடுகையில் இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த/பிரபலமான அமெரிக்க மானிடவியலாளர் கிளிபோர்ட் கீர்ட்ஸ்ன் (Geertz, 1973) கருத்து இங்கே பொருத்தமாக இருக்கும். “இனவரைவியலை அவர் பின் கண்டவாறு விவரித்து எழுதுகிறார். இனவரைவியல் என்கிற செயல்முறை, நட்புணர்வு அல்லது ஒத்துணர்வினை (ஆய்வாளர் - ஆய்விற்குட்படுத்தப்படுவோர் இவர்களுக்கிடையில்) உருவாக்குவது, தகவலளிப்போரை ஆய்வு களத்தில் தேர்வு செய்வது, உரைகளை பிரதியெடுப்பது, கால்வழித்தடங்களுக்கான (Genealogies) தகவல்கள் சேகரிப்பது, ஆய்வுகளத்தில் பிற வரைபடங்களைத் தயாரிப்பது, நாட்குறிப்புகள் எழுதுவது” என்பன போன்றது. ஆனால் இனவரைவியல் என்கிற இடர்கள் நிறைந்த முயற்சியானது ஆய்வுமுறை நுட்பங்கள், செயல்முறைகள் போன்ற செயற்பாடுகளன்று. அதை வரையறை செய்வது எனில் அது ஒரு வகையான அறிவார்ந்த முயற்சி, நுட்பமான தீவிரச்செயற்பாடு, கில்பர்ட் ரையல் (Gilber Ryle) யிடமிருந்து பெறுவதுயெனில் இதை அவர் ‘திண்மையான விவரிப்பு’ (thick description) என்கிறார்.

## ஆரம்ப அல்லது ஐரோப்பிய காலனியாட்சிக்கால இனவரைவியல் ஆய்வுகள்

*இனவரைவியல் என்கிற சொல் 19ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் மானிடவியல் ஆய்வுகளில், ஐரோப்பா தவிர்த்த புவியின் பிற நிலப்பரப்புகளில் வசிக்கும் சமூகங்களின் சமூகப் பண்பாடு குறித்த நேரடிக் களஆய்வின் மூலம் விளக்கவுரையாக எழுதுவது என்கிற பொருளில் பயன்படுத்தப்பட்டது. அப்போது பிரபலமாக பேசப்பட்ட பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கோட்பாடான சமூக டார்வினிசம் (*Social Darwinism*) 19 ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில் ஒரு சமூகத்தின் மேல்நிலை என்பது உயர் தொழில்நுட்பம், உயர்ந்த நிர்வாகமுறை, உண்மையான சமயவழிபாட்டு முறை என்கிற அளவுகோல்களைக் கொண்டு முடிவு செய்தது. இதன்படி ஐரோப்பிய சமூகம் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ள சமூகம் என்றும் படிநிலையின் உச்சியில் அதற்கான இடமும் அளிக்கப்பட்டது. சமூக டார்வினிசம் பிரபலமாகப் பேசப்பட்ட அதே காலகட்டத்தில்தான் ஐரோப்பிய நாடுகளின் காலனிய விரிவாக்கம் மிக வேகமாக நடைபெற்றது. காலனி ஆட்சியாளர்களின் புரிதலுக்கு ஏற்ப காலனிகளில் உள்ள சமூகங்கள் ஐரோப்பிய சமூகங்களுக்குக் கீழே வெவ்வேறு படிநிலைகளில் பொருத்தப்பட்டன. இந்தப் படிநிலையில் தொல்குடிகள் அல்லது பழங்குடிச் சமூகங்கள் மிகவும் ஆரம்ப நிலையில் (*primitive*) அடித்தளத்தில் உள்ள சமூகங்களாகக் கருதப்பட்டன. அத்தகைய புரிதல், பார்வையுடன்தான் காலனிய காலத்து இனவரைவியல்களும் எழுதப்பட்டன. காலனி நாடுகளில் ஆரம்பகால இனவரைவியல் தொடர்பான குறிப்புக்கள், எழுத்துக்கள், நூல்கள் ஆகியவை ஐரோப்பிய வர்த்தகர்கள், காலனி ஆட்சியின் நிர்வாக அதிகாரிகள், சமயப் பணியாளர்கள், சில வேளைகளில் பயிற்சி பெற்ற மானிடவியலாளர்கள் ஆகியோரால் எழுதப்பட்டன.*

*பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முழுவதுமாய் வடிவமெடுத்த மானிடவியல் என்கிற அறிவுப்புலம் அக்காலச் சூழலில் ஒரு அவசரகதி வேலையாக மறைந்துகொண்டிருக்கும் ஐரோப்பா தவிர்த்த புவியின் பிற நிலப்பரப்புகளில் வாழ்ந்து*

கொண்டிருக்கும், மறைந்து கொண்டிருக்கும் 'பிற சமூகங்களின்' (other cultures) வாழ்க்கை முறை, பண்பாட்டு நடைமுறைகளை ஆவணப்படுத்துவது அவசியம் எனக் கருதியது. இந்தப் 'பிற சமூகங்கள்' என்கிற கருத்து, சொல்லாடல் ஏற்கனேவே குறிப்பிட்டது போல இச்சமூகங்கள் படிநிலையில் ஆரம்ப நிலையில் உள்ள பண்பாடற்ற சமூகங்கள் என்கிற பார்வை நிலவிய அச்சூழலில் அப்பார்வைக்கு வலு சேர்க்கும் வகையில் புகழ் பெற்ற மானிடவியல் ஆய்வாளரும், செயற்பாட்டியம் (functionalism) கோட்பாட்டினை உருவாக்கியவருமான மாலினோவ்ஸ்கி (Malinowski) தன்னுடைய ட்ரோபிராண்ட் (Trobrand) தீவு மக்கள் குறித்த புகழ் பெற்ற நூலின் முன்னுரையில் பின்கண்டவாறு எழுதினார், "தற்காலத்தில் கூட அறிவியல்பூர்வமான ஆய்வுக்கு இன்னும் மிக அதிக எண்ணிக்கையில் தொல்குடிச்சமூகங்கள் இருப்பினும் அவைகள் ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளில் மறைந்துபோகும்". எனவே அச்சமூகங்கள் குறித்து ஆய்வுகள் செய்து எழுதுவது, ஆவணப்படுத்துவது, படமெடுப்பது போன்ற செயல்பாடுகள் எவ்வாறு மனித சமூகம் என்பது பண்பாடற்ற நிலையிலிருந்த மாறிவந்திருக்கிறது என்பதை அறிவதற்கான ஆதாரங்களை அளிக்கும் எனக் கருதப்பட்டது. அதே போல மானிடவியல் அறிவுப்புலத்தில் நன்கு அறியப்பட்ட, அமைப்பிய செயற்பாட்டியியல் (structural functionalism) கோட்பாட்டினை வகுத்த ரேட் கிலிஃப் பிரவுன் 1945 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய தொல்குடிகள் அடிநிலையில் இருக்கும் சமூகங்களுக்கு ஒரு முன்மாதிரிச் சமூகம் என்று எழுதினார்.

மேற்குறிப்பிட்ட இருவரில் மாலினோவ்ஸ்கி மானிடவியலில் களஆய்வுமுறையை வடிவமைத்ததிலும், ரேட் க்ளிப் பிரவுன் கோட்பாடு உருவாக்கத்திலும் மானிடவியல் என்கிற அறிவுப்புலத்தின் வளர்ச்சிக்கு சீரிய பங்களிப்பு செய்தவர்கள். இங்கே அவர்களை மேற்கோள் காட்டியதே அன்றைய காலகட்டத்தில் எவ்வாறு சமூகங்கள் குறித்த மானிடவியலாளர்களின் பார்வை இருந்தது என்பதை பதிவு செய்யவேயன்றி அவர்களது பங்களிப்புக் குறித்த எதிர்மறையான கருத்தினை உருவாக்குவதற்கு அல்ல.

ஐரோப்பிய சமூகங்கள் பண்பட்ட சமூகங்கள், அறிவியல், தொழில்நுட்பம், என வளர்ச்சிபெற்ற சமூகங்கள் எனவும்

அதற்கு நேர் எதிர்திசையின் இறுதியில் தொல்குடிச்சமூகங்கள் வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் உள்ள சமூகங்கள் என்கிற கருத்து மானிடவியலாளர்களாலும் முன்வைக்கப்பட்டது. அது மட்டுமன்றி இச் சமூகங்கள் மாற்றங்களுக்குட்படாத அல்லது மிக மெதுவாக மாற்றங்கள் நிகழும் மரபானச் சமூகங்கள் என்கிற சொல்லாடலும் உருவாக்கப்பட்டது.

இந்தியச் சூழலில் ஏறக்குறைய 150 ஆண்டுகள், 1947 ஐரோப்பிய காலனி ஆட்சி முடிவுக்கு வரும் வரை எழுதிய இனவரைவியல் கட்டுரைகளும், நூல்களும் பழங்குடிகளை மந்தமானவர்கள், காட்டுமிராண்டிகள், பண்பாடற்றவர்கள், காலத்தால் பின்தங்கியவர்கள், கீழானவர்கள் என்கிற பொருளிலேயே எழுதினார்கள் . ஐரோப்பியர்கள் மட்டுமல்ல 1947 க்குபின்வந்த முதல் தலைமுறை இந்திய மானிடவியலாளர்களின் பார்வையும் இதை ஒத்தே இருந்தது, உயர் சாதியைச் சேர்ந்த குரியே (1963) மற்றும் போஸ் (1943) போன்ற இந்திய மனிடவியலாளர்கள் பழங்குடிகள் பின்தங்கிய நிலையில் உள்ளனர் அவர்கள் முன்னேற்றம் பெற பொது சாதீய இந்துச்சமூகத்தில் கலந்து கரைந்து போக (assimilation ) வேண்டும் என்கிற கருத்தினையே முன்வைத்தனர் (திரிபுரா, 2023).

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இனவரைவியல் என்கிற ஆய்வுமுறை எழுத்துவகை மானிடவியலில் அறிமுகப்படுத்தப்பட்டபின் அதுவே மானிடவியலின் முக்கிய ஆய்வு முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மானிடவியலில் மிகச் சிறந்த இனவரைவியல் நூல்களை இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் எழுதிய முன்மாதிரி மானிடவியலாளர்கள் பட்டியல் சற்று நீண்டது, அதில் மிக முக்கியமானவர்கள் ரேட் கிலிஃ - பிரவுன் (Red Cliff - Brown), மாலினோவ்ஸ்கி (Malinowski), பிரான்ஸ் போவாஸ் (Franz Boas), மார்க்ரெட் மீட் (Margret Mead), ஈவான்ஸ் - பிரிச்சர்ட் (Evans - Pritchard), ரேமன்ட் பிர்த் (Raymond Firth) மற்றும் லெவிஸ் - ஸ்ட்ராஸ் (Levi - Strauss) போன்றோர். இருபதாம் நூற்றாண்டு முழுமையும் புகழ்பெற்ற ஐரோப்பிய, அமெரிக்க மானிடவியலாளர்கள் ஆசிய, ஆப்பிரிக்க, தென்னமெரிக்க, தெற்குபசிபிக் தீவுகளில் உள்ள பழங்குடி மற்றும் பிற சமூகங்கள் குறித்து அறிவியல் ரீதியான ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி மிகவிரிவான இனவரைவியல்

ஆய்வுகளை நூல்களாக வெளியிட்டுள்ளனர். தொடர்ந்து வந்த காலங்களில் மற்ற சமூக அறிவியல் கல்விப்புலங்களும் குறிப்பாக சமூகவியல் அறிவுப்புலத்தில் இனவரைவியல் ஆய்வு முறையைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

இந்திய அளவில் விடுதலைக்குப்பின் 1950களில் அமெரிக்க மானிடவியலாளர்கள் இந்தியமானிடவியலாளர்கள் துணையுடன் இந்திய கிராம வாழ்க்கைக் குறித்த இனவரைவியல் ஆய்வில் ஆர்வம் காட்டினார். இந்திய கிராமங்களின் சமூக வாழ்க்கை, சாதிய சமூகங்களின் பங்கு இவற்றை ஆய்வதின் மூலன் இந்திய நாகரீகத்தை புரிந்துகொள்ள முடியும் என நம்பினர். கிராமங்களின் சமூக வாழ்க்கையை மையப்படுத்தி செய்த இனவரைவியல் ஆய்வுகளை இரு முக்கிய தொகுப்புகளாக Village India and India's village 1955 ம் ஆண்டு வெளியிடப்பட்டது. தொடர்ந்து வந்த காலங்களில் மானிடவியலாளர்களின் ஆய்வு பன்முகத்தன்மை கொண்டதாக இருந்தது, அவற்றில் முக்கியமாக கவனம் பெற்ற ஆய்வுகளில் இந்தியவியல், அடித்தள அல்லது விளிம்பு நிலை சமூகங்கள் ஆய்வு, காலனிய நீக்கப் பார்வையில் இனக்குழு வரலாறு/இனவரைவியல் போன்றவை இடம்பெற்றன.

## தமிழ்ச் சூழலில் இனவரைவியல் ஆய்வுகள்

இன்று தமிழ் மாநில நிலப்பரப்பாக இருக்கும் பகுதியில் உள்ள சமூகங்களின் வரலாறு இனவரைவியல் ஆய்வுகள், குறிப்புக்கள், கட்டுரைகள், நூல்கள் என 16 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடையும் வரை ஐரோப்பிய காலனி அரசுகளின் அதிகாரிகள், காலனி அரசு அமர்த்திய ஐரோப்பிய மானிடவியலாளர்களால் காலனி அரசுகளின் தேவையை முதன்மையாக கருத்தில் கொண்டே எழுதப்பட்டது. ஐரோப்பிய அறிவுத்திறனுடன் காலனி ஆட்சிக்குத் தேவைப்படும் தரவுகளை சேகரிக்கும் அணுகுமுறையுடன் ஆய்வுக்கட்டுரைகளும், அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. அவர்களின் நோக்கம் தெளிவாக இருந்தது. காலனி ஆட்சியின் அதிகாரத்திற்குக் கீழே கொண்டு வர இங்குள்ள சமூகங்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கைமுறைப் பற்றிய புரிதல்கள் அவசியம். காலனி ஆட்சி கால இனவரைவியல்

எழுத்துகள் குறித்து எழுதுகையில் பர்கர் (Berger,2012) இவ்வாறு எழுதுகிறார், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்து சாதி அமைப்புகள் குறித்த பட்டியல், தகவல்கள், அதில் மக்கள் எண்ணிக்கை கணக்கிடல் ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். சாதிச் சமூகங்களை புரிந்து கொண்டால் மக்களைப் புரிந்து கொள்ளலாம் எனவே இந்தியாவையும் என்பதால் அவ்வாறு கவனம் செலுத்தினர்.

ஐரோப்பிய காலனி அரசுகள் தங்களது ஆட்சியின் கீழ் வரும் நிலப்பரப்பினை மலை, காடு, பள்ளத்தாக்கு, தீவுகள் போன்ற பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்தபோதுஅங்கு வசித்து வந்த மக்களை 'பழங்குடிகள்' என வகைமைப்படுத்தினர். இனவரைவியல் குறிப்புகளும், நூல்களும் பொதுநீரோட்டக் சமூகங்கள் தாண்டி காடுகளின் உட்புறங்களிலும், பள்ளத்தாக்குகள், மலைப்பகுதிகளிலும் வாழ்ந்து வந்த பழங்குடிகள் பற்றியும் எழுதப்பட்டது. மேலும் இயற்கை வளங்கள் நிறைந்த பழங்குடிகளது வாழிடங்களை, பரந்த நிலப்பரப்பினை தங்கள் கட்டுப்பாட்டில் காலனி ஆட்சிக்குக் கீழ் கொண்டு வரவும், அங்குள்ள வளங்களை எடுத்துச் செல்லவும் இவ்வாய்வுகள் பயன்படுத்தப்பட்டன.

அயல் நாட்டு மானிடவியலாளர்களால் தமிழ் நாட்டுப் சமூகங்களிடையே கள ஆய்வுக்குப்பிறகு (பழங்குடிச் சமூகங்கள் உட்பட) ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இனவரைவியல் நூல்கள் (monograph) மற்றும் கட்டுரைகள் இக் கட்டுரையின் இறுதியில் இணைப்பு 1 ல் தரப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் காலனி காலத்தில் தொடங்கி, மிக அண்மையில் களஆய்வின் அடிப்படையில் மானிடவியலாளர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைத் தொகுப்புகள் வரை அடங்கும். இதில் தர்ஸ்டனின் 'தென்னிந்திய சாதிகளும் பழங்குடிச் சமூகங்களும்' நூலின் தொகுப்புகள் தவிர சி. ஜெ. புல்லர் எழுதிய 'இறைவியின் (தேவியின்) பணியாட்கள்: தென் இந்தியக் கோவில் ஒன்றின் அர்ச்சகர்கள்' (Servants of the Goddess: The Priests of a South Indian Temple) மற்றொன்று ராபர்ட் எல்.ஹார்ட்கிரேவ் எழுதிய 'தமிழக நாடார்கள்' (The Nadars of Tamil Nadu) இரண்டு நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மற்ற எந்த நூலும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. தமிழ் சூழலில் முடங்கிப்போயிருக்கும் இந்த தரமான ஆய்வு எழுத்துக்கள்

*தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருந்தால் தமிழ் வாசகர்கள் பயனடைந்திருப்பார்கள். பல்கலைக்கழகங்களின் பதிப்புத்துறைகள் இதை செய்திருக்கலாம். கடந்த காலத்தில் ஓரளவு பதிப்புத்துறைகள் இயங்கிக்கொண்டிருந்த பொழுதே இது நடைபெறவில்லை இன்றைய சூழலில் கற்பனைக்கூட செய்ய முடியாது. எனவே தரமான மொழிபெயர்ப்புகளை வெளியிடும் தனியார் பதிப்பகங்கள் இந்த முயற்சியில் ஈடுபடலாம். குறைந்தபட்சம் சில தேர்ந்தெடுத்த இனவரைவியல் நூல்களையாவது மொழிபெயர்த்து வெளியிட்டால் ஆய்வாளர்களுக்கும், பழங்குடிச் சமூக ஆர்வளர்களுக்கும் தமிழில் வாசிக்கக்கிடைக்கும். இவைகள் சந்தையில் விலை போகக்கூடிய சரக்குகள்தான்.*

*தவிர 1947 ல் ஆங்கிலேய காலனி ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை 1961 ஆம் ஆண்டு தேர்ந்தெடுத்த பழங்குடிச் சமூகங்கள் பற்றிய இனவரைவியல் கட்டுரைகள் அடங்கிய இரண்டு தொகுப்புகளை ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறது.*

*இதுவரையிலும் தனிப்பட்ட சமூகங்கள் குறித்த இனவரைவியல் நூல்கள் தமிழில் (சிலது குறு நூல் என்று கூடச் சொல்லலாம்) மிகச் சொற்ப எண்ணிக்கையிலேயே வெளிவந்திருக்கின்றன (இணைப்பு 2), இணைத்திருக்கும் பட்டியலில் விடுபட்ட நூல்கள் இருக்கலாம். இங்கே ஒரு கருத்தினை சுட்டிக்காட்டவேண்டியுள்ளது, ஒரு சமூகம் குறித்து விரிவான, முழுமையான இனவரைவியல் நூல் எழுத களஆய்வு, போதிய தரவுகள் சேகரித்தல் பிறகு உரையாக்கம் என இவை அனைத்தும் தீவிர செயல்முறையாக நடைபெறவேண்டும். அதற்கு முன்தேவையாக மானிடவியல் ஆய்வுமுறைகள் பற்றிய முறையான, போதிய பயிற்சியும், அறிதலும் அவசியம்.*

*பல்கலைகலைக்கழகங்களில், ஆய்வு நிறுவனங்களில் உள்ள மானிடவியல் துறை, மொழியியல், நாட்டார்வழக்காற்றியல், சமூகவியல், வரலாறு போன்ற துறைகளிலும் பல்வேறு சமூகங்கள் குறித்த தரமான முனைவர் பட்ட ஆய்வேடுகள் தயாரிக்கப்பட்டிருப்பதை அறிவோம். ஆனால் அந்த ஆய்வேடுகள் இதுவரையிலும் இனவரைவியல் நூல்களாக (*monograph*)*

வெளியிடப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வேடுகள் நூல்களாக வெளியிடப்படுமாயின் அச் சமூகங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஆய்வாளர்களுக்கும், வாசகர்களுக்கும், கொள்கை முடிவுகள் எடுக்க தேவைகள் கருதி தகவல்கள் தேடும் அரசுத் துறை அதிகாரிகளுக்கும் பயன்படும்.

*1945* ஆரம்பிக்கப்பட்ட இந்திய மானிடவியல் கணக்கெடுப்பு ஆய்வுமையம் (Anthropological Survey of India) அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இந்தியாவில் உள்ள சாதி, பழங்குடி, அலைகுடிச் சமூகங்களின் வாழ்க்கைமுறைகளை இனவரைவியல் நூல்களாக எழுதுவதைக் கொண்டிருப்பினும், இன்றுவரை தமிழ் நாட்டில் உள்ள ஒரு சாதிச் சமூக அல்லது பழங்குடிச் சமூகத்தின் இனவரைவியல் கூட ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ இந்நிறுவனத்தினால் வெளியிடவில்லை.

## பின்நவீனத்துவமும் இனவரைவியலும்

பின் நவீனத்துவம் (Post modernism) 20 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் கலை, தத்துவம், இலக்கியம், வரலாறு என பல அறிவுப்புலங்களில் உருவான மாற்றம்/போக்கு/இயக்கம், இது மானிடவியலிலும் அதன் தாக்கத்தை உண்டாக்கியது. பின் நவீனத்துவம், நவீனத்துவத்தின் (modernism) பின்புலத்தில் அறிந்து கொள்ள வேண்டியது என்பது தவிர்க்கமுடியாதது. நவீனத்துவம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதி, 20 ஆம் நூற்றாண்டின் முற்பாதி வரையிலும் தீவிரமாக இயங்கிய ஒன்று. நவீனத்துவதில் புதிய தத்துவம், பொருளாதாரம், முன்னேற்றம், தர்க்கம், பகுத்தறிவு, புதிய அரசியல் அமைப்புகள், புதிய வாழ்க்கைமுறை என இவை யாவும் ஏற்கனேவே இருந்த பழைய அமைப்புகளையும், வடிவங்களையும், கருத்துகளையும், நம்பிக்கைகளையும் மாற்றியது. அதிகாரம், உண்மை போன்ற கருத்தாக்கங்கள் குறித்து புதிய வரையறைகள் உருவாக்கப்பட்டன. ஏற்கனவே கூறியது போல 20ம் நூற்றாண்டின் பின் பாதியில் வந்த பின் நவீனத்துவ திறனாய்வுகள் ஏற்கனவே ஏற்புடையதான அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நவீனத்துவ பார்வைகள், அனுமானங்கள், கருத்தாக்கங்கள், கோட்பாடுகள் போன்றவற்றை தீவிரமாக விமர்சனத்திற்குட்படுத்தி

நிராகரித்தது தவிர சில வேளைகளில் அதற்கான மாற்றாகவும் முன்வைக்கப்பட்டது.

நவீனத்துவத்தின் மறுபரிசீலனையாக வந்த பின் நவீனத்துவம் மானிடவியலில் அதன் மூலக் கருத்துக்களான சமூகம், பண்பாடு, இனவரைவியல் குறித்த புரிதல்களுக்கு புதிய அணுகுமுறையை முன்வைக்கிறது. அதிகாரம், உண்மை, பன்மையம் சார்ந்த கருத்தாக்கங்களை முன்னிறுத்தி புதிய விளக்கங்களை அளிக்க முயற்சிக்கிறது. பெருஞ்சொல்லாடல்களை (meta narratives) நிராகரித்து ஒற்றைத்தன்மைக்கு மாற்றாய் பன்மையத்தை முன்வைக்கிறது. ஒரு சமூகப் பண்பாட்டின் இனவரைவியல் - ஒற்றைத் தன்மையுடன் பொதுமைப்படுத்தப்பட்ட விளக்கவுரை என்கிற கருத்தாக்கத்தினை கேள்விக்குட்படுத்துகிறது. ஒரு சமூகப்பண்பாட்டின் உண்மைநிலை (reality) என்பதே பன்மையமானது, முழுமையற்ற பல பகுதிகளாக/துண்டுகளாக (உள்ளூர்/வட்டாரத் தன்மைகளுடன்) இருப்பது. பிரதிநிதித்துவம் (representation) என்பது பற்றி பேசும் பொழுது ஆய்வாளர் மட்டுமே எழுதும் விளக்கவுரையாகவின்றி அது ஆய்வாளர் மற்றும் ஆய்வில் பங்கேற்போர்/சமூகத்தார் இரு சாராரின் குரல்களையும் கொண்ட ஒரு கூட்டு முயற்சியாக இருக்கவேண்டும். மேலும் சமூகப்பண்பாட்டின் யதார்த்தினைக் (உண்மை நிலை என்பதை) கட்டமைப்பதில் மொழியின் முக்கிய பங்கினை வலியுறுத்துகிறது. பின் நவீனத்துவம் ஒரு சமூகத்தின் பண்பாட்டின் ஒற்றைத் தன்மையை தீவிரமாக மறுதலிக்கிறது. இந்த அணுகுமுறையில் இனவரைவியல் என்பதை பல்வேறு வகைகளில் தங்களது எழுத்துக்களில் பின் நவீனத்துவ மானிடவியலாளர்கள் பரிசோதனை செய்தனர்.

பண்பாட்டுப் பன்மையம் (cultural diversity) என்பதையும் தாண்டி, ஒரு குறிப்பிட்ட சமூகப் பண்பாட்டிற்குள் இருக்கும் பன்மைத்துவத்தினையும் (உட்குழுக்கள்/உட்பிரிவுகள்) அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அவற்றில் மையம் - விளிம்பு நிலைகள் இருக்கிறது, அதில் உள்ள விளிம்பு நிலைக்குழுக்கள், அவற்றின் குரல்களுக்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவம் குறித்து பேசுகிறது. ஒரே பண்பாட்டிற்குள் இருக்கும் பன்மைத்துவக் குரல்களை அடையாளம் கண்டு, அவைகளை உள்ளடக்கி அக்குரல்களுக்கு வாய்ப்புகளை உருவாக்க வேண்டும், அவற்றுள்

இருக்கும் முரண்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்கிறது. ஒரு சமூகப் பண்பாடு குறித்து பலகுரல்கள் வெளிப்படும் இனவரைவியல் எழுதப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறது. இனவரைவியலின் உரையாக்கம் ஒற்றைத்தனமான உண்மையை முன்வைப்பதின் மூலம், அச் சமூகத்தின் உட்குழுக்களின் குரல்களை, பன்மையமாய் இருக்கும் உண்மைகளை மறைக்கிறது என்கிற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

ஒரு மானிடவியலாளர் தன் அறிவுப்புலம் சார்ந்து தான் கற்றறிந்த அறிவின் மூலம் பெற்ற அதிகாரத்தின் (authority) தலையீட்டைக் ஆய்வில் இது கட்டுப்படுத்தும் உதவும் என நம்புகிறது. இனவரைவியல் எழுதும் ஒரு மானிடவியலாளருக்கு தொடர் சுயவிமர்சன விழிப்புணர்வு (self critical awareness) மிக அவசியம். அந்த விழிப்புணர்வு களஆய்வு தொடங்கிய நிலையிலிருந்து அச்சமூகத்தின் உண்மை நிலையினை விளக்கும் உரையாக்கம் என முடியும் வரை தொடரவேண்டும்.

காலனியம் என்கிற சொல் நேரடிப்பொருளில் காலனி அரசுகள் செலுத்திய காலனியாதிக்கம் என்றே புரிந்து கொள்ளப்படுகிறது. இனவரைவியல் ஆய்வில் 'காலனியநீக்கம்' என்கிற கருத்தாக்கம் பின்நவீனத்துவத்தின் பண்புக்கூறுகளான மேலாதிக்கம், அதிகாரம், அதிகாரக்கட்டமைப்புகள், பெருஞ் சொல்லாடல் நிராகரிப்பு போன்றவற்றை உள்வாங்கிக்கொண்டு காலனிய ஆட்சிக்காலச்சூழலில் கட்டமைக்கப்பட்ட இனவரைவியல் எழுத்துக்களை, உருவாக்கப்பட்ட கருத்துக்களை கேள்விக்குட்படுத்துகிறது, இனவரைவியல் கட்டவிழ்ப்பு செய்கிறது. இதற்கான ஆய்வுமுறைகளையும், நுட்பங்களையும் பின்நவீனத்துவம் அளிக்கிறது. இந்திய இனவரைவியல் வரலாற்றில் ஐரோப்பிய காலனி ஆட்சி காலத்தினைத் தொடர்ந்து 1947 ஆம் ஆண்டின் பின் இனவரைவியல் எழுதியது இந்திய சமூகத்தின் உயர் சாதியைச் சேர்ந்த ஆண் மானிடவியலாளர்களே இதில் விதிவிலக்காக ஓரிருவரே பெண்கள், அதில் முக்கியமானவர் ஐராவதி கார்வே (Iravathy Karve) எனவே ஆணாதிக்க மனோபாவமும் இணைந்தே செயல்பட்டது. எனவே இனவரைவியல் எழுத்தில், வரலாற்றில் காலனிய நீக்கம் என்பது மேற்கத்திய காலனிய , உயர்சாதி (பார்ப்பனீய), ஆணாதிக்க

என்கிற மூன்று மேலாதிக்க, அதிகார செயல்முறைகளையும் இணைத்தே பேசப்படவேண்டியுள்ளது. தேர்ந்தெடுத்து காலனிய நீக்கம் என்று ஐரோப்பிய காலனிய இனவரைவியல் சிந்தனை, செயல்பாடுகளோடு சுருக்கிக்கொள்வது முழுமையான காலனிய நீக்கமாகாது. காலனிய நீக்கப் புரிதலுக்கான முதல்படி ஆய்வாளரின் கண்ணோட்டத்தில், சிந்தனையில் ஏற்படவேண்டிய மாற்றம். கீழ் கண்ட எடுத்துக்காட்டு எவ்வாறு காலனிய, பார்ப்பனிய, ஆணாதிக்கப் பார்வைகளின் கலவையாக இப்பிரதி உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள உதவும் என நம்புகிறேன்.

மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடிகள் நூலில் (மா. ராசேந்திரன், 2014) வில்லியர், இருளர் சரித்திரத்தை வேடர் சரித்திரம் சுவடியில் (டி 2681), தோற்றப்புராணம் குறித்து பின்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது- "யுகாந்தா பிறளயத்துக்குப் பிற்காலம் வில்லியர் என்றும் யிருளரறென்றும் மலையரசென்றும் வேடரென்றும் சொல்லப்பட்ட சாதிகள் வனவாசி களா யிருக்கிறார்கள். இவாள் மகா சாபம் பெத்த ஒரு ரிஷியினுடைய பிள்ளைகளென்று சொல்லப்பட்டார்கள். இவாள் முன்னம் முழுதும் நிறுமானிகளாயிருந்தார்கள். இப்போ ஆண்பிள்ளைகள் மிருகத் தோலும் பெண் பிள்ளைகள் தைத்த யிளையும் உடுத்திக் கொண்டிருக்கிறார்கள்..........இதில் முகாந்திர மென்ன மென்றால் துஷ்ட மிருகங்க ளிவாளை பீறிப் போடுகிற நடத்தையா யிருக்கையில் மாலாரிஷி எனப்பட்ட ஒரு பெரியவர் வந்து இவாளுடன் சஞ் சாரம் பண்ணி இவாளுட பெண்களில் சிலர் எவ்வற்ணமா யிருக்கிறவர்களை புணர்ந்து சில பிள்ளைகளுண்டாகையால் இவாள் மிருகங்களினால் பீறிப் போடுகிறத்தைத் கண்டு மனதுருகி இவாள் துஷ்ட மிருகங்களுக்கு கார்க்கப் படும்படிக்கு கன்னிகா பொங்கலிட யோசினைச் சொன்னார்............" இப்படி த்தான் இந்த சுவடியில் உள்ள தகவல்கள் தொடர்கிறது.

பூக்கோ (1980) என்கிற பிரெஞ்சு பின் நவீனத்துவவாதி "அதிகாரமும், அறிவும் பிரிக்க முடியாதது, ஒன்றுடன் ஒன்றாக இருப்பது என்கிற கருத்தினை முன்வைக்கிறார். அறிவு என்பது அதிகாரத்தைச் சேர்ந்திராத புறவயமான ஒன்று அன்று. அறிவு உருவாக்கப்படுவதே அதிகார அமைப்புகள் சமூகத்தினை தன் வலிமையான கட்டுப்பாட்டில்

வைக்கத்தான்" என்கிறார். பூக்கோவின் இக்கருத்து, ஆட்சியாளர்களின் நலன் கருதியே இனவரைவியல்களும், வரலாறுகளும் எழுதப்பட்டன என்பது காலனி ஆட்சி காலம் மட்டுமின்றி இன்றும் பொருந்தும்.

பின் நவீனத்துவம் குறித்து இரண்டு வகையான கருத்துகள் நிலவுகின்றன. ஒரு சாரார் இது ஒரு தற்காலிகப் போக்கு எனவும் மற்றொரு சாரார் இது நீண்டகாலம் நீடிக்கக் கூடிய ஒரு சிந்தனை போக்கு எனவும் கருதுகின்றனர். அறிவியல் என்பது தொடர் சட்டக மாற்றம் (paradigm shift) என்கிற பொது விதிமுறைக்கு உட்பட்டே இயங்கி வந்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலச் சூழலில் குறிப்பிட்ட அறிவுச் சட்டகம் கோட்பாடாக ஏற்கப்படும் அல்லது பயன்பாட்டில் இருக்கும். ஆனால் காலபோக்கில் இது விமர்சனங்களுக்குள்ளாகி அடுத்து புது சட்டகம் இடம்பெறும். அது போலத்தான் பின் நவீனத்துவமும் என்று கொள்வோமானாலும், இன்றையச் சூழலில் இச்சிந்தனைப் போக்கினால் இனவரைவியல் எழுத்துக்கள் உண்மையை நோக்கிய நகர்வில் மேலும் முன்னேறுவதற்கு வழி வகுத்தது எனலாம்.

## இனவரைவியலின் அண்மைக்கால வளர்ச்சிகள்

அண்மைக்காலங்களில் உற்பத்தி மற்றும் மேலாண்மைத்துறைகளில் இனவரைவியல் ஆய்வு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது, வடிவமைப்பு இனவரைவியல் (design ethnography) என்று வளர்ச்சி அடைந்திருக்கிறது. வடிவமைப்பு இனவரைவியல் அடிப்படையில் ஒரு ஆய்வு முறையாக களஆய்வில் இனவரைவியல் கருத்துக்கள், ஆய்வுமுறைகளை பயன்படுத்தி சமூகத்தின் இயல்பானச் சூழலில் மனித நடத்தைகள், தேவைகள் குறித்து வார்த்தைகளில் சொல்லியது, சொல்லாதது, உள்ளுணர்வில் இருப்பது இவற்றை அறிந்து ஆழமான, நுண்மையானப் புரிதலுடன் நன்கு பயனுறும் வகையில் பொருட்கள் (products), சேவைகள் (services), அமைப்புகள் (systems) வடிவைமைக்கப் பயன்படுத்தப்படுகிறது.

நவீன தகவல் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி அதன் விளைவாக கணினி, மெய்நிகருலகு, இணையதளங்கள், சமூக ஊடகங்கள் என நடப்புக்காலத்தில் மனித சமூகத்தினை புரட்டிப்

போட்டுக்கொண்டிருக்கிறது. மனிதர்கள் மெய்நிகருலகில் செலவிடும் நேரம் கூடிக்கொண்டே செல்கிறது, நிஜ உலகம் போலவே இங்கேயும் மெய்நிகர் சமூகங்களும், குழுக்களும் உருவாகின்றன, உயிர்ப்புடன் செயல்படுகின்றன. மெய்நிகர் இனவரைவியல் (virtual ethnography) மரபான இனவரைவியல் ஆய்வு முறைகளை பயன்படுத்தி மெய்நிகர் உலகின் சமூகங்கள், வெவ்வேறு வகையான தளங்களில், ஊடகங்களில் பங்கேற்கும் மனிதர்களுக்கிடையிலான தொடர்புகளை, உறவுகளை அவர்களின் நடத்தைகளை ஆய்வு செய்வது. இதில் மனிதர்களுக்கு இடையிலான உரையாடல்கள் ஒரு யதார்த்த உலகில் நிகழ்வது போல் நேருக்கு நேர் நடைபெறாது, மாறாக கணினி தொழில்நுட்பம் அமைத்துத்தரும் மெய்நிகர் மேடைகளில் நடைபெறும். இனவரைவியல் கட்டமைக்க தரவுகள் உரை, ஒளி - ஒலி ஊடகங்கள் என பல்வகை ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்படுகிறது.

இங்கே முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு தகவல், இந்த மெய்நிகருலகில் - ஆய்வாளர் பயணமின்றி ஆனால் தொலைவு கடந்து தன் இருப்பை உணர்கிறான். மெய்நிகருலகில் பங்கேற்போர் சிலவற்றைப் பகிர்வர், சிலவற்றைத் தவிர்ப்பர், சிலவற்றை இத்தளத்தில் பகிரவே உருவாக்குவர், சிலருக்கு உங்கள் தகவல் அறிய, கேட்டுப்பெற அனுமதி உண்டு சிலருக்கு அனுமதி மறுக்கப்படும். இந்தச் சூழலில் தான் இனவரைவியல் தகவல்களும் சேகரிக்கப்பட்ட வேண்டியுள்ளது. நிஜ உலகில் களத்தில் இனவிரைவியல் தகவல்கள் சேகரிக்கும்போதும் இது போன்ற இடையூருகள் இருக்கும் எனினும் நிஜ உலககின் ஆய்வுக்களத்தைவிட மெய்நிகருலகில் ஆய்வாளன் தகவலாளிகளுடன் உரையாடுவதற்கும், செயல்பாடுகளை கண்டுணர்ந்து தகவல்கள் சேகரிப்பதற்காக வாய்ப்புகள் சுருங்கி இருக்கும்.

புதிய வளர்ச்சியில் உருவான இந்த இரண்டு இனவரைவியல் ஆய்வு முறைகளுமே பொதுவாக பல்துறை ஒருங்கிணைவு ஆய்வு (Inter disciplinary approach) அணுகுமுறையில் பல்துறை அறிஞர்களின் கூட்டு முயற்சியாக களத்தில் பயன்படுத்தப்படுகிறதது.

## இனவரைவியலின் தேவையும் பயனும்

சமூகங்கள், சமூகப்பண்பாடுகளுக்கிடையே பல வழிவகைகளில் மேன்மேலும் தொடர்புகள்(உண்மை மற்றும் மெய்நிகர்) பெருகி வரும், பல தளங்களில் தவிர்க்கவியலாது இணைந்து செயலாற்ற வேண்டியிருக்கும் இன்றைய உலகச் சூழலில் - இனவரைவியல் ஒரு குறிப்பிட்ட சமூகம், அதன் பண்பாட்டுக்கூறுகள் குறித்து ஆழமான புரிதல்கள் பெற உதவும். அச்சமூக மக்களின் நடத்தைகள் குறித்து ஒன்றிணைந்து உணரும் (empathy) வாய்ப்பினை உருவாக்கித் தரும். மேலும் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம், சகிப்புத்தன்மை, அச் சமூக மக்களுடன் எவ்வாறு ஒன்றிணைந்து பயணிப்பது போன்ற பண்புகளை சமூகங்களுக்கிடையே பேணி வளர்க்க உதவும். இவைகள் தவிர முக்கியமாக ஒருவர் குறிப்பிட்ட ஒரு சமூகம் அதன் அமைப்பு, நடைமுறைகள், மக்களின் நடத்தைகள் பற்றி போதிய சுய அனுபவமின்மையின் காரணமாகக் கொண்டிருக்குக்கும் சில தவறான அனுமானங்களைக் களைய உதவும். பண்பாட்டுப் பன்மையம் பதிவு செய்யப்படும், கட்டுரையின் துவக்கத்தில் கூறியது போல பண்பாட்டுப் பன்மையத்தினைக் காக்கும் உலகமாக உறுதிசெய்வதற்கு உதவும்.

## இறுதியுரை

இனவரைவியல் சமூக மானிடவியலின் முக்கிய கருத்தாக்கங்களில் ஒன்று. இனவரைவியல் ஆய்வு, இனவரைவியல் எழுதுவது பண்பாட்டு பன்மையத்தை புரிந்துகொள்வதற்கு, போற்றுவதற்கு, காப்பதற்கு ஒரு சிறந்த முறை. குறிப்பாக பண்பாட்டு பன்மையம் சமூகங்களின் பண்பாட்டுத் தனித்துவத்தை அறிந்துகொள்ள உதவும்.

இனவரைவியல் ஒரு சமூகத்தின் பண்பாடு குறித்த உண்மை சூழலுக்கு அருகில் கொண்டு செல்லும் சமூகப் பிரதி. இனவரைவியல் எழுதுவதற்கு மிக மிக முக்கியமானது, முறைப்படியான, தரமான களஆய்வு. பண்பாட்டின் அனைத்து கூறுகளையும் உள்ளடக்கி போதிய அளவிலான தரவுகளை சேகரிப்பது, சரிபார்ப்பது, பகுப்பாய்வு செய்து விளக்கவுரைகள் எழுதுவது. இது ஆய்வுக்களம் தேர்ந்த்தெடுப்பதில் தொடங்கி உரையாக்கம் என முடிவினை

அடையும் வரை வரை நிகழும் தீவிரச் செயல்பாடு.

நேரடிக் களஆய்வின் மூலம் உருவாகும் விரிவான விளக்கவுரை அந்தக் குறிப்பிட்ட சமூகத்தின் தனித்துவங்கள் பதிவுசெய்யப்படும். வெவ்வேறு சமூகங்களின் இனவரைவியல்களின் ஒப்பீட்டு ஆய்வு சமூகங்களுக்கிடையிலான பொதுமைகளைக் கண்டறிந்து வகைமைப்படுத்தவும் அடுத்த அளவில் கோட்பாட்டாக்கதிற்கான வாய்ப்புகளையும் உருவாக்கும்.

மாறிவரும் காலச்சூழலுக்கேற்ப இனவரைவியல் புதிய கருத்துக்களை உருவாக்கி அல்லது பிற அறிவுப்புலங்களிலிருந்து உள்வாங்கி, புதிய தளங்களில் ஊடுருவி, புதிய வடிவங்கள் ஆய்வுமுறைகள் என வளர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள இனவரைவியல் நூல்களை மதிப்பிடுகையில் தமிழ் ஆய்வாளர்கள் பயணப்பட வேண்டியது வெகுதூரம் எனத்தெரிகிறது, இது எண்ணிக்கையில் மட்டுமல்ல, தரத்தினையும் சேர்த்தே கூற வேண்டியுள்ளது. இனவரைவியல் என்கிற கருத்தாக்கம் பற்றிய தெளிவு, ஆழமான ஈடுபாடுடனான களஆய்வு, முழுமையான விவரிப்புகளுடனான உரையாக்கம் என இவைகளில் சீரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம். இம்முயற்சிகள் வரும் காலங்களில் தமிழ் பண்பாட்டுச் சூழலை புரிந்து கொள்வதற்கான கருத்தாக்கங்களையும், கோட்பாட்டையும் வளர்த்தெடுக்க வழி வகுக்கும்.

## References


- *ராசேந்திரன், மா 2014. மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள், அடையாளம், திருச்சி*
- Berger, P. 2012 'Theory and ethnography in the modern anthropology of India' in Journal of Human Ethnographic Theory 2 (2): 325 -57
- Foucault, M. 1980. Power/Knowledge: Selected interviews and other writings, Ed. Colin Gordon, Pantheon books, Newyork
- Geertz, C. 1973. Interpretation of Cultures, New York, Basic Books
- Ghurye, G. S. (1963). The Scheduled Tribes. Bombay: Popular Prakashan
- Malinowski, B. 1992. Argonauts of The Western Pacific: An Account of Native Enterprise and Adventure in the Archipelagoes of Melanesian New Quinea, London, Rutledge
- Rad cliff – Brown, A.R. 1931. The Social Organization of Australian Tribe, MacMillan & Co. Limited, Melbourne
- Tim Ingold. 2008. Anthropology is not Ethnography, Radcliffe – Brown Lecture in Social Anthropology
- Radcliff – Brown Lecture in Social Anthropology, Proceedings of the British Academy, 154, 69–92. The British Academy 2008. Accessed on 15 June 2025 https://www.thebritishacademy.ac.uk/documents/2051/pba154p069.pdf
- Tripura B (2023) Decolonizing Ethnography and Tribes in India: Toward an alternative methodology. Front.Polit.Sci. 5:1047276. Doi: 10.3389/fpos.2023.1047276

## இணைப்பு 1

மேலைநாட்டு மானிடவியலாளர்களின் தமிழ் சமூகங்கள் குறித்த இனவரைவியல் பங்களிப்புகள்

| | | |
|---|---|---|
| எரென்பில்ஸ்<br>U.R. Erhenfels | காடர் - பழங்குடிகள்<br>மேற்குத்தொடர்ச்சிமலை- இனவரைவியல்<br>Kadars of Westerghats – Ethnography | *1952* |
| டபிள்யு.ஹெச்.<br>ஆர். ரிவர்ஸ்<br>W.H.R. Rivers | தொதுவர்கள் – பழங்குடிகள் -<br>இனவரைவியல்<br>Todas of the Nilgiris – Ethnography | *1906* |
| பிரையன்<br>மோரிஸ்<br>Brian Moris | மலப்பண்டாரம் – பழங்குடிகள் -<br>இனவரைவியல்<br>Forest Traders: A Socio – Economic study of the Hill Pandaram | *1982* |
| கார்டினர்<br>Gardiner | பளியன் – பழங்குடிகள்<br>Paliyars | |
| ப்ரெண்டா இ.<br>எப். பெக்<br>Brenda EF Beck | கொங்கு பகுதி வேளாண் சமூகம் -<br>இனவரைவியல்<br>Peasant Society in Kongu | *1972* |
| அந்தோணி கூட்<br>Anthony GOOD | திராவிட உறவுவழிமுறை - இனவரைவியல்<br>Worship and the Ceremonial Economy of a Royal South Indian Temple | *2004* |
| பால் ஹாக்கிங்ஸ்<br>Pual Hockings | நீலகிரி படகர்கள் - இனவரைவியல்<br>Ancient Hindu Refugees | *1980* |
| கமில்<br>ஸ்வெலபில்<br>Kamil V Zvelebil | நீலகிரி இருளர்கள் - இனவரைவியல்<br>The Irulas of the Blue mountains | *1988* |
| லூயி டுமாண்ட்<br>Louis Dumont | பிறமலை கள்ளர் - இனவரைவியல்<br>Piramalai Kallar - A south Indian sub caste | *1986* |
| நுரிட் பர்ட்<br>டேவிட்<br>Nurit Bird David | கட்டுநாயக்கன் – நீலகிரி -<br>ஆய்வுக்கட்டுரைகள்<br>Kattunaiken (The Nigiris) | *1987* |
| அந்தோணி ஆர்.<br>வாக்கர்<br>Antony R.Walker | தென் இந்தியாவில் வசிக்கும் தொதுவர்கள்:<br>புதிய ஒரு பார்வை - இனவரைவியல்<br>The Toda of South India: A New Look | *1986* |

| | | |
|---|---|---|
| சி. ஜெ. புல்லர்<br>C.J.Fuller | இறைவியின் (தேவியின்) பணியாட்கள்: தென் இந்திய கோவில் ஒன்றின் அர்ச்சகர்கள் - இனவரைவியல்<br>Servants of the Goddess: The Priests of a Sounth Indian Temple | *1984* |
| உல்ரிக் டெம்மெர்<br>Ulric Demmor | நீலகிரி மலை ஜேனு குறும்பாஸ் - இனவரைவியல்<br>Jenukurumbas of the Nilgirs<br>Towards Another Reason | *2016* |
| மார்கரெட் ஜெனே ட்ராவிக்<br>Margaret Jane Trawick | தமிழ் குடும்ப பாசம் பற்றிய குறிப்புகள்<br>Notes on love in a Tamil family | *1990* |
| ரிச்சர்ட் உல்ப்<br>Richard Wolf | நீலகிரி கோத்தர்கள் – இனவரைவியல்<br>Black cow's foot print – Time, space and music in the lives of the Kotas of South India | *2006* |
| கிறிஸ்டெர் நோர்ஸ்ட்ரோம்<br>Christer Norstrom | பலியர் – பழனிமலை தொடர்ச்சி - இனவரைவியல்<br>They call for us: Strategies for Securing Autonomy Among the Paliyans, Huter – Gatherers of Palni Hills, South India | *2003* |
| கீர்த் தே நெவ்<br>Geert De Neve | நூற்பாலை தொழிலாளிகள் பவானி திருப்பூர் - இனவரைவியல்<br>The Everyday Politics of Labour: working lives in India's Informal Economy | *2005* |
| அயாகோ இவதானி<br>Ayako Iwatani | நரிக்குறவர் வாகரிஸ் - ஆய்வுக்கட்டுரைகள்<br>Narikurawars – Vagaris | *2009* |
| யுகோ நிஷிமுரா<br>Yuko Nishimura | நகரத்தார் வணிக சமூகம் - இனவரைவியல்<br>Nagarathar – Mercantile caste – Ethnography | *1998* |

## இணைப்பு 2

| | | |
|---|---|---|
| சி. மகேஸ்வரன் | பச்சைமலை மலையாளி பழங்குடியினரின் இனவரைவு | 2007 |
| நடைபார் | கல்வராயன் மலை பழங்குடிகளின் இனவரைவியல் | |
| அனந்தபுரம் கிருஷ்ணமூர்த்தி | கல்வராயன் மலையாளிகள் | 1992 |
| கோ. சீனிவாச வர்மா | நரிக்குறவ பழங்குடி மக்கள் | 1978 |
| கரசூர் பத்மாவதி | நரிக்குறவர் இனவரைவியல் | 2004 |
| ஆர்.கோவிந்தராஜன் | ஜவ்வாது மலையில் தொல் தமிழ் பண்பாடு | 2023 |
| மணி கோ. பன்னீர் செல்வம் | தொன்முதுகுறவர் | 2019 |
| செங்கோ | இருளர் இனவரைவியல் | - |
| ஆர். பெரியாழ்வார் | இருளர் வாழ்வியல் | 1976 |
| ஊராளன் சே.ச.(பிலிப்குமார்) | ஊராளி பழங்குடியினர் வாழ்வியல் | 2021 |
| அ.பகத்சிங் | சோளகர் - வாழ்வும் பண்பாடும் | 2014 |
| க.முத்து இலக்குமி | முதுவர் வாழ்வியல் | 2018 |
| த.விஜயலட்சுமி | இருளர் பழங்குடிகளின் மருத்துவம் | 2014 |
| விஜயலட்சுமி | இரவாளர் பழங்குடிகள் | - |
| மு.அன்னகாமு | மேல் பழனி மலைப் பழங்குடிகள் | - |
| சுந்தர வந்தியத்தேவன் | பிறமலைக் கள்ளர்:வாழ்வும் வரலாறும் | 2011 |

# வரலாறு, தொல்லியல் ஆய்வுகளில் இனவரைவியல், இனத்தொல்லியலின் பங்கு

வீ.செல்வகுமார்*

*கட்டுரைச்சுருக்கம்:* *தொல்லியல் பழங்கால மக்களின் வரலாற்றையும், வாழ்வியலையும் பொருள் பண்பாட்டின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து ஆராய்கிறது. ஆனால், பொருள் பண்பாட்டை தனித்து ஆராய்வதன் வழியாக மட்டுமே பழங்கால வரலாற்றையும், வாழ்வியலையும் முழுவதுமாக மீளுருவாக்க முடியாது. வேறு பல சான்றுகளும், அணுகுமுறைகளும், புரிதல்களும் அவசியம். எனவே, மானுடவியல், இனவரைவியல், சமகாலப் பண்பாட்டு, கல்வெட்டியல், நாட்டுப்புறவியல், இலக்கியம், வரலாறு போன்ற புலங்களின் சான்றுகள் வழியாகவும், செய்முறைத் தொல்லியல், நிலத்தியல் அணுமுறைகளின் வாயிலாக மட்டுமே பழங்காலப் பண்பாடுகளை,வரலாறுகள, போக்குகளைப் புரிந்துகொள்ள இயலும் என்பதை இக்கட்டுரை சில எடுத்துக்காட்டுகள் வழியாக விளக்கமுயல்கிறது.*

## தொடக்கவுரை

*பொதுவாக வரலாறு, பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகளைப் பல வகையான சான்றுகளை உற்று நோக்கியதன் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து விளக்குகிறது. ஆனால், பல நிலைகளில் அது சார்புத் தன்மையுடன் எழுதப்படுகிறது. தொல்லியல், பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகளை, பொதுவாக, அவர்கள் விட்டுச்சென்ற தொல்பொருள்களின் அடைப்படையில் மீளுருவாக்கம் செய்கிறது. இதிலும் சார்புத்தன்மை உள்ளது. குறுகிய பொருளில் புரிந்துகொள்ளப்படும் தொல்லியல் பாடப்பிரிவு, பொருள் பண்பாடுகளை மட்டுமே ஆராயவிழைகிறது. சில சூழல்களில் வரலாறு, தொல்லியல் ஆகிய பாடங்கள், இலக்கியம், மானுடவியல், நாட்டுப்புறவியல், தமிழியல் போன்ற பாடங்களைப் பெரிதும் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை. நவீன காலப்*

* *கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்* 613010*:* selvakumarodi@gmail.com

பாடத்திட்டங்களின் கட்டமைப்பு, பல புலங்களைத் தனித்த, முழுமுதல் புலங்களாக உருவாக்கிவிட்டது. இதன் காரணமாக அவை மானிடவியலையும், மனிதப் பண்பாட்டையும் முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை. எனவே, தற்காலத்தில் துறையிடை ஆய்வுகள் வலுப்பெற்றுவருகின்றன.

சில குறுகிய வரையரையில், வரலாறு எழுதப்பட்ட சான்றுகளை மட்டுமே ஆய்வதாகக் கருதப்படுகிறது. வரலாற்றைப் பரந்துபட்ட பொருளில் அணுகவேண்டும். இவ்வாறாகச் சான்றுகளின் அடிப்படையில் உருவாகிய புலங்களான தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் போன்றவை சான்றுகளின் ஆய்விலேயே ஒடுங்கிவிட்டன. அவை, முழுமையான பார்வையில் மனிதர்களையும், பண்பாட்டையும் வரலாற்றையும் ஆய்வதில்லை. இத்தகைய சூழலில் ஆய்வாளர்கள் தொல்லியல் பொருள்-பண்பாட்டு ஆய்வின் சிக்கலை உணர்ந்து மானிடவியல், இனவரைவியல் உள்ளிட்ட புலங்களைத் தொல்லியல் விளக்கத்திற்காக நோக்க முற்பட்டனர். தொல்லியலில் 1960களில் லூயி பின்போர்ட் உள்ளிட்டவர்களின் முயற்சியில் உருவான புதிய தொல்லியல் மானிடவியல் அணுகுமுறைக்குச் சிறப்பிடம் அளிக்கிறது (Binford 1983).

மேலும் கல்விநிலை சார்ந்த வரலாற்று வரைவு, பொதுமக்களுக்குப் புரியும் நல்ல தெளிவான எழுத்து நடைமுறையைக் கையாளுவதில்லை. மேலும், சமூக ஊடகங்களில் வரலாற்றுத் திரிபுகளும் அதிகரித்துவிட்டன. இதன் காரணமாக தெளிவான எழுத்து நடைமுறை உள்ள வெளியீடுகள் வரலாறு, பண்பாட்டுத் துறைகளில் அவசியமாகின்றன.

மானிடவியல் மனிதர்களையும், பழங்காலப் பண்பாடுகளையும், சமகாலப் பண்பாடுகளையும் ஆராய்கின்றது (பக்தவச்சலபாரதி 2011 மகேசுவரன் 2023). பிரித்தானிய மரபில், தொல்லியலும், மானிடவியலும் வெவ்வேறு புலங்களாக உள்ளன. அமெரிக்க மரபில் தொல்லியல் மானிடவியலின் பகுதியாகவே பார்க்கப்படுகிறது. பழங்காலப்பண்பாடுகளைமுழுமையாகஅறிய, தொல்பொருள்களை ஆய்ந்தால் மட்டும் போதாது, வரலாற்றுச் சான்றுகள், இனவரைவியல்

சான்றுகளை ஆராய்ந்து பண்பாட்டின் மையப் பொருண்மையைப் புரிந்துகொண்டால்தான் பண்பாட்டைப் பற்றிய முழுமையான புரிதல் ஏற்பட இயலும் என்பதை 20ஆம் நூற்றாண்டில் தொல்லியல் ஆய்வாளர்கள் உணர்ந்தனர். இருப்பினும் பல நிலைகளில், இன்றும் தொல்லியல் ஆய்வுகள் தனித்த நிலையிலேயே நடைபெறுகின்றன.

## தொல்லியல் மானிடவரலாறு

சான்றுகளின் அடிப்படையில் உருவக்கப்பட்ட இயல்களில் பல சிக்கல்கள் உள்ளன. எனவே மனித வரலாற்றை முழுமையாக ஆராய நாம் தொல்லியல், மானிடவியல், நாட்டுப்புறவியல், வரலாறு ஆகியவற்றின் அணுகுமுறைகளைப் புரிந்துகொள்ளவேண்டும். “தொல்லியல் மானிடவியல் வரலாறு” Archaeoanthropohistory என்ற அணுகுமுறை பழங்காலத்தை ஆராயப்பயன்படும் ஓர் அணுகுமுறை ஆகும். இதில் தொல்லியல், மானிடவியல், வரலாறு என அனைத்துப் புலங்களின் அணுகுமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. புலங்களைக் கடந்த துறையிடை ஆய்வுகள் இக்கால கட்டத்தில் மிகவும் அவசியமாகும். தமிழியல், இந்தியவியல் போன்றவை இக் குறையை ஓரளவு போக்கினாலும், இப்புலங்களும் பல அறிவுசார் சிக்கல்களில் உள்ளன.

## இனவரைவியல்

இனவரைவியல் சமகால மக்களின் வாழ்க்கை முறைகளை விவரிக்கும் ஒரு மானிடவியல் புலமாகும் (Evans-Pritchard, *1940;* Binford *1978, 1983;* Auyero *2006*, Gobo *2008;* Hamilakis, Yannis and Aris Anagnostopoulos *2009;* Hodder *1986, 2009;* Sangasubana *2009;* Adams *2012;* Eriksson and Kovalainen *2015;* Baral et al. *2016;* O’Reilly *2019;* Rhodes and Corbett *2020;* Mathur, Nita *2022;* Whitehead *2025*). இப்பாடப்பிரிவு காலனியாதிக்கக் காலத்தில் உருவாகத்தொடங்கியது. மானிடவியலும் காலனியாதிக்கக் காலத்தில் உருவான புலமாகும், இன்று இப்புலங்கள் காலனியாதிக்க மோகத்தையும், தாக்கத்தையும் தவிர்க்க முயற்சித்துவருகின்றன.

இனவரைவியல், பண்பாடுகளைப் புரிந்துகொள்ள மிகவும்

உதவியாக அமையும் புலமாகும். சமகால மக்களின் வாழ்க்கை முறைகளை ஆராயும் போதுதான் அவை பண்பாடுகளின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. பொதுவாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் பொருள்களை வைத்துக்கொண்டும், அவற்றின் கூறுகளைக்கொண்டும் புற உதவியின்றி வரலாற்றைக் கட்டமைக்க முயற்சி செய்கிறார்கள். அவர்கள் பொருள்களை வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி, பகுப்பாய்வு செய்யும்போது, அப்பொருள்கள் பயன்படுத்தப்பட்ட சூழலைப் புரிந்துகொள்ள சரியான சான்றுகள் இல்லாமையால், பல ஆய்வுகளும் குறையுள்ள விவரிப்பு முறை ஆய்வாகவே விளங்குகின்றன. அவை விளக்கமுறை ஆய்வாக மாறுவது இல்லை. முழுமையான விவரிப்பு முறையில் தவறொன்றும் இல்லை. அதுவும் தேவையானதே. இருப்பினும் விளக்கமுறை ஆய்வுகள் மிகவும் அவசியமானவையாகும். இனவரைவியல் என்ற புலம் பழங்காலத்திலிருந்தே செயல்பட்டுவருகிறது. தமிழ் இலக்கியங்களில் பல இனவரைவியல் தொடர்பான சான்றுகள் உள்ளன. நவீன காலத்தில் இனவரைவியல் என்பது “பழங்குடிகளின்” ஆய்வு மட்டுமே எனக் காலனியாதிக்கப் பார்வையில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. எந்த ஒரு சமகாலக் குழுவையும் இனவரைவியல் அணுகுமுறையில் ஆய்வு செய்யலாம். ஓர் இடத்தில் தொல்லியல் ஆய்வு செய்யும் அறிஞர், பணியாளார், ஆர்வலர் குழுவின் தொல்லியல் ஆய்வுசாரா, சமகால நடத்தைகளையும், செயல்பாடுகளையும் இனவரைவியல் அணுகுமுறையில் ஆய்வுசெய்யலாம். தொல்லியல் ஆய்வாளர்களுக்கு இனவரைவியல் ஒரு பட்டறிவு சார் முறையாக (heuristic method) விளங்குகிறது. பொதுவாக தொல்லியல் ஆய்வுகள் சில நேரங்களில் விரிவான இனவரைவியலைச் சார்ந்தும், பல நேரங்களில் இனவரைவியலில் கிடைத்த ஒரு சில பண்பாட்டுக்கூறுகளைத் தங்களது தொல்பொருள் விளக்கத்திற்கும், புரிதலுக்கும் பயன்படுத்துகின்றன.

### இலக்கிய இனவரைவியல்

இலக்கிய, வரலாற்று, புனைவு இனவரைவியல் அணுகுமுறைகள் செவ்வியல் இனவரைவியலில் (Classical ethnography) அடங்கா. இருப்பினும் அவற்றிலும் இனவரைவியல் கூறுகள் உள்ளன.

இலக்கியங்களில் காணப்படும் விவரங்களும் இனவரைவியலில் அடங்கும். இருப்பினும் இவற்றில் புனைவுகளும் உள்ளடங்கும். சில சூழல்களில் இவை துல்லியமாகவும், பல சூழல்களில் இவை மிகைப்படுத்தப்பட்டும் இருக்கலாம். இவற்றைப் புனைவு இனவரைவியல் என அழைக்கலாம். இராமாயண, மகாபாரதக் கதைகளிலும் இத்தகைய இனவரைவியல் கூறுகள் காணப்படுகின்றன.

**சங்க இலக்கியம்**

சங்க இலக்கியத்தில் உள்ள பல பண்பாடுகளின் விவரக் கூறுகளும் இலக்கிய இனவரைவியலில் அடங்கும். பட்டினப்பாலையில் மீனவர் குடியிருப்பும் காவிரிப்பூம்பட்டினத்தின் நகர அமைப்பும் மிக அழகாக விளக்கப்படுகின்றன.

*"பறழ்ப் பன்றி, பல் கோழி,*
*உறைக் கிணற்றுப் புறச்சேரி,*
*மேழகத் தகரொடு சிவல் விளையாட*
*கிடுகு நிரைத்து, எஃகு ஊன்றி,*
*நடுகல்லின் அரண் போல,*
*நெடும் தூண்டிலில் காழ்*
*சேர்த்திய குறுங்கூரைக் குடி நாப்பண்,*
*நிலவு அடைந்த இருள் போல,*
*வலை உணங்கும் மணல் முன்றில் (பட்டினப்பாலை 75-83)*

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரத்திலும் இனவரைவியல் நாட்டுப்புறவியல் என்று கருதக்கூடிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றை புனைவு வகை எனக் கருதலாம். இருப்பினும் அவை நாட்டுப்புற வழக்காற்றைப் பிரதிபலிப்பவை எனலாம்.

*"வழங்குவில் தடக்கை மறக்குடித் தாயத்துப்*
*பழங்கட னுற்ற முழங்குவாய்ச் சாலினி*
*தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்*

*கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப*
*இடுமுள் வேலி எயினர்கூட் டுண்ணும்*
*நடுவூர் மன்றத் தடி பெயர்த் தாடிக்*
*கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன*
*வல்வில் எயினர் மன்றுபாழ் பட்டன*
*மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவாது*
*அறக்குடி போலவிந் தடங்கினர் எயினரும்*
*கலையமர் செல்வி கடனுணின் அல்லது*
*சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்*
*மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்*
*கட்டுண் மாக்கள் கடந்தரும் எனவாங்கு (சிலப்பதிகாரம், வேட்டுவ வரி: 6-14)*

**பெரியபுராணம்**

சேக்கிழார் பெரியபுராணத்தில் வரக்கூடிய நந்தனார் கதையையும் (திருநாளைப்போவார்) ஓர் இலக்கிய இனவரைவியல் வகை என்று கூறலாம். இதில் நந்தனாரின் புலைக்குடியிருப்பு விவரிக்கப்படுகிறது.

திருநாளைப் போவார் நாயனார் (நந்தனார்) புராணம்

*"பகர்ந்துலகு சீர் போற்றும்*
*பழைய வளம் பதியாகும்*
*திகழ்ந்த புனற் கொள்ளிடம் பொன்*
*செழுமணிகள் திரைக் கரத்தால்*
*முகந்து தர இரு மருங்கும்*
*முளரி மலர்க் கையேற்கும்*
*அகல் பணை நீர் நன்னாட்டு*
*மேற்காநாட்டு ஆதனூர். 1 ...*
*வயல் வளமும் செயல் படு*
*பைந் துடவையிடை வருவளமும்*
*வியலிடம் எங்கணும் நிறைய*
*மிக்க பெரும் திருவினவாம்*
*புயலடையும் மாடங்கள் பொலிவு*
*எய்த மலியுடைத்தாய்*
*அயலிடை வேறு அடி நெருங்கக்*

*குடி நெருங்கி உளது அவ்வூர். 5*
*மற்றவ்வூர் புறம் பணையின் வயல்*
*மருங்கு பெரும் குலையில்*
*சுற்றம் விரும்பிய கிழமைத் தொழில்*
*உழவர் கிளை துவன்றிப்*
*பற்றிய பைங் கொடிச் சுரை மேல்*
*படர்ந்த பழம் கூரையுடைப்*
*புற்குரம்பைச் சிற்றில் பல*
*நிறைந்து உளதோர் புலைப்பாடி. 6...பெரியபுராணம்*

## வரலாற்று இனவரைவியல்

வரலாற்றுக்கால இலக்கியங்களும் இனவரைவியல் வகையில் அடங்கும். பெரிப்ளஸ், அல்பெருனி, இபின் பத்தூதா, மார்க்கோபோலோ போன்றவர்களின் குறிப்புகளை வரலாற்று இனவரைவியலில் அடக்கலாம். இவற்றில் சில விளக்கங்களை வரலாற்று ஆசிரியர்கள் மிகைப்படுத்தல், கற்பனை, தவறு என்றும் பதிவுசெய்துள்ளனர் இருப்பினும் இவற்றில் பல உண்மைகள் உள்ளன. இவற்றில் சில தகவல்கள் கூறியவர்களின் தவறு, பதிவுசெய்தவர் புரிந்துகொண்டதில் உள்ள தவறு ஆகியவை பிழையான தகவல்கள் பதிவுசெய்யப்படக் காரணமாக இருந்திருக்கலாம். மேலும், சமகால அரசியலுக்கும், சூழலுக்கும் பொருந்தாத கருத்துக்கள் தவறான பதிவுகள் எனவும் வாதிடப்படுகின்றன.

## இனத்தொல்லியல் (Ethnoarchaeology)

பண்பாடுகளைப் புரிந்துகொள்ள பொருள் பண்பாட்டுச் சூழலை அறிய தொல்லியல் ஆய்வாளர்கள் இனத்தொல்லியல் என்ற புலத்தை உருவாக்கியுள்ளனர். தொல்லியல் சான்றுகளைப் புரிந்துகொள்ள செய்யப்படும் ஆய்வே இனத் தொல்லியல் ஆகும். லூயி பின்போர்ட் நுனாமுயிட் எஸ்கிமோக்களை இம்முறையில் ஆய்வு செய்துள்ளார் (Binford 1978, 1983). இயான் ஹாடர் ஆப்பிரிக்கப் பழங்குடிகளை ஆய்வுசெய்துள்ளனர் (Hodder, 1986 2009).

**தொல்லியலுக்கு இனவரைவியலின் பங்கு: சில வகை ஆய்வுகள்**
**I. தென்னிந்தியப் புதியகற்காலச் சாம்பல் மேடுகளும் ஆப்பிரிக்கப் பழங்குடிகளும்.**

*தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கடல்சார்வரலாறு மற்றும் தொல்லியல் துறையில் 2022-24ஆம் ஆண்டுகளில் முதுகலை பயின்ற மாணவர்களுடன் பழனிப் பகுதியில் தொல்லியல் களஆய்வில் ஈடுபட்டிருந்தோம். நெய்க்காரப்பட்டியில் சாயுங்காலத்தில் ஒரு வீட்டில் பசு மாட்டின் கால்களில் பூச்சி மருந்துப் பொடியை ஒரு பெரியவர் தடவிக்கொண்டிருந்தார். எனக்கு இது அதிசயமாக இருந்தது. நான் அவரிடம். ''ஏன் பூச்சிமருந்தைத் தடவுகிறீர்கள்?'' என்று கேட்டபோது அவர், ''மாடுகளுக்கு சாயுங்காலத்தில் கொசுக்கடி அதிகமாக இருக்கும். எனவே இதிலிருந்து அவற்றைக் காப்பதற்கு இது அவசியம்'' என்று கூறினார். இது எனக்கு ஒரு தொல்லியல் தொடர்பான ஒரு முக்கியமான இனவரைவியல் நடத்தைக்கூறாகப் பயன்பட்டது. பொதுவாக, புதிய கற்கால மக்களை ஆய்வு செய்யும் தொல்லியல் ஆய்வாளர்கள் மேய்ச்சல் சமூகங்களை ஆய்வுக்கு உட்படுத்துவர். மேய்ச்சல் சமூகங்களைப் புரிந்துகொள்ளாமல் புதிய கற்காலத் தொல்லியல் இடங்களைப் புரிந்துகொள்ளமுடியாது. மாடுகள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றன? மேய்க்கப்படுகின்றன? அவற்றின் நடத்தைகள் என்ன? என்பன உள்ளிட்ட பல தகவல்கள் தொல்லியல் ஆய்வுக்கு உதவியாக இருக்கும். தென்னிந்தியப் புதிய கற்கால இடங்களில் பெரிய சாம்பல் மேடுகளும், அல்லது சிறிய அளவிலான சாம்பல் படிவுகளும் காணப்படுகின்றன. இவை பொ.ஆ.மு 3300 முதல் பொ.ஆ.மு. 1200 வரையான காலகட்டத்தைச் சேர்ந்தவை (*Paddayya *1973, 1993*a, *1993*b, *1995, 1998, 2019;* Narasimhaiah *1980;* Fuller et al. *2007;* Johansen *2004;* Morrison et al. *2015;* Johansen and Bauer *2023, 2024;* Selvakumar et al. *2021, 2024;* Paranthaman and Venkataguru Prassana *2025). தென்னிந்தியப் புதிய கற்காலச் சாம்பல் மேடுகள் ஏன் உருவாயின? என்பதற்கு அறிஞர்களால் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்கவும், சடங்குகளுக்காகவும் பசுமாட்டுச் சாணம் எரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும் எனக்கூறப்பட்டுள்ளது.*

## நெய்க்காரப்பட்டியில் கால்நடைகளின் உடல் மீது மருந்து தடவுதல்

நெய்க்காரப்பட்டியில் நாங்கள் கண்ட பெரியவர், “மாடுகளைக் கொசுக்கடியில் இருந்து பாதுகாக்க முன்பு சாம்பல் தடவும் வழக்கம் இருந்தது” என்று கூறினார். எனவே மாடுகளின் நலனுக்காகவும் அவற்றைப் பூச்சிக்கடியிலிருந்து காக்கவும் மாட்டுச் சாணத்தைப் புதிய கற்கால மக்கள் எரித்திருக்கவேண்டும். குறிப்பாக இயற்கையான காட்டில் வாழ்ந்த மாடுகள் சாணத்தை அங்கங்கே விட்டுச்செல்லும். அதனால், அவை கால்நடைகளை அதிகம் பாதிக்காது. ஆனால் மனிதர்கள் அவற்றைப் பழக்கப்படுத்திப் பட்டியில் ஓர் இடத்தில் அடைக்கும்போது ஒரு சிக்கல் ஏற்படுகிறது. அதாவது மாடுகள் அடைக்கப்பட்டு இருக்கும் இடத்தில் உள்ள சாணத்தை அடிக்கடி அள்ளி, சுத்தம் செய்வது அவசியமாகிறது. இல்லையெனில் கொசுத்தொல்லை அதிகரிக்கிறது. எனவே மேற்கண்ட இனவரைவியல் தகவலிலிருந்து, புதியகற்கால மக்கள் பசுமாட்டுச் சாணத்தை சுத்தத்திற்காகவும், கொசுக்கடியிலிருந்து மாடுகளையும் தங்களையும் பாதுகாக்கவும் எரித்தார்கள் எனக் கருதலாம். இவ்வாறாக எரிக்கப்பட்டதன் விளைவாக, பெரிய சாம்பல் மேடாகவும், சாம்பல் படிந்த இடங்களாகவும் தென்னிந்தியப் புதியகற்கால இடங்கள் காணப்படுகின்றன என்ற முடிவுக்கு வரலாம். இதற்கான மேலும் ஒரு முக்கியமான இனவரைவியல் சான்று ஆப்பிரிக்காவில் நமக்குக் கிடைக்கிறது.

## ஆப்பிரிக்கவின் முண்டாரி பழங்குடிகள்

ஆப்பிரிக்காவில் பல மேய்ச்சல் சமூகங்கள் உள்ளன. இவர்களில் முண்டாரி, மாசாய் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். முண்டாரி நைல் பள்ளத்தாக்கில் உள்ள மாடு வளர்க்கும் வேளாண்மை செய்யும் குடிகளாவர். இவர்கள் நீலோட்டிக் குடிகள் எனப்படுகின்றனர். இவர்கள் கிறித்துவ, பழமையான வழிபாடுகளைக் கொண்டவர்கள். தங்களது கால்நடைகளைப் பாதுகாக்க இயந்திரத் துப்பாக்கிகளைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் அங்கோல் வட்டுசி என்ற கால்நடைகளைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் கால்நடைத் தொழுவங்களில் தினமும் சாணத்தை அள்ளி அதை எரித்து

அச்சாம்பலை மாடுகளின் மீது தேய்த்து கொசுக்களை விரட்டப் பயன்படுத்துகின்றனர். அதைப் பற்பசையாகவும், உடலில் பூசும் பொடியாகப் (பூதரமாவு) பயன்படுத்துகின்றனர் (Feron and Tasnier 2021; Belinda 2024). முண்டாரி பழங்குடிகள் பசுக்களின் சாணத்தை எரித்து அந்தச் சாம்பலைப் பலவிதமாகப் பயன்படுத்துகின்றனர். அவற்றைத் தங்களது உடலிலும் பூசுகின்றனர். அவர்கள் மாடுகளின் மீதும் சாம்பலைப் பூசுகின்றனர். சாணத்தை எரிப்பதன் மூலமாக மாடுகளைக் கடிக்கும் கொசுவையும் விரட்டுகின்றனர். இவ்வாறாக முண்டாரி பழங்குடிகளின் மாட்டுச் சாணத்தை எரிக்கும் முறையும், மாடுகள் தங்கள் உடல்களின் மீது சாம்பலைத் தடவும் முறையும் தென்னிந்தியப் புதியகற்கால மக்கள் ஏன் சாம்பலை எரித்து மேடுகளாக ஆக்கினார்கள் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. மேலும், இவர்கள் மாடுகளின் மூத்திரத்தை கைகள், முகம், உடல், பல் ஆகிய பாகங்களைக் கழுவவும் தலையிலும் தேய்ப்பார்கள். மாட்டு மூத்திரத்தையும், சாம்பலையும் மாடுகளின் கொம்புகளில் தேய்க்கிறார்கள். மாட்டு மூத்திரத்தையும் குடிக்கிறார்கள். மாட்டு மூத்திரத்தை மருந்தாகக் குடிக்கும் வழக்கம் இந்தியாவிலும் உள்ளது. மாட்டுச் சாணத்தை கிருமி நாசினியாக வீட்டில் மெழுகும் வழக்கம் இன்றும் இந்தியாவில் உள்ளது. இது பஞ்சகாவ்யம் எனப்படும் பசுவின் சாணம், சிறுநீர், பால், தயிர், நெய் கொண்டு உருவக்கப்படும் பூசைப் பொருளிலும் பயன்படுத்தப்பட்டது. இது பல கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. பசு மூத்திரம் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது (Randhawa and Sharma 2015).

## 2. சங்க இலக்கியமும், நடுகற்களும், சமகால, ஆப்பிரிக்க மாடுபிடிச் சண்டைகளும்

பொதுவாக இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளைப் புரிந்துகொள்ள இனவரைவியல் சான்றுகள் உதவுகின்றன. சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் மகாபாரதத்திலும் மாடுபிடிச்சண்டைகள் பேசப்படுகின்றன. தமிழ் நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான நடுகற்கள் மாடுபிடிச் சண்டை இடைக்காலத்திலும், அரசுருவாக்கத்திற்குப் பின்னும் தொடர்ந்து நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றன (பூங்குன்றன் 2023). குறிப்பாகத் திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள செங்கம் பகுதிகளில் இவை அதிகமாகக் கிடைக்கின்றன (Nagaswamy

1968; நாகசாமி 1972; Rajan 2000; கார்த்திகேயன் 2017; பூங்குன்றன் 2023)

*வீரர்களுக்கு நடுகல் எடுத்த மரபைப்*
*புறநானூற்றின் 260 ஆவது பாடல்,*
*"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி*
*மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு*
*அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து*
*இனி நட்டனரே கல்லும் கன்றொடு*
*கறவை தந்து பகைவ ரோட்டிய*
*நெடுந்தகை கழிந்தமை அறியாது*
*இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே."* என்று பேசுகிறது.

இது ஓர் இனவரைவியல் விளக்கம் எனக் கருதலாம். இதைக் கற்பனை அல்லது புனைவு எனக் கருத இயலாது. இவ்வழக்கம் நடுகற்கள், நடுகற்கல்வெட்டுகளால் உறுதிப்படுத்தப்படுகின்றன ஆப்பிரிக்காவில் இன்றும் இச்சண்டைகள் நடைபெறுகின்றன. மழைக்காலத்தில் அதிகமாக இன்றும் கால்நடைச் சண்டைகள் நடைபெற்றுவருகின்றன. இவற்றைச் சட்டம் ஒழுங்குச் சிக்கலாகப் பார்க்கப்படும் நிலையில், சமகால அரசியலும் கலந்து இருப்பதைக் காணலாம். ஆப்பிரிக்காவில் நடக்கும் தற்கால மாடுபிடிச் சண்டைகள், இயந்திரத் துப்பாக்கிகளின் பயன்பாடு காரணமாக மிகவும் அதிக உயிர்ச்சேதம் விளைவிப்பதாகக் கருதப்படுகிறது. சங்க காலச் சமூகத்தைப் புரிந்துகொள்ள இத்தகைய இனவரையில் அணுகுமுறை பயனுள்ளதாக உள்ளது. குறிப்பாக, சங்க காலத்தில் நடைபெற்ற வெட்சி, கரந்தைப் போர்களைப் புரிந்துகொள்ள இவை உதவுகின்றன. கால்நடைகளைத் திருடும் வழக்கம் 20ஆம் நூற்றாண்டிலும் இருந்தது தஞ்சாவூர் பகுதிகளில் மாடு களவு செய்து அதற்கு பணம் கோரும் வழக்கம் இருந்துள்ளது.

## ஆப்பிரிக்க மாடுபிடிச் சண்டைகள்

மிகவும் மோசமான மாடுபிடி சண்டைகள் இன்றும் ஆப்பிரிக்கவிலும் குறிப்பாகச் சூடானில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும் (Mkutu 2005; Witsenburg and Roba 2009; King 2017; Wild et al. 2018). கிழக்கு ஆப்பிரிக்காவில் நூயர், தின்கா

முர்லே ஆகியோர் மாடுபிடிப் போரில் (சண்டையில்) ஈடுவதாகக் கூறப்படுகிறது. வடக்கு கென்யாவில் வறட்சியின் காரணமாக இத்தகைய மாடு திருடுதல் நடைபெறுகிறது எனக் கருதப்படுகிறது. மேலும், மழைக்காலங்களில் இத்தகைய மாடு திருடும் நிகழ்வுகள் அதிகமாக நடைபெறுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும், இதை ஒரு ஒழுக்கற்ற நிலை என்பதைவிட ஒரு சமூக வழக்கமாகப் பார்க்கலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர் (Witsenburg and Roba 2009; King 2017; Wild et al. 2018). "நுயர் மக்கள் மாடுகள் மக்களை அழிப்பதாகக்கூறுகிறார்கள். ஏனெனில் பசுவிற்காக இறந்தவர் பிற காரணங்களுக்காக இறந்தவர்களை விட அதிகம்" என்று இவான்ஸ் பிர்ட்ஸ்சர்டு பதிவு செய்கிறார் (Evans-Pritchard 1940).

மேற்கண்ட மாடுகளைக் களவாடும் வழக்கம் சங்க காலத்திலும், பல்லவர், சோழர் காலத்திலும் இருந்ததை முன்னர் கண்டோம். மாடு திருடுதலை நவீன காலத்தில் களவு என்று கருதினாலும், சங்க காலத்தில் அது ஒரு வீரச்செயலாகப் பார்க்கப்பட்டுள்ளது. சங்கம் மருவியகாலகட்டத்தில்சமண, பௌத்த, பிறசமயக்கருத்தாக்கங்களின் தாக்கத்தினால் நீதி நூல்கள் உருவானமை குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் போரில் எதிரிகளின் பொருள்களையும், பெண்களையும் வலுக்கட்டாயமாக எடுத்துச்செல்வது இடைக்காலத்திலும் வழக்கமாக இருந்துள்ளது. இத்தகைய ஒரு காலத்தில்தான் நீதி, அறம் ஆகியவற்றை நிலைநாட்டும் நூல்கள் சங்கம் மருவிய காலத்தில் கிடைக்கின்றன. இடைக்காலத்தில் கைப்பிழையாகப் பிறரைக் கொன்றவர்களுக்குக் கோயிலில் விளக்கெரித்தல் தண்டனையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இடைக்காலத்தைய பார்வைகள் அக்காலத்திற்கே உரியனவாகும்.

### 3. வணிகக் குழுக்களும் சண்டைகளும்

வணிகர்கள் குழுவாகச் செயல்பட்டு வந்துள்ளனர். அவர்கள் தனிப்படையையும் வைத்திருந்துள்ளனர். எறிவீரப்பட்டினம், ஆசிரியப்பட்டினம் போன்ற பாதுகாக்கப்பட்ட மையங்களையும் உருவாக்கியுள்ளனர். தங்களுக்கு இடர் ஏற்படுத்தியவர்களைக் கொன்றுள்ளனர். இதில் திண்டுக்கல் மாவட்டம் சமுத்திராபட்டியில் கிடைக்கும் கல்வெட்டு குறிப்பிடத்தக்கதாகும் (வேதாசலம்,

இராசகோபால், சாந்தலிங்கம், போசு 1992). இதில் வணிகர்களைக் கொன்றவர்களுக்குப் பரிசளித்து எறிவீரதளத்தை உருவாக்கியுள்ளனர்.

எனவே, பூசல், சச்சரவில் சிலர் கொல்லப்படுவதும் வழக்கமாக இருந்துள்ளது. தண்ணீர் பாய்ச்சுதல், களவு போன்ற பல காரணங்களுக்காகச் சண்டைகள் ஏற்பட்டுள்ளன.

### 4. ஊர்ப்பூசல்கள்

பழங்காலத்தில் பல ஊர்களில் பூசல்கள் நடந்துள்ளன. ஊர்ப்பூசல்கள் இன்றும் நடைபெறுகிறது. சில ஊர்களில் பூசலில் தொடர்பு இல்லாதவர்கள், சமாதானம் செய்யும் போதும் கொல்லப்படுவதுண்டு. இதுபோன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் பல பூசல்கள் நடைபெற்ற நிகழ்வுகளும் உண்டு. ஊரில் உள்ள பலர் ஒருவரைக் கொன்ற நிகழ்வுகளும் உண்டு. சமகாலப் போர்களில் கொல்லப்பட்டவர்களுக்கும் வீரமரணச் சின்னங்கள் எடுக்கப்பட்டுவருகின்றன. சில மரபுகள் இன்றும் நம்முடன் தொடர்ந்து வருகின்றன. எனவேதான் இனவரைவியல் தொல்லியல், வரலாற்று ஆய்விற்கு அவசியமாகிறது.

### 5. நல்லூர் குயவர்களும் பானைகளில் அணிவேலைப்பாடும்

கும்பகோணம் அருகே இருக்கும் பாபநாசத்திற்கு அண்மையில் உள்ள நல்லூர் என்ற ஊரில் உள்ள குயவர்களை அபிநயா என்ற மாணவியின் ஆய்வியல் நிறைஞர்ப் படிப்பின் ஆய்வேட்டிற்காகக் கள ஆய்வு செய்த போது அங்குள்ள குயவர்கள், பொங்கல் சமயத்தில் உருவாக்கப்படும் சர்க்கரைப் பொங்கலுக்கான பானைகளில் மாட்டுக்கொம்பலான அச்சு கொண்டு அணிவேலைப்பாடு செய்வதாகக் கூறினர். வெண்பொங்கல் பானைகளில் இத்தகைய அணிவேலைப்பாடு செய்யப்படுவதில்லை. இத்தகைய வேலைப்பாடுகள் பானைகளில் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள இது மிகவும் உதவியாக அமைந்தது. அவர்கள் மாட்டுக்கொம்பாலான ஒரு அச்சுக்கருவியைக் கொண்டு இந்த அணிவேலைப்பாட்டை உருவாக்குகின்றனர்.

### 6. தேனி மாவட்டக் குயவர்களும் கருப்பு நிறப்பானை உருவாக்கமும்

பொதுவாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் பானை உருவாக்கம் குறித்து பல மனதளவிலான (impressionistic) கருத்துக்களைக் கூறுவது உண்டு. பொதுவாக, சிவப்புப் பானைகள் அதிகமாக ஆக்சிசனேற்றம் செய்து எரிப்பதனாலும், கறுப்புப் பானைகள் புகைமூட்டம் இடுவதாலும் உருவாக்கப்படுவதாகக் கூறப்படுவதுண்டு. தேனிமாவட்டத்தில் பூதிபுரத்திற்கு அருகில் உள்ள குயவர்களிடம் ஆய்வு செய்த போது அவர்கள் முதலில் பானைகளைச் சுட்டுச் சிவப்பாக்கிய பின்னர், மீண்டும் சுட்டுப் பானைகளைக் கருப்பாக்குவதாகக் கூறினர். இது ஒரு முக்கியமான இனவரைவியல் தகவலாகும். இது இரும்புக்காலம் தொட்டு எவ்வாறு கருப்புப் பானைகள் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதை விளக்குகிறது. இத்தகைய தகவல் தொல்லியல் ஆய்விற்குச் செய்முறைத் தொல்லியல அணுகுமுறை மிகவும் அவசியம் என்பதை உணர்த்துகின்றது.

### 7. கரந்தைக் குயவர்கள் பானையை மெருகேற்றும் முறை

தஞ்சாவூருக்கு அருகே உள்ள கரந்தைப் பகுதியில் வசிக்கும் குயவர்கள் குறிப்பாக, கருப்பு நிறப்பானையை உருவாக்குகிறார்கள். இவர்களை நாங்கள் ஆய்வு செய்தபோது ஒரு கருப்பு நிற மரக்கொட்டைகளை மாலையாகக் கட்டி அவற்றைப் பானைகளின் மீது தேய்த்து மெருகேற்றுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளமுடிந்தது.

### 8. கேரளக் கொல்லர்களும் இரும்பு உருக்குதலும்

இரும்புத் தொழில் நுட்பம் குறித்து தொல்லியல் ஆய்வாளர்கள் பேசும்போது பல இடங்களில் இரும்புக்கழிவுகள் குறித்துப் பேசுகிறார்கள். ஆனால் இரும்புக்கழிவுகளில் இரும்பு உருக்குக்கழிவும், இரும்பு வேலை செய்யகூடிய கொல்லுத் தொழில் செய்பவர்கள் உருவாக்கும் கழிவும் வேறு என்று கேரளாவில் பட்டனத்திற்கு அருகில் உள்ள பரவூரில் நாங்கள் கண்ட கொல்லர்

கூறினார். அவர், கேரளாவில் ஆனப்பாறா அகழாய்வில் நாங்கள் கண்டுபிடித்த இரும்புக்கழிவைக் கண்டபோது அவர் அதை உருகிய மண் என்று கூறினார். பின்னர் எங்களால் கொல்லுவேலை செய்யும் போது உருவாகிய உருகிய மண் கழிவையும், இரும்பு உருக்கும் போது உருவான உருக்குக் கழிவையும் வேறுபடுத்த முடிந்தது. எனவே, தொல்லியல் ஆய்வாளர்கள், மக்களின் பண்பாட்டுச் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ளும்போது பொருள் பண்பாடுகளின் உற்பத்திச்சூழலை நன்கு விளக்க முடிகிறது.

## 9. பளியர்களும் காட்டில் வாழ்விடங்களை அமைத்தலும்

பொந்துப்புளி என்ற ஊர் பழனிக்கு அருகில் உள்ள பளியர் வாழ்விடமாகும். நாங்கள் 2023 இல் அங்கு கள ஆய்விற்குச் சென்றபோது அங்குச் சந்தித்த பழங்குடியினர் ஒரு வாழ்விடம் உருவாக்கவேண்டுமென்றால் சில மரங்களை முதலில் நடுவோம் என்று கூறினர். இதில் வெளிப்பட்ட முக்கியமான கருத்து என்னவென்றால், வாழ்விடம் என்பது மக்கள் கட்டக்கூடிய வீடுகள் மட்டுமல்ல; அங்கு இருக்கக்கூடிய மரங்கள் செடிகொடிகளும்தான். மக்கள் தங்கள் வாழ்வியலுக்கு ஏற்றவாறு இயற்கைக் காடுகளைக் கொன்று சுத்தம் செய்து அவர்களுக்கு ஏற்ற தாவரங்களை நடுகிறார்கள். தொல்லியல் ஆய்வாளர்கள் பொதுவாக இதைக் கருத்தில் கொள்வதில்லை.

## 10. காவிரிப்படுகையில் நெல் விளைச்சலும் கல்வெட்டுத் தரவுகளும்

தஞ்சாவூர்ப் பகுதிகளில், குறிப்பாகக் காவிரிப் படுகையில் உள்ள நன்செய் விளைநிலங்களின் விளைச்சல் குறித்த தகவல்கள் இனவரைவியல் வழியாகக் கிடைக்கின்றன. கல்வெட்டுகளில் உள்ள தகவலைக் கொண்டு விளைச்சலை முழுமையாக அறிய முடிவதில்லை. இதை நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார் (சாஸ்திரி 2009). பொதுவாகக் காவிரிப் படுகையில் உள்ள வேளாண் மக்கள் வேலி, மா, குழி போன்ற நில அளவுகளையும், மரக்கால், கலம் போன்ற அளைவைக் கணக்குகளையும் பயன்படுத்துகின்றனர். நன்செய் விளைநிலங்கள் ஒரு மாவிற்கு 25 முதல் 40 கலம் வரை நெல் விளையக்கூடியவை என்று கூறுகின்றனர். இவர்கள் ஒரு

மாவில் விளையும் கல அளவை மேனி என்றும் குறிப்பிடுகின்றனர். இந்த விளைச்சல் அளவு, ஊர், நிலம் அமைந்துள்ள இடம் ஆகியவற்றிற்கேற்ப மாறும்.

தஞ்சாவூர் இராசராசேஸ்வரம் கல்வெட்டுகள் "இறைகட்டின காணிக்கடன்" என்று ஒரு மாவிற்குச் சுமார் 5 கலம் நெல்லைக் கோயிலுக்கு அளிக்கவேண்டும் என்று கூறுகின்றன (SII, 2, கல்வெட்டு எண் 4). பொதுவாக ஒரு மா, நிலம் சுமார் 25 கலம் நெல் விளையும், என்ற நல்ல விளைச்சல் கணக்கில், ஐந்தில் ஒரு பங்காக இக் காணிக்கடனைச் சோழர் காலத்தில் தீர்மானித்திருக்கலாம். பொதுவாக, காவிரிப்படுகைப் பகுதியில் நில உடமையாளர்க்கு ஒரு மாவிற்கு ஐந்து கலம் என்று நெல் அளிக்கப்படும் வழக்கம் நன்னிலம் பகுதியில் இன்றும் உள்ளது. இதை மேல்வாரம் என்பர். இந்த அளவு 20 ஆம் நூற்றாண்டிலிருந்து நிலவுகிறது எனக் கருதலாம். எனவே, ஒரு மா நிலத்தில் 5 கலம் அரசுக்கு இறைகட்டின காணிக்கடனாக அளித்த பின்னர், மீதமுள்ள நெல்லைப் பிறர் பகிர்ந்தார்கள் எனக் கருதலாம். இதிலிருந்து சோழர் காலத்தின் இறைகட்டின காணிக்கடனும், தற்கால காவிரிப்படுகை மேல்வாரமும் ஒரே அளவில் உள்ளதை அறியலாம்.

சோழர்காலத்தில் மேல்வாரம் பல அளவுகளில் இருந்ததாக நீலகண்டசாஸ்திரி குறிப்பிடுகிறார் (சாஸ்திரி 2009: 762). மேல்வாரம் அல்லது குடிவாரம் குறித்து மராட்டியர் கால ஆவணம், 25 வேலிக்கு குத்தகையான 5716 ½ கலம் நெல்லில் சம்பா பசானம் 22 வேலிக்கு குத்தகை நெல் 5110 கலம் எனக் கூறுகிறது (வேங்கடராமையா 1984: 137). இதற்குக் குடிவாரம் 2044 கலம், போக மேல்வாரம் 3066 கலம் எனவும் இது கூறுகிறது. இதில் 22 வேலிக்கு, 5110/22 – 232.27 கலம். எனவே 232.27/20 – 11.6135 கலம். எனவே இது ஒரு மாவிற்கு 11.61 கலம் என்ற அளவில் வருகிறது. இதன் வழியாக நாயக்கர் காலத்தில் உழுது பயிரிடுவருக்கு விளைச்சலில் 2 மடங்கும், நில உடமையாளருக்கு 3 மடங்கும் அளித்ததை அறிகிறோம். இது அரசின் வரிகளைக் கழித்த பின்னர்வரும் நெல்லாக இருக்கவேண்டும். இராஜாதிராஜன்காலத்தில் மைசூர் பகுதியில் நன்செய் நிலங்களுக்கு 5 இல் 2 பகுதியாகவும், புன்செய் நிலங்களுக்கு கால்பகுதியாகவும் மேல்வாரம் இருந்ததை அறிகிறோம். (சாஸ்திரி 2009: 763). எனவே, சோழர் காலத்திலும் இதே போன்ற மேல்வாரம்–கீழ்வாரம் (குடிவாரம்) இருந்திருக்க வாய்ப்பு

உண்டு. இதைக் குறித்து கூடுதல் ஆய்வு செய்யவேண்டியுள்ளது. இதில் குத்தகைத் தொகை என்று கூறப்பட்டிருப்பதால், ஒரு மாவின் முழு விளைச்சல் அளவில் பாதியாக குத்தகைத் தொகை மதிப்பிடப்பட்டிருக்கலாம். மேல்வாரம் என்ற சொல்லாட்சி இன்றும் தஞ்சாவூர் பகுதியில் வழக்கில் உள்ளது. கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் பஞ்சவாரம் என்பதும் இது போன்ற ஒரு முறையாக இருக்கவேண்டும். விளச்சலில் ஐந்தில் ஒன்றை அளிப்பதால் அது பஞ் சவாரம் என்ற பெயரைப் பெற்றிருக்கவேண்டும். திருவிடைமருதூர் கல்வெட்டில் தேவதானம் குடிநீக்கிய நிலையில், பஞ்சவாரமாக அளிக்கவேண்டிய 256 கலத்தை திரைமூர் சபையார் அளிக்காமல், குடிநீங்கா தேவதான வகையில் 160 கலம் மட்டுமே அளந்துவந்தனர் என்ற செய்தி உள்ளது (SII 3, 203). அதில் 256 கலம் பஞ்சவாரம் அளிக்கவேண்டியதை அவர் அளிக்கவில்லை என்று அறிகிறோம். இதிலிருந்து குடிநீங்கா அளித்த தேவதானத்திற்கு 160 கலமும், குடிநீக்கி அளித்த தேவதான நிலத்திற்கு 256 கலம் பஞ்சவாரமாக அளிக்க வேண்டும் எனவும் அறியமுடிகிறது. இவை 10:16 (5:8) என்ற அளவில் இருந்துள்ளதை இக்கல்வெட்டு தெளிவுபடுத்துகிறது. திருவண்ணாமலைக் கல்வெட்டு நான்கு பட்டி அளவு நிலத்திலிருந்து 160கலம் முக்குறுணி அறு நாழி மேல்வாரமாக அளிக்கவேண்டும் என்று கூறுகிறது (SII 8, 66). இதிலிருந்து சில இனவரைவியல் சான்றுகளைக் கொண்டு எல்லாச் சூழல்களிலும் நேரிடையான விளக்கங்களை அளிக்கமுடியாது என்பது தெளிவாகின்றது. ஆனால், அவற்றை ஓரளவு ஒப்புமைக்கும் புரிந்துகொள்வதற்கும் பிறசான்றுகளின் உதவியுடன் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும் அவை தொல்லியல், வரலாற்று ஆய்விற்கு மிக அவசியம் என்பதை அறியலாம்.

## நிறைவுரை

வரலாற்று ஆய்விற்கும் தொல்லியல் ஆய்விற்கும் காட்சிப்படுதலுக்கும் இனவரைவியல் பெரிதும் உதவுகின்றது. கள ஆய்வின்போது உள்ளூர் மக்களிடையே கள ஆய்வு செய்வது பண்பாட்டு, சுற்றுக்சூழல் தகவல்களை அறிய உதவுகின்றது. இக்காட்சிப்படுத்தல் எழுத்தாளர், திரைப்பட இயக்குநர் அவர்களுக்கு உள்ளது போல, தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்களுக்கும் துறை நெறிமுறைகளுக்குட்பட்டு அவசியமானதாகும்.

தொல்லியலில் பயன்படுத்தப்படும் ஒப்புமை அணுகுமுறையை மிகவும் எச்சரிக்கையாகப் பயன்படுத்தவேண்டும். முண்டாரி பழங்குடிகளைப்போல தென்னிந்தியப் புதியகற்கால மக்கள் இருந்தார்கள் என நேரிடையாக ஒப்புமை அணுகுமுறையைப் (analogical argument) பயன்படுத்திக் கூற இயலாது (McGranaghan 2017). சங்க கால ஆநிரைகவர்தல் இன்றைய ஆப்பிரிக்க மாட்டுச் சண்டைபோல இருந்தது எனவும் கூற இயலாது. ஆனால், இவற்றை தொல்லியல் ஆய்வாளர் அறிவது மிகவும் அவசியமாகும். இப்பண்பாட்டு மரபுகளைப் புரிந்துகொள்ளவும், அவற்றிற்கிடையே காணப்படும் சில ஒற்றுமைகளையும் அறியவும் ஒப்புமை இனவரைவியல் ஆய்வுகள் உதவுகின்றன. சில நிலைகளில் பின்போர்டு அவர்கள் கூறுவது போல இடைநிலைக் கோட்பாடுகளை உருவாக்க இனத் தொல்லியல் ஆய்வுகள் உதவுகின்றன. புதிய தொல்லியலாளரான லூயி பின்போர்டு உருவாக்கிய இடைநிலைக் கோட்பாடு (middle range theory) நாம் பார்க்கூடிய தொல்லியல் சான்றுகளுக்கும் பார்க்க இயலாத பண்பாட்டு நடத்தைக் கூறுகளுக்கும் இடையே ஒரு அறிவியல்பூர்வமான தொடர்பை உருவக்க முனைகிறது. இது இனத் தொல்லியல் செய்முறைத் தொல்லியலைப் பயன்படுத்திக் கடந்த காலப் பண்பாட்டு இயக்கங்களுக்கும் (cultural dynamics), அது உருவாக்கும் நிலையான தொல்பொருள் சாண்றுகளுக்கும், பண்பாட்டுக் கோலங்களுக்கும் (archaeological statics and cultural patterns) உள்ள உறவுகளை ஆராய்கிறது. சோதனை செய்யக்கூடிய கருதுகோள் வழி,கடந்தகாலச் செயல்பாடுகளை விளக்க இம்முறை உதவுகிறது (Binford 1978, 1983).

தொல்லியல், வரலாற்று ஆய்வுகளை முறையாக நடத்த இனவரைவியல் பார்வைகள், தரவுகள் மிகவும் அவசியமாகும். இனவரைவியல் மாதிரிகளை எல்லா நிலைகளிலும் அப்படியே ஒப்புமையாக எடுத்துக்கொள்ள இயலாது. செய்முறைத் தொல்லியலும், இனவரைவியல் முறைகளுடன் இணைவது தொல்லியல் ஆய்விற்கு மிகவும் அவசியமாகும். இவ்வாறாக இனவரைவியல் ஆய்வு ஒரு பட்டறிவுக் கருவியாக, (heuristic device) உரைகல்லாகத் தொல்லியல், வரலாற்று ஆய்வுகளுக்குப் பயன்படுவதை நாம் புரிந்துகொண்டால், துறையிடை ஆய்வின் அவசியத்தையும், இனவரைவியலின் சிறப்பையும் நாம் உணரலாம்.

## சான்றுகள்

### தமிழ் நூல்கள்


- *ஆ. கார்த்திகேயன் 2017. ஆநிரை பூசல். உங்கள் நூலகம்.* https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-jun17/33320-2017-06-22-03-52-56.
- *இரா. நாகசாமி. 1972. செங்கம் நடுகற்கள். சென்னை: தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை.*
- *கே.ஏ. நீலகண்டசாஸ்திரி 1989. சோழர்கள். தொகுதி. இந்திய வரலாற்றாய்வுக்கழகம்.*
- *பக்தவச்சல பாரதி. 2011.பண்பாட்டு மானிடவியல் மிகச் சுருக்கமான அறிமுகம். அடையாளம் பதிப்பகம்.*
- *ர. பூங்குன்றன் 2023. பண்டைய தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களும் நடுகற்களும் (சமூகம், அரசியல், மொழி), செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை*
- *சி. மகேசுவரன் 2023. பண்பாட்டு ஆய்வியல். பாரதி புத்தகாலயம்*
- *கே.எம். வேங்கடராமையா 1984. தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
- *வெ. வேதாசலம், சு. இராசகோபால், சொ. சாந்தலிங்கம், செ. போசு 1992. பாண்டி நாட்டில் சில புதிய கல்வெட்டுக்கள். ஆவணம் 21, எண். 2.*

## ஆங்கில நூல்கள்


- Adams, Kathleen M. 2012. Ethnographic Methods. Handbook of Research Methods in Tourism: Qualitative and Quantitative Methods, eds. Larry Dwyer, Alison Gill and Neelu Seertaram. Northampton, MA & Edward Elgar/Ashgate. pp. 339-351.
- Auyero, Javier 2006. Introductory note on politics under the microscope. Special issue on political ethnography. International Qualitative Sociology 29: 257-259.
- Baral, Sushil, Sudeep Uprety and Bipul Lamichhane 2016. Ethnography. Herd Publication Visit Us: www.herd.org.np Follow Us: @HERDNepal. https://www.herd.org.np/uploads/frontend/Publications/PublicationsAttachments1/1480653184-Ethnography_1.pdf.
- Belinda, J. 2024. Bathing and Drinking Cow Urine in East Africa: The culture that bathes and drinks Cow Urine. Medium.com. https://medium.com/the-story-in-history/bathing-and-drinking-cow-urine-in-east-africa-5a0a58434d3d
- Binford, L.R. 1978. Caribou Hunters: Nunamiut Ethnoarchaeology. Academic Press, New York.
- Binford, L.R. 1983. In Pursuit of the Past: Decoding the Archaeological Record. University of California Press.
- Burnett, Charles 2024. Al-Birūnī: An outstanding polymath of eleventh century Islam. Journal of Physics: Conference Series. 2877 012020
- Eriksson, P. and A. Kovalainen. 2015. Ethnographic Research, Qualitative Methods In Business Research, 149-163. Eriksson.%20 and%20Kovalainen.pdf
- Evans-Pritchard, E.E. 1940. The Nuer: A Description of the Modes of Livelihood and Political Institutions of a Nilotic People. Oxford, Clarendon Press.
- Feron, Benoît and Tasnier, Anne-Françoise 2021. Cattle Culture Of South Sudan. Wednesday, 28 April 2021.https://africageographic.com/stories/the-mundari-of-south-sudan/
- Fuller, D., N. Boivin, and R. Korisettar. 2007. Dating the Neolithic of South India: New radiometric evidence for key economic, social and

ritual transformations. Antiquity, 81 (313), pp. 755-778. Doi: 10.1017/S0003598X00095715

- Gobo, Giampietro 2008. Doing Ethnography. London: Sage.
- Hamilakis, Yannis and Aris Anagnostopoulos 2009. What is Archaeological Ethnography? Public Archaeology: Archaeological Ethnographies 8 (2–3): 65–87
- Hodder, I. 1986. Reading the Past: Current Approaches to Interpretation in Archaeology. Cambridge University Press.
- Hodder, I. 2009. Symbols in Action. University of Cambridge.
- Johansen, Peter and Andrew M. Bauer 2024. Reconceptualizing the Archaeology of Southern India: Beyond Periodization and Toward a Politics of Practice. Routledge.
- Johansen, Peter G. 2004. Landscape, Monumental Architecture and ritual: a Reconsideration of the South Indian Ashmounds. Journal of the anthropological Archaeology 23, pp. 309- 330.
- Johansen, Peter G., and Andrew M. Bauer 2023. Social Distinctions during the South Indian Neolithic: Changing Mortuary Practices in a Late Prehistoric Cemetery at Maski. Antiquity 97(394): 887–907. doi:10.15184/aqy.2023.81.
- King, Rachel 2017. Cattle, raiding and disorder in Southern African history. Africa 87(03):607-630. DOI:10.1017/S0001972017000146
- Mathur, Nita 2022. Ethnographic Research Methods School of Social Sciences. IGNOU, New Delhi, Ignou. http://egyankosh.ac.in//handle/123456789/88612.
- McGranaghan, M. 2017. Ethnographic Analogy in Archaeology: Methodological Insights from Southern Africa. Oxford Research Encyclopedia of African History. Retrieved 24 Nov. 2025, from https://oxfordre.com/africanhistory/view/10.1093/acrefore/9780190277734.001.0001/acrefore-9780190277734-e-213.
- Morris, Margot 2022. Current Research in Ethnoarchaeology. New York, Murphy and Moore Publishing
- Morrison, K. D., S. N. Reddy, A. Kashyap. 2015. Agrarian Transitions in Iron Age Southern India: Social and Environmental Implications, in Vincent Lefèvre, Aurore Didier, A. and Benjamin Mutin eds., South Asian Archaeology And Art 2012, pp. 185-196. Turnhout, Belgium: Brepols Publishers n.v.

- Mkutu, Kennedy Agade 2005. Pastoralist Conflict, Governance And Small Arms In North Rift, North East Africa. Thesis. Political science. University of Bradford, 2005. English.
- Nagaswamy, R. 1968. Seminar on Inscriptions. Madras, Tamil Nadu State Archaeology Department.
- Narasimhaiah, B. 1980. Neolithic and Megalithic Cultures in Tamil Nadu. New Delhi: Sundeep Prakashan.
- O'Reilly, Karen. 2019. "Ethnographic Methods [second Edition]". https://hdl.handle.net/2134/15689
- Paddayya, K. 1973. Investigations into the Neolithic Culture of the Shorapur Doab, South India. Leiden: E.J.Brill.
- Paddayya, K. 1993a. The Ashmounds of South India: Fresh Evidence and Possible Implications. Bulletin of Deccan College Post-Graduate and Research Institute 51-52(1991-1992): 573-626.
- Paddayya, K. 1993b. Ashmound Excavations at Budihal, Gulbarga District, Karnataka. Man and Environment 18(1): 57-87.
- Paddayya, K. 1995. Further Field Investigations at Budihal, Gulbarga District, Karnataka, Bulletin of the Deccan College Research Institute 53(1993): 277-322.
- Paddayya, K. 1998. Evidence of Neolithic Cattle Penning at Budihal, Gulbarga District, Karnataka, South Asian Studies 14: 141-153.
- Paddayya, K. 2019. Neolithic Ashmounds of the Deccan: Their Place in the Archaeology of Peninsular India. New Delhi: Aryan Books International.
- Paranthaman, S. and Venkataguru Prassana 2025. Excavations at Chennanur. In Archaeological Excavations in Tamil Nadu: A preliminary Report, K. Rajan, R. Sivanandam and V.P. Yatheeskumar eds., pp. 1-45. Chennai, : Tamil Nadu State Archaeology Department.
- Rajan, K. 2000. South Indian Memorial Stones. Thanjavur: Manoo Pathippakam.
- Randhawa, G.K. and Sharma, R. 2015. Chemotherapeutic potential of cow urine: A review. Journal Intercultural Ethnopharmacology 2015 Apr-Jun;4(2):180-6. doi: 10.5455/jice.2015022210032. Epub 2015 Mar 7. PMID: 26401404; PMCID: PMC4566776.
- Rhodes, R.A.W. and Corbett, Jack 2020. Ethnographic Approaches, In Rudy B. Andeweg, R.B., Elgie, R., Helms, L., Kaarbo, J., and

Müller-Rommel, F., eds. The Oxford Handbook of Political Executives. Oxford: Oxford University Press. https://eprints.soton.ac.uk/429156/1/Corbett_Rhodes_Final.pdf

- Sangasubana, N. 2009. How to conduct ethnographic research. The Qualitative Report 16(2), 567-573. Retrieved from http://nova.edu/ssss/QR/QR16-2/sangasubana.pdf
- Selvakumar, V. 2021. Current Status of the Southern Neolithic Culture and the Iron Age-Early Historic Transition in South India and Sri Lanka. Journal of the Royal Asiatic Society of Sri Lanka 66, no. 2 (2021): 1–26. https://www.jstor.org/stable/48828121.
- Selvakumar, V., S. Gowrishankar and R. Karthikeyan 2019. Selvakumar, V.Molapalayam: A Neolithic Site Near Coimbatore in Western Tamil Nadu. Heritage: Journal of Multidisciplinary Studies in Archaeology 7: 70-94.
- Selvakumar, V., Veena Mushtrif-Tripathy, G.S. Abhayan, Sathish Naik, Ravi Kant Prasad, V.N. Prabhakar and Sharmila Bhattacharya, 2024. Status of the Neolithic Culture in Tamil Nadu: Excavations at Molapalayam (2020-21), Coimbatore District, Tamil Nadu, in Early Tamil Culture and Heritage, Proceedings of the 1st International Seminar in Commemoration of Padmashree Iravatham Mahadevan, K. Rajan and R. Sivanandam Eds., Chennai: Tamil Nadu State Archaeology Department pp. 93-109.
- SII =South Indian Inscriptions. Delhi, Archaeological Survey of India.
- Whitehead, Tony 2005. Basic Classical Ethnographic Research Methods: Secondary Data Analysis, Fieldwork, Observation/ Participant Observation. Ethnographically Informed Community and Cultural Assessment Research Systems (Eiccars) Working Paper Series.
- Wild, H., Jok, J.M. and Patel, R. 2018 The militarization of cattle raiding in South Sudan: how a traditional practice became a tool for political violence. International Journal Humanitarian Action 3, 2. https://doi.org/10.1186/s41018-018-0030-y
- Witsenburg, Karen M. and Roba, Adano Wario 2009. Of Rain and Raids: Violent Livestock Raiding in Northern Kenya. Civil Wars 11(4). DOI:10.1080/13698240903403915.

# அறிவியலையும், மக்கள் பங்கேற்பினையும் அடிப்படையாக கொண்ட கண்டல்காடுகள் மீட்டுருவாக்கம் மற்றும் கூட்டு மேலாண்மை

வை. செல்வம்* பெ.தமிழ் ஒளி**

*கட்டுரைச்சுருக்கம்: கடலோர சதுப்புநிலக்காடுகள் ஆங்கிலத்தில் "மாங்குரோவ்" என்றும், தமிழில் கண்டல்காடுகள் (தஞ்சாவூர் பகுதிகளில் அலையாத்திக்காடுகள்) என்றும் அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் இக்காடுகள் ஆங்கிலேயர் காலத்தில் ஆரம்பித்து தொடர்ந்து பிறகு இந்திய அரசாங்கத்தின் தவறான மேலாண்மை கொள்கைகளினால் அழிவுற்று வந்தன, அவற்றை மீட்டுருவாக்கும் முயற்சிகள் ஆங்கிலேய மற்றும் சுதந்திர இந்தியாவின் வனத்துறையால் எடுக்கப்பட்டாலும் அம்முயற்ச்சிகள் குறிப்பிடத்தக்க பலனைத் தரவில்லை, வனத்துறையின் மீட்டுருவாக்கும் முயற்சிகள் அறிவியல் அடிப்படையில் இல்லாமல், உள்ளூர் மக்கள் இக்காடுகளின் வளத்தைப் பயன்படுத்துவதே அழிவிற்கான காரணம் என்ற தவறான அனுமானத்தின் அடிப்படையில் அமைந்ததே. மக்கள் பங்கேற்புடன் ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆராய்ச்சி, கடந்த கால அறிவியல் அடிப்படையற்ற மேலாண்மை முறைகளினால் கண்டல்காடுகளின் உயிர்-இயற்பியலில் ஏற்பட்ட மாற்றங்களே இக்காடுகள் அழிவுக்கு உண்மையான காரணங்கள் என்பதை வெளிப்படுத்தியது.*

*இதனடிப்படையில், கண்டல்காடுகள் அழிவுற்ற பகுதிகளை மீட்டுருவாக்கம் செய்ய ஒரு எளிய முறை உருவாக்கப்பட்டது. இம்முறை நீரியியல் சூழ்நிலையை அடிப்படையாக கொண்டது. இந்த நுட்பமான முறை முதன்முதலில் பிச்சாவரம் கண்டல்காட்டில் பரிசோதனை முறையில் வெற்றிகரமாக செய்து காட்டப்பட்டது. கண்டல்காடுகளை மீட்டுருவாக்கம் செய்யும் இம்முறையை பெரிய அளவில் விரிவாக்கம் செய்யவும், பாதுகாக்கவும், உள்ளூர் மக்கள், வனத்துறை மற்றும் ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து 'கூட்டு கண்டல்காடுகள் மேலாண்மை அணுகுமுறை'யை உருவாக்கின. இவ்வணுகுமுறை இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தில்*

* மேனாள் நிர்வாக இயக்குனர் ம. சா. சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

** சமூக மானிடவியலாளர்

உள்ள முக்கிய கண்டல்காடுகளில் செயல்படுத்தப்பட்டது. இதனின்று பெறப்பட்ட அனுபவங்கள் மற்றும் படிப்பினைகளை கொண்டு புதிய கண்டல்காடுகள் மீட்டுருவாக்க கொள்கைகளும், திட்டங்களும் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இன்று இந்திய சதுப்புநில காடுகளின் பரப்பளவு ஏறக்குறைய 75500 ஹெக்டேர் அளவு அதிகரித்து உள்ளது.

## தொடக்கவுரை

கண்டல்காடுகள் இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரையோரங்களிலும், அந்தமான் நிக்கோபார் தீவு கூட்டங்களிலும் பல இடங்களிலில் காணப்படும் ஓர் உவர்நீர் சதுப்புநிலக்காடுகள் ஆகும். இக்காடுகள் பல சுற்றுச்சூழல் பயன்களையும், சேவைகளையும் மக்களுக்கு வழங்குகின்றன. புயற்காற்றின் வேகத்தை குறைத்தல், புயலினால் உண்டாகும் பெரும் அலைகளின் வேகத்தை ஆற்றுப்படுத்துதல், கடலோர மண் அரிமானத்தை தடுத்தல், மீன், இறால், நண்டுகளின் குஞ்சுகளுக்குப் புகலிடமாக இருந்து மீன்வளம் பெருக உதவி செய்தல், மேலும் பல வலசை வரும் பறவைகளுக்கும் மற்ற விலங்கினங்களுக்கும் சரணாலயமாக விளங்குதல் போன்றவை உவர்நீர் சதுப்புநிலக்காடுகளின் முக்கியமான பயன்களாகும். இவ்வுவர்நீர் சதுப்புநிலக்காடுகள் கண்டல்காடுகள் என்று தமிழிலும், மலையாளத்திலும், கன்னட மற்றும் தெலுங்கிலும் அழைக்கப்படுகின்றன. தற்போது தமிழகத்தில் கண்டல்காடுகள், அலையாத்திக்காடுகள் என்ற காரணப் பெயரால் பரவலாக குறிப்பிடப்படுகின்றன. டிசம்பர் 2004 ஆசிய சுனாமியின் போது கண்டல்காடுகள் ஒரு இயற்கை அரணாக செயல்பட்டு, சுனாமி அலைகளின் வேகத்தைக் குறைத்து இச்சதுப்புநிலக் காடுகள் கடலோர கிராமங்களின் மக்களையும், அவர்கள் சொத்துக்களையும், கிராமங்களின் வளங்களையும் பாதுகாத்தன.

கண்டல்காடுகளை சுற்றி வாழும் மக்கள் இக்காடுகளின் மதிப்பு மற்றும் பயன்பாடுகள் பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டிருந்தாலும், 1980களில் யுனெஸ்கோ (UNESCO) சதுப்புநில ஆராய்ச்சி, மேலாண்மை மற்றும் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்தியபோதுதான் இக்காடுகளின் சுற்றுச்சூழல் பயன்களும்,

*சேவைகளும் வன நிர்வாகிகள் மற்றும் மேலாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.*

*கண்டல்காடுகளின் அழிவு பெரும்பாலும் ஆங்கிலேயர்கள் இன்றைய இந்தியாவின் பல கடலோர பகுதிகளை தங்களின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தியதிலிருந்துதான் தொடங்குகிறது . முதலில் வங்காளத்தை (இன்றைய மேற்கு வங்கம் மற்றும் வங்களாதேசம்) கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் விவசாயத்தை விரிவுபடுத்துவதற்காக சுந்தரவனம் என்று அழைக்கப்படும் கண்டல்காடுகளை பெரிய அளவில் அழிக்கத் தொடங்கினர். உதாரணமாக, 1790கள் முதல் 1870கள் வரை வங்காளத்தில் கிட்டத்தட்ட 280000 ஹெக்டேர் சதுப்புநிலக் காடுகள் ஆங்கிலேயர்களால் நெல் சாகுபடிக்காக அழிக்கப்பட்டன[1]. பின்னர், ஆங்கில அரசாங்கத்தின் இம்பீரியல் ராயல் வனத்துறை கடலோர சதுப்புநிலங்களை நல்ல தரமான மரம் மற்றும் விறகுகளுக்கான ஆதாரமாகக் கருதி 1880களின் பிற்பகுதியில் சுந்தரவன கண்டல்காடுகளைச் அழிக்கத் தொடங்கியது. அதன்பின் தற்போதைய ஒடிசா, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ் நாட்டில் உள்ள கண்டல்காடுகளும் இம்பீரியல் ராயல் வனத்துறையினரால் காப்புக்காடுகள் என்று பிரகடனப்படுத்தப்பட்டு கண்டல் மரங்கள் பெருமளவில் வெட்டப்பட்டன. 1880கள் மற்றும் 1940களில் வெளியிடப்பட்ட வங்காளம் மற்றும் மெட்ராஸ் பிரசிடென்சிகளின் வனத்துறையின் ஆண்டு நிர்வாக அறிக்கையின்படி, ஒவ்வொரு ஆண்டும் கண்டல்காடுகள் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வெட்டப்பட்டு ரயில்வே, நீராவி படகுகள், சர்க்கரை மற்றும் பருத்தி ஆலைகள், இரும்புத் தொழில்கள் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் தேவைக்காக விறகாக விற்க்கப்பட்டன[2]. இந்தியவிடுதலைக்குப் பிறகும் மாநில வனத்துறைகளால் இந்த நடைமுறை தொடர்ந்தது. 1980 ஆம்*

[1] Hunter, W. W., Statistical Account of the Districts of the 24 Parganas and the Sundarbans, Trubner and Co, London, UK, 1875, p. 389.
[2] Selvam, V., An assessment of mangrove management during the colonial and post-colonial periods. Curr. Sci., 2021, 120, 766–771

ஆண்டு இந்திய வன (பாதுகாப்பு) சட்டம் இயற்றப்பட்டபோது, கண்டல்காடுகள் அரசாங்கத்தினால் வெட்டுவது நிறுத்தப்பட்டது.

அழிவுற்ற கண்டல்காடுகளை மீட்ருவாக்கும் முயற்சி ஆங்கிலேயர் காலத்திலேயே தொடங்கப்பட்டது. அம்முயற்சிகள் பெரிதும் பலன் அளிக்கவில்லை. இதைப்பற்றிய விவரங்களை ஆங்கிலேய வனத்துறையினரால் 1900லிருந்து பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தயாரிக்கப்பட்ட கண்டல்காடுகள் மேலாண்மை திட்டத்தில் விரிவாக காணலாம். சுதந்திரத்திற்குப் பின்பும் மாநில வனத்துறை கண்டல்காடுகள் மீட்டுருவாக்கத்திற்கான முயற்சிகளை எடுத்தது. ஆனால் அம்முயற்சிகளும் பலன் தரவில்லை. இதைப்பற்றி 1957ஆம் ஆண்டு மத்திய வன வாரியத்தினால் நடத்தப்பட்ட மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது[3]. இருந்தபோதிலும், கண்டல்காடுகளை மீட்டுருவாக்கம் முயற்சி தோல்விகளிலேயே முடிந்தது. இத்தோல்விகளுக்கு முக்கிய காரணம் மீட்டுருவாக்க முயற்சிகள் அறிவியலை அடிப்படையாக கொள்ளாமலும், கண்டல்காடுகளை சுற்றி வாழும் மக்கள் தங்கள் கால்நடைகளை காடுகளில் மேய்ப்பதும், மரங்களை தங்கள் உபயோகத்திற்கு வெட்டுவதும் தான் அழிவிற்கான காரணங்கள் என்ற மேம்போக்கான புரிதல்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததேயாகும்.

இந்தச் சூழ்நிலையில், புகழ்பெற்ற வேளாண் அறிவியலாளரும் சுற்றுச்சூழல் பாதுகாவலருமான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், 1988 ஆம் ஆண்டு பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்றில் உரையாற்றும்போது, காலநிலை மாற்றம் காரணமாக கடல் மட்டம் உயரும் என்றும், அது கடற்கரையோர கிராமங்களில் அழிவை ஏற்படுத்தும் என்றும், அவ்வழிவினை தடுக்கவும், மேலும் கடல் மட்டம் உயர்வுக்கு ஏற்றவாறு மக்களின் தகவமைப்புத் திறனை மேம்படுத்தவும் கண்டல் காடுகள் பெரிதும் உதவும் என்றும் விரிவாக எடுத்துரைத்தார்.

.................................................................................................

[3] Ministry of Food and Agriculture (MoFA), Government of India. Proceedings of the Mangrove Symposium, held in Calcutta in 1957. Government of India Press, Faridabad, 1959.

அதே ஆண்டில், எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் (சுருக்கமாக சுவாமிநாதன் நிறுவனம்) அவரால் நிறுவப்பட்டு, சதுப்புநில கண்டல்காடுகள் பாதுகாப்பு, மேலாண்மை மற்றும் நிலையான பயன்பாடு என்ற முக்கிய திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கட்டுரை, 1) எப்படி மக்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சியினால் கண்டல் காடுகள் அழிவிற்கான உண்மையான காரணங்கள் கண்டறியப்பட்டன, 2) இதனை அடிப்படையாக கொண்டு எப்படி கண்டல்காடுகளை மீட்ருவாக்க ஒரு நுட்பமான முறை பிச்சாவரம் சதுப்புநிலக்காட்டில் உருவாக்கப்பட்டது, 3) அம்முறை எப்படி மக்கள் பங்கேற்புடன் வெற்றிகரமாக செயல்முறைப்படுத்தப்பட்டு பின்பு பல மாநிலங்களில் விரிவாக்கப்பட்டது என்பனபற்றி ஆராய்கின்றது.

## 2.0 கண்டல் காடுகள் அழிவிற்க்கான உண்மையான காரணங்கள்

### மக்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்ட களஆய்வு:

அறிவியல் அடிப்படையிலான கண்டல்காடு மீட்டுருவாக்கச் செயல்முறையின் மாதிரி (model) முதன்முதலில் தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பிச்சாவரம் காப்புக்காடு சதுப்புநிலங்களில் தமிழ்நாடு வனத்துறையின் பங்கேற்புடன் 1993ல் தொடங்கப்பட்டது. அப்போதைய காலகட்டத்தில் பிச்சாவரம் கண்டல்காடு சுமார் 60 விழுக்காட்டிற்கு மேல் அழிவுற்ற நிலையில் இருந்தது.

பிச்சாவரம் கண்டல்காடுகள் அழிவிற்கான உண்மையான காரணங்களை கண்டறிய முதல் கட்டமாக இக்காடுகளின் முதன்மை பங்குதாரர்களான (stakeholders) இக்காடுகளை வாழ்வாதரத்திற்காக நம்பி வாழும் மீனவ குடும்பங்கள், சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் விவசாய குடும்பங்கள் மற்றும் வனத்துறையின் நிர்வாக மற்றும் கள அலுவலர்கள் போன்றவர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. வனத்துறை அதிகாரிகள், கண்டல்காட்டின் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து கால்நடைகள் காட்டிற்கு மேய்ச்சலுக்குச் செல்வதும், உள்ளூர் மக்கள் சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவதும் தான் பிச்சாவரம் கண்டல்காடு

அழிவிற்ககான முதன்மையான காரணங்கள் என்று வலியுறுத்தி கூறினார்கள். 1965 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட 10-ஆண்டு கால பிச்சாவரம் கண்டல்காடு மேலாண்மை திட்டத்தில் "கண்டல் காடு அழிவிற்கு கிராம மக்கள் சட்டவிரோத மரங்களை வெட்டுவது ஒரு முக்கிய காரணம். அதைவிட முக்கிய காரணம் கண்டல்காடுகளை மக்கள் மேய்ச்சல் நிலமாக பயன்படுத்துவதே" என்று ஆணித்தரமாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்காரணங்கள் வனத்துறையினரால் பொதுவாக எந்த வகையான காடுகள் அழிவுற்றாலும் இவைகள்தான் வைக்கப்படும் முதன்மை காரணங்கள்தான்.

அதேநேரத்தில் மீனவ மற்றும் விவசாய குடும்பங்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டங்களில், 1) பிச்சாவர கண்டல்காட்டை சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் எந்த குடும்பமும் கண்டல் மரங்களை வணிகத்திற்காக வெட்டுவதில்லை, 2) சில குடும்பங்கள் தங்கள் தேவைக்காக பட்டுப்போன உலர்ந்த மரங்களை வெட்டி எடுத்துச்செல்வது உண்டு, 3) கண்டல் காட்டின் ஓரப்பகுதிகளே கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்தப்படுகின்றன, 4) கண்டல் காடு கிராம மக்களும் ஆடு மாடுகளும் எளிதில் செல்ல முடியாத இடங்களிலேயே மிக மோசமாக அழிந்துள்ளது என்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. கிராம மக்களாலும், வனத்துறையினராலும் வலியுறுத்தப்பட்ட கருத்துக்கள் முரண்பட்டு இருந்தமையால் வனத்துறையின் அலுவலர்கள் மற்றும் கிராம மக்களின் பிரதிநிதிகள் கொண்ட குழு கூட்டாகக் கண்டல்காடுகள் மோசமாக அழிந்துள்ள பகுதிகளை பார்வையிட்டது. இக்களஆய்வு மக்கள் பங்கேற்புடன் செய்யப்படும் ஆராய்ச்சியின் ஒரு முக்கிய அம்சமாகும். கள ஆய்வின் முடிவுகள் மக்களின் கருத்துக்களை பெரும்பாலும் ஒத்ததாக இருந்தன. கள ஆய்வின்போது, கண்டல்காடுகள் அழிவுற்ற இடங்களில் ஓதநீர் தேங்கியிருப்பதையும் ஆராய்ச்சியாளர்கள் கவனத்தில் கொண்டனர்.

கண்டல் காடுகளில் ஓதநீர் தேங்கியிருப்பது கண்டல்காடுகளின் சுற்றுச்சூழ்நிலை காரணிகளை பெரிதும் பாதிக்கும். ஓதநீர் என்பது என்ன? அது கண்டல் காடுகளின் வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியம் என்று தெரிந்து கொள்வது அவசியம். கடல்மட்டமானது உலகெங்கும்

பெரும்பாலான கடலோரப்பகுதிகளில் இயற்கையாக ஆறு மணி நேரம் படிப்படியாக உயரவும், ஆறு மணி நேரம் படிப்படியாக இறங்கவும் செய்யும். இது புவி மற்றும் நிலாவின் ஈர்ப்பு சக்தியினால் கடல்மட்டத்தில் ஏற்படும் மாற்றம். கடல்மட்டம் உயரும்போது, கடல் நீர் நதி முகத்துவாரம், உப்பங்கழி, மற்றும் கண்டல் காடுகளில் உட்புகும். கடல்மட்டம் தாழும்போது, கண்டல் காடுகளில் புகுந்த நீர் கடல் நோக்கி வெளியேறிவிடும். இவ்வாறு, ஏறி இறங்கும் கடல் நீர் "ஓதநீர்" என்று அழைக்கப்படும். ஓதநீர் கடலிலிருந்து வருவதால் அது உப்புத் தன்மை கொண்டதாக இருக்கும். ஆனால், உப்பின் அளவு பருவகாலத்திற்கு ஏற்ப மாறுபடும். கோடைகாலத்தில் ஓதநீரின் உப்பின் அளவு கடல் நீரின் உப்பின் அளவை (35 கிராம்/லிட்டர்) ஒத்து அல்லது அதைவிட அதிகம் இருக்கும். மழைக்காலங்களில் ஓதநீரின் உப்பின் அளவு மிக மிக குறைவாக, சில நாட்களில் நன்னீராகவும் இருக்கும். இவ்வோதநீர் கண்டல்காட்டினுள் எந்த தடையுமின்றி உட்சென்று வெளிவர வேண்டும். ஆனால் ஓதநீர் காட்டினுள் தேங்கினால், அந்நீர் கோடைகாலத்தில் ஆவியாகி நீரில் உப்பின் அளவு கண்டல் மரங்கள் தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்து காடுகள் அழிந்துவிடும். படம் 1ல் அழிந்துபோன கண்டல் காட்டின் ஒரு பகுதியையும், அங்கு ஓதநீர் தேங்கி இருப்பதையும் காணலாம்.

*படம் 1. ஓதநீர் தேங்கி இருக்கும் அழிந்துபோன கண்டல்காட்டின் ஒரு பகுதி (பிச்சாவரம்).*

இயற்கைக்கு மாறாக பிச்சாவரம் காட்டில் ஓதநீர் ஏன் தேங்கியிருக்க வேண்டும்? மற்றும் ஓதநீர் காட்டின் எல்லா பகுதிகளிலும் தேங்கி உள்ளதா, அல்லது காடு அழிவுற்ற பகுதிகளில் மட்டும் தேங்கி உள்ளதா? என்று கண்டறிய களத்தில் அறிவியல் ஆய்வு நடத்தப்பட்டது. இவ்வாய்வில் பல முக்கிய உண்மைகள் கண்டறியப்பட்டன. கண்டல்காடு செழிப்பாக இருந்த இடங்களில் காட்டின் தரை ஒரு சிறிய குவிந்தகண்ணாடி (convex) போன்று இருப்பதும், இங்கு ஓதநீர் தங்குதடையின்றி ஏறி இறங்குவதும், இதனால் மண்ணின் ஈரத்தன்மை அதிகமாகவும், உப்பின் அளவு குறைவாகவும் இருப்பதும் தெரியவந்தது. அதே சமயத்தில், கண்டல்காடு அழிந்துபோன பகுதிகளில் தரை குழிந்த நிலையில் இருப்பதும், இங்கு ஓதநீர் ஏற்றத்தின்போது உட்புகுவதும், ஆனால் ஓதநீர் வெளியேறும்போது முழுவதும் வெளியேறாமல் தங்கிவிடுதும், மேலும் இங்கு மண்ணின் உப்பின் அளவு மிக அதிகமாக இருப்பதும் அறிந்துகொள்ளப்பட்டது (படம் 2).

இந்த ஆய்வு ஒரு முக்கியமான கேள்வியையும் எழுப்பியது. ஏன் நன்றாக உள்ள கண்டல்காட்டின் தரைப்பகுதி குவிந்த நிலையிலும், அழிந்துபோன பகுதிகளில் குழிந்த நிலையிலும் உள்ளது? இக்கேள்வி வனத்துறை மற்றும் கிராம மக்களிடம் கள ஆய்வில் கிடைத்த முடிவுகளை பகிர்ந்து கொண்டபோது கேட்கப்பட்டது. அப்போது கிராம மக்கள், ஓதநீர் தேங்கி உள்ள இடங்களில் கண்டல் மரங்கள் முன்பு வனத்துறையினரால் கூப் (coupe) முறையில் குத்தகைக்காரர்களை கொண்டு முழுவதுமாக வெட்டப்பட்ட பகுதிகள் என்ற மிக முக்கியமான தகவலைத் தெரிவித்தனர்.




*படம் 2: கண்டல்காடுகள் அழிவுறாத மற்றும் அழிவுற்ற பகுதிகளின் தரை அமைப்பு*

இதைப்பற்றி மேலும் ஆராயும்போது, ஆங்கிலேயர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு சுதந்திரம் அடைந்தபின்பும் வனத்துறையினரால் தொடரப்பட்ட வனமேலாண்மை முறைபற்றி அறிந்து கொள்ள முடிந்தது. இம்முறை, ஆங்கிலேயர்களால் காடுகளில் இருந்து பயன்தரும் மரங்களை, அம்மர வகைகள் அழியாமல் தொடர்ந்து அறுவடை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட முறையாகும். இம்முறையில் ஒரு காட்டில் பரப்பளவு, காட்டில் உள்ள முக்கியமான பயன்தரும் மரங்கள் (முக்கியமாக கட்டுமானத்திற்கான மரம், விறகிற்கான மரம்) எவை, அம்மரவகைகள் எந்த வயதில் முதிர்ச்சி அடைகின்றன என்று புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படும். அதன்பின், மரம் முதர்ச்சியடையும் வயத்திற்கு ஏற்ப காடு சிறுசிறு பகுதிகளாக 10 அல்லது 20 ஹெக்டேர் - பிரிக்கப்படும். உதாரணமாக, ஒரு காட்டின் பரப்பளவு 500 ஹெக்டேர் என்று எடுத்துக் கொள்வோம். அங்குள்ள மரங்கள் 20 வருடத்தில் முதிர்ச்சி அடைகின்றன. அம்முதிர்ந்த மரங்கள் தேவைக்கு ஏற்ப ஒவ்வொரு ஆண்டும் 25 ஹெக்டேரில் வெட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது என்று எடுத்து கொண்டால், அக்காடு 20 ஹெக்டேர் துண்டுகளாக (coupe) பிரிக்கப்படும். முதல் வருடம் முதல் கூப்பில் (20 ஹெக்டேர்) உள்ள மரங்கள் முழுவதுமாக வெட்டப்படும். மரங்கள் வெட்டப்பட்ட பகுதிகளில்

மரக்கன்றுகள் நடப்பெற்று வளர்க்கப்படும். இரண்டாவது வருடம், இரண்டாவது கூப்பில் உள்ள மரங்கள் முழுவதுமாக வெட்டப்பட்டு, அந்த பகுதியில் மரக்கன்றுகள் வளர்க்கப்படும். இவ்வாறாக, ஒவ்வொரு வருடம் ஒவ்வொரு கூப்பில் மரங்கள் வெட்டப்பட்டு, வெட்டப்பட்ட பகுதியில் மரக்கன்றுகள் நடப்படும். ஆக 20 வருடங்களில் காடு முழுமையாக வெட்டப்பட்டுவிடும். இந்த 20 வருட இடைவெளியில், முதல் கூப்பில் நடப்பெற்ற மரக்கன்றுகள் வெட்டுவதற்கு உகந்ததாக நன்கு வளர்ச்சி அடைந்து இருக்கும். மறுபடியும் அங்குள்ள மரங்கள் வெட்டப்பட்டு மரக்கன்றுகள் வளர்க்கப்படும். இவ்வாறு சுழற்சி முறையில் காடுகளை வெட்டி பயனடையலாம் என்று ஆங்கிலேயர்கள் தங்கள் பலனுக்காக ஒரு வனமேலாண்மை முறையை 1870–1880ல் வகுத்து நடைமுறைக்குக் கொண்டு வந்தனர்[4].

இந்த மேலாண்மை முறை, சென்னை மாகாண (தற்போதைய தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவை உள்ளடக்கியது) வனத்துறையினால் பிச்சாவரம் கண்டல்காட்டில் 1949ஆம் ஆண்டு அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.  பிச்சாவரம் கண்டல்காடு 40 கூப்புகளாகப் பிரிக்கப்பட்டது[5], அக்கூப்புககளின் பரப்பளவு, தோராயமாக 11 முதல் 16 ஹெக்டேர் ஆக இருந்தன. முதல் கூப்பில் உள்ள கண்டல் மரங்கள் 1949–50 இல் முழுவதுமாக வெட்டி அகற்றப்பட்டன,  இம்முறையில், பிச்சாவரம் கண்டல்காடு 1972 வரை தொடர்ந்தது வெட்டப்படட்து இந்த நேரத்தில், முன்பு வெட்டப்பட்ட கூப்புகளில் நடப்பட்ட மரக்கன்றுகளின் வளர்ச்சி திருப்திகரமாக இல்லை என்பதைக் கண்டறியப்பட்டு 1974–75 வாக்கில் கண்டல்காடுகள் கூப்முறையில் வெட்டுவது நிறுத்தப்பட்டது. இவ்விபரங்களை, பிச்சாவரம் கண்டல்காட்டின் பல 10–ஆண்டு மேலாண்மை திட்டங்களில் காணலாம். மேலும், இக்கூப்பு முறையில் கண்டல் மரங்கள் வெட்டுவதில் பதின்ம வயதில் ஈடுபடுத்தப்பட்ட, இன்று முதியவர்களாக இருக்கும் பலர் பிச்சாவரத்தை சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கின்றனர். அவர்கள் மேலும் பல தகவல்களைப்

..............................

[4] Ribbentrop, B., Forestry in British India, Government of IndiaPress, Calcutta, 1900, p. 245.

[5] Venkataramany, P., Working plan for the Chingleput Forest Division (1949–50 to 1963–64), Forest Department, Government of Madras, Madras, 1954, p. 57.

பகிர்ந்து கொண்டனர். உதாரணமாக, வனத்துறையினர் கண்டல் மரங்களை வெட்டுவதற்கு குத்தைகைக்காரர்ளை பயன்படுத்தினர் என்றும், அவர்கள் கூப்பில் குறிப்பிடப்பட்ட அளவை மீறி அதிக பரப்பளவில் காடுகளை வெட்டினர் என்றும், வனத்துறையின் பெரும்பாலான விதிகளை பின்பற்றவில்லை என்றும் கூறினார்கள். இவ்வாறு கண்டல்காடு கூப்முறையில் முழுமையாக வெட்டப்பட்ட இடங்களின் சுற்றுச்சூழலில் ஒரு சங்கிலி தொடர்போன்ற நிகழ்வுகள் ஏற்ப்பட்டன. கண்டல் மரங்கள் வளரும் சதுப்புநில மண் சுமார் 80% ஈரத்தன்மை கொண்டது (அதனால்தான் சதுப்புநிலம்). மரங்கள் வெட்டப்படாதபோது, இந்த ஈரப்பதம் கொண்ட மண்ணின் மீது சூரிய ஒளிப்படாமல் மரங்களின் விதானத்தால் (canopy) பாதுகாக்கப்பட்டு வந்தது. காடுகள் முழுமையாக வெட்டப்பட்டபின், அவ்விடங்களில் சதுப்பு மண்ணில் சூரிய வெப்பக்கதிர்கள் பட்டு மண்ணில் இருந்த நீர் ஆவியாகி, மண் இறுகி சிறிது உள்வாங்கிவிட்டது. இதனால் கண்டல் காடு முழுமையாக வெட்டப்பட்ட இடங்களின் நிலத்தின் அமைப்பு சிறிது பள்ளமாக மாறிவிட்டது. இப்பள்ளமான பகுதிகளில் ஓதநீர் தேங்கி, அவ்வாறு தேங்கிய ஓதநீர் கோடைக்காலத்தில் ஆவியாகி, அதனால் மண்ணின் உப்பின் அளவு மிக அதிகமாகி கண்டல் மரவகைகள் மீண்டும் அவ்விடங்களில் வளர முடியாத சூழ்நிலை உருவாகிவிட்டது

## 3.0 கண்டல்காடு மீட்டுருவாக்க முறை

ஆக, மக்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்ட கள மற்றும் அறிவியல் ஆய்வினால் வனத்துறையினரால் செயல்படுத்தப்பட்ட கண்டல்காடு மேலாண்மை முறையே இக்காட்டின் அழிவிற்கு முதன்மை காரணம் என்று தெரியவந்தது. இவ்வாய்வின் முடிவுகள் கிராம மக்கள் மற்றும் வனத்துறையினரிடம் கூட்டங்கள் மற்றும் கருத்தரங்கங்களின் மூலம் பகிர்ந்து கொள்ளப்பட்டது. கூட்டங்களிலும் மற்றும் கருத்தரங்கங்களிலும் அழிவுற்ற இடங்களில் எவ்வாறு மீண்டும் காடுகளை உருவாக்கலாம் என்றும் விவாதிக்கப்பட்டது.

கூப்புமுறையில் முழுமையாக கண்டல் மரங்கள் வெட்டப்பட்ட இடங்களில் ஓதநீர் தேங்குவதும் அதன் பின் விளைவுகளுமே கண்டல்காடு அழிவிற்கான உண்மையான காரணமாக இருப்பதினால்,

ஓதநீர் தேங்காமல் இருக்க, அழிவுற்ற இடங்களில் வாய்க்கால்கள் வெட்டி, அவற்றை அருகிலுள்ள இயற்கையான வாய்க்கால்களுடன் இணைத்தால், ஓதநீர் ஏற்றத்தின்போது கண்டல்காடு அழிவுற்ற இடங்களில் உட்புகவும், இறக்கத்தின்போது வெளியேறவும் செய்யும், இது தொடர்ந்து நடந்தால் அழிவுற்ற இடங்களில் மண்ணின் உப்பு தன்மை குறைந்து, ஈரப்பதம் அதிகரித்து, மீண்டும் கண்டல் மரங்கள் வளர ஏதுவான சூழ்நிலை உருவாகும் என்ற கருத்துரு (hypothesis) மக்கள் மற்றும் வனத்துறையினர் பங்கேற்புடன் உருவாக்கப்பட்டது. இந்தக் கருத்துருவை களத்தில் சோதிக்க, தமிழ்நாடு வனத்துறை மற்றும் உள்ளூர் மக்களுடன் இணைந்து 10 ஹெக்டேர் பரப்பளவுள்ள கண்டல்காடு அழிவுற்ற பகுதி ஒன்று தேர்வு செய்யப்பட்டது. இந்தப் பகுதியின் தரைமட்ட வரைபடம் ஒரு பொறியாளர்கள் குழுவின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது, இது காடு அழிவுற்ற குழிந்த வடிவப் பகுதியானது சுமார் 45 செ.மீ ஆழம் உடையதாக இருப்பதை கண்டறிய உதவியது. இத்தரைமட்ட வரைபடத்தின் அடிப்படையில், ஓதநீர் ஏற்றம் மற்றும் இறக்கத்தின்போது, அழிவுற்ற பகுதியில் தொடர்ந்து சென்று வர ஏதுவான கால்வாய் அமைப்பு ஒன்று வடிவமைக்கப்பட்டது. இந்த கால்வாய் அமைப்பானது 3 மீ (மேல் அகலம்) X 1.8 மீ (கீழ் அகலம்) X 1 மீ (ஆழம்) பரிமாணம் கொண்ட பிரதான கால்வாயையும், 1 மீ X 0.60மீ X 1 மீ பரிமாணம் கொண்ட பல கிளை வாய்கால்களையும் கொண்டிருந்தது (படம் 3). இக்கால்வாய்கள் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே வெட்டப்பட்டு பிரதான வாய்க்கால், காட்டில் உள்ள இயற்கையான பெரிய வாய்க்காலுடன் இணைக்கப்பட்டது. இவ்வாய்க்கால்கள் வடிவமைப்பதிலும், வெட்டுவதிலும் கிராம மக்கள் ஈடுபடுத்தப்பட்டனர் அவர்களும் மிகுந்த ஆர்வமுடன் பங்கேற்றனர். வடகிழக்கு பருவமழையின் முடிவில், பெருங்கண்டல் என்ற தாவர இனத்தின் 4800 முளைகளும் (விதைகள் தாய் மரத்தில் இருக்கும்போதே முற்றி முளைத்துவிடும் தன்மை கண்டல் மரவகைகளின் ஒரு சிறப்பம்சம். இதனை முளைகள் என்று அழைக்கலாம்), வெண்கண்டல் என்ற தாவர இனத்தின் 28000 முளைகளும் அழிவுற்ற பகுதியில் நடப்பட்டு, அவைகளின் உயிர்வாழும் விகிதமும், வளர்ச்சியும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது. முதல் ஆண்டின் முடிவில், பெருங்கண்டல் மற்றும் வெண்கண்டல் செடிகளில் 66% மற்றும் 72% மட்டுமே உயிருடன் இருந்தன. ஆனால்

இரண்டாம் ஆண்டு முதல் இந்த இனங்களின் ஏராளமான முளைகள் ஓதநீரோட்டம் மூலம் செயல்விளக்க இடத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்கு செழிப்புடன் வளரத்தொடங்கின. இது, கண்டல்காடு அழிவுற்ற இடங்களில் மேற்கண்ட மீட்ருவாக்கும் முறையினால் இயற்கையாகவே கண்டல் மரங்கள் வளர ஆரம்பித்துவிட்டன என்பதை சுட்டிகாட்டியது. இது, மேற்கண்ட மீட்ருவாக்கும் முறை சிறந்த வகையில் செயல்படுவதற்க்கான ஒரு அறிகுறியாக இருந்தது.

*படம் 3: நீர்சூழ்நிலையியலை (hydro-ecological) அடிப்படையாக கொண்டு அழிவுற்ற கணடல்காடுகளை மீட்டுருவாக்கம் செய்ய அமைக்கப்பட்ட கால்வாய்கள்*

## 4.0 மூன்று முக்கியமான கேள்விகள்

இவ்வாறு மக்கள் மற்றும் வனத்துறையின் பங்கேற்புடன் வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டப்பட்ட கண்டல்காடு மீட்டுருவாக்கம் செய்யும் முறையை, கண்டல்காடு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பில் அக்கறை கொண்ட அனைத்து பங்குதாரர்களுக்கும, கூட்டங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட செயல்விளக்க களத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று விளக்குவது மூலமாக பகிர்ந்து கொள்ளப்பட்டது. அப்போது, பங்குதாரர்கள் பின்வரும் முக்கியமான கேள்விகளை எழுப்பப்பினார்கள்:

1. கண்டல்காடு மீட்ருவாக்கும் முறையை பெரிய பரப்பளவில் எப்படி செயல்படுத்துவது?
2. ஓதநீர்ஏறி இறங்க செயற்கையாக வெட்டப்பட்ட கால்வாய்களில் மண் படிந்து தூர்ந்து விடாதா? அத்தகைய சூழ்நிலையில் இந்த வாய்க்கால்களை எப்படி பராமரிப்பது?
3. மீட்டெடுக்கப்பட்ட மற்றும் பிற ஆரோக்கியமான கண்டல்காடுகளை, மரம் வெட்டுதல் மற்றும் மாடு மேய்த்தல் போன்ற சமூக காரணங்களால் அழிவு ஏற்பட்டால், அதை எவ்வாறு கையாள்வது?

## 5.0 மக்களை மையமாகக் கொண்ட கூட்டு கண்டல்காடு மேலாண்மை அணுகுமுறை

மேற்கூறிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக, கூட்டு வன மேலாண்மை கொள்கைகளின் (Joint Forest Management)[6] அடிப்படையில் மக்களை மையமாகக் கொண்ட கூட்டு கண்டல்காடு மேலாண்மை (Joint Mangrove Management) என்ற அணுகுமுறை ஒன்று உருவாக்கப்பட்டது. அழிவுற்ற இடங்களில் கண்டல்காடுகளை மீட்டெடுப்பதற்கும், அக்காடுகளை நீடித்த முறையில் பாதுகாக்கவும், பராமரிக்கவும் மற்றும் பங்குதாரர்களை, குறிப்பாக உள்ளூர் மக்களை, சமூக ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் மற்றும் நிறுவன

[6] கூட்டு வன மேலாண்மை என்பது வனத்தை காலம் காலமாக வாழ்வாதாரத்திற்க்கு சார்ந்து வாழும் கிராம மக்களும் வனத்துறையும் இணைந்து காடுகளைப் பாதுகாக்கவும், மீட்டுருவாக்கவும், கிராமப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்தவும் உருவாக்கப்பட்ட ஒரு அணுகுமுறையாகும். இவ்வணுகுமுறை 1988ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தேசிய வன கொள்கையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. இம்முறையில் வனம்சார்ந்த ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வனக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுக்களுக்கு, காடுகள் மேலாண்மை திட்டங்கள் தயாரிப்பதிலும், அத்திட்டங்களை அமுல்படுத்துவதிலும், காடுகளிலிருந்து வரும் வருமானத்தை பிரித்து கொள்வதிலும் வனத்துறைக்கு சமமான அதிகாரம் தரப்பட்டன. இவ்வணுகுமுறை சரியான முறையில் செயல்படுத்தபட்ட இடங்களில் காடுகள் செழிப்புடன் வளர்ந்தன, மக்களின் வாழ்வாதாரமும் வருமானமும் உயர்ந்தது.

ரீதியாகவும் தயார் செய்வதே இவ்அணுகுமுறையின் நோக்கங்கள் ஆகும்[7] .

இக்கூட்டு கண்டல்காடு மேலாண்மை அணுகுமுறை கீழ்கண்ட ஏழு நிலைகளை கொண்டது. இப்படிநிலைகளின் விபரங்கள் மற்றும் அவை செயல்படுத்தப்பட்ட முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

I) **சூழ்நிலை பகுப்பாய்வு:** கண்டல்காட்டினை உள்ளடக்கிய சதுப்புநிலப் பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் நிலவும் சூழ்நிலையை விரிவாக ஆய்வு செய்து கீழ்கண்ட தகவல்கள் திரட்டப்பட்டன. 1) சதுப்புநிலங்களுக்குள்ளும் மற்றும் அருகிலுள்ள கிராமங்களிலும் நிலவும் பல்வேறு நிலப்பயன்பாடுகள், 2) கண்டல்காடு தொடர்புடைய வனம்சார்ந்த மற்றும் மீன் வளங்களின் மதிப்பீடு, 3) கண்டல்காட்டின் வளங்களை உள்ளூர் சமூகம் எவ்வாறு சார்ந்துள்ளனர் மற்றும் அவர்களின் மரபான உரிமை, 4) கடந்த கால மற்றும் தற்போதைய கண்டல்காடு மேலாண்மை நடைமுறைகள், 5) கண்டல்காடுகள் எந்த அளவு அழிந்துள்ளது மற்றும் அதற்கான முதன்மை மற்றும் இரண்டாம் நிலை காரணங்கள் என்னென்ன? மற்றும் 6) மக்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் கண்டல்காடு மேலாண்மையில்தற்போதைய பங்கேற்பின்நிலை. செயற்கைக்கோள் தரவுகளின் பகுப்பாய்வு, உயிர் இயற்பியல் (பயோபிசிக்கல்) ஆய்வு, சமூக ஆய்வு போன்ற அறிவியல் முறைகள் மற்றும் மக்கள் பங்கேற்புடன் கூடிய ஊரக திறனாய்வு (PRA), குழு விவாதம், முக்கிய தகவல் அளிப்பவர்களுடன் நேர்காணல் போன்ற பங்கேற்பு முறைகள் என பலவகையான ஆய்வு முறைகள் இச்சூழ்நிலை பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகளாகும்.

[7]Selvam, V and P. Thamizoli. 2021. Science-based and community-centred approach to restore and sustain mangrove wetlands. Current Science, 121 (10) 1288-1296

## II) கண்டல்காடு கூட்டு மேலாண்மை திட்டத்தில் பங்கேற்கும் கிராமங்களை அடையாளம் காணுதல்:

பஞ்சாயத்து கிராமங்களை விட குக்கிராமங்கள் கூட்டு சதுப்புநில மேலாண்மை நடவடிக்கைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன, ஏனெனில், குக்கிராமங்களில் பெரும்பாலும் ஒரே மாதிரியான சமூக அமைப்பு நிலவுவது (homogenous community), திறமையாக செயல்படும் பாரம்பரிய கட்டுப்பாட்டு முறை மற்றும் சமூகத்தின் பல்வேறு வகுப்புகளிடையே நிலவும் ஒருவருக்கொருவர் மீதான நம்பிக்கை. இவை யாவும் ஒருமித்த கருத்தினை உருவாக்கவும், மற்றும் தீர்வுகளை முடிவெடுக்கவும் உதவுகிறது. தவிர சமூக-பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை, சதுப்புநில வளங்களை பெரிதும் வாழ்வாதாரத்திற்கு நம்பி இருப்பது மற்றும் கண்டல்காடு கூட்டு மேலாண்மை திட்டத்தில் பங்கேற்க விருப்பம் ஆகியவை குக்கிராமங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல்களாகப் பயன்படுத்தப்பட்டன.

## III) மக்கள் பங்கேற்ப்புடன் கூடிய ஊரக திறனாய்வு:

இம்மூன்றாம் படியின் முக்கிய நோக்கங்கள்

அ) கண்டல்காட்டினை சார்ந்து வாழும் மக்களின் சமூக-பொருளாதார நிலை மற்றும் மக்கள் எவ்வாறு காட்டின் வளங்களை சார்ந்திருக்கின்றார்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது,

ஆ) கண்டல்காட்டினை சார்ந்து வாழும் மக்களின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும், கண்டல்காடு மீட்டுருவாக்கம் மற்றும் அவற்றின் நிலையான மேலாண்மைக்கு என்னென்ன பிரச்சினைகள் உள்ளன, மேலும்

இ) இப்பிரச்சனைகளில் எவற்றிற்கு முன்னுரிமை அளிப்பது போன்றவற்றை கண்டறிதல்,

ஈ) கண்டல்காடு பாதுகாப்பு மற்றும் மேலாண்மையின் முக்கிய பங்குதாரர்களிடையே நல்லுறவை உருவாக்குவது.

சமூக வரைபடம், கிராம வளங்களின் வரைபடம், கண்டல்

காட்டின் வளங்களின் வரைபடம், கிராம மக்களுடன் நடைபயணம், பருவகால வரைபடம், வாழ்வாதார பகுப்பாய்வு, அரசு மற்றும் இதர நிறுவனங்களுடன் மக்களுக்கு உள்ள தொடர்பு (Venn வரைபடம்), பெண்கள் மற்றும் ஆண்களின் தினசரி வேலைகளின் அட்டவணை, பாலின பகுப்பாய்வு, குடும்ப, சமூக மற்றும் கண்டல்காட்டின் வளங்கள் மீதான உரிமையில் மற்றும் பயன்பாட்டில் பாலின வேறுபாடு, பெண்கள் மற்றும் ஆண்களின் வாழ்வாதார உத்திகள் போன்ற மக்கள் பங்கேற்புடனான ஆய்வு முறைகள் ஊரக திறனாய்வின் நோக்கங்களை அடையப் பயன்படுத்தப்பட்டன.

## IV) கிராமங்களில் சமூக அடிப்படையிலான குழுவை உருவாக்குதல்:

திட்டத்தில் பங்கேற்க்கும் ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஒரு ஆண் பெண் என பாலின சமநிலை கொண்ட 'கிராம மேம்பாடு மற்றும் கண்டல்காடு மேலாண்மை குழு' ஒன்று உருவாக்கப்பட்டது, இது ஊரக திறனாய்வு மூலம் அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகளை கூட்டாக விவாதித்து, அவற்றைத் தீர்க்க ஒருமித்த முடிவுகளை எடுக்கும் ஒரு தளமாக செயல்பட்டது. இந்த கிராம அளவிலான அமைப்பு ஒரு பொதுக்குழு மற்றும் செயற்குழுவை கொண்டது, பொதுக்குழுவில் ஒவ்வொரு விருப்பமுள்ள குடும்பத்திலிருந்தும் ஒரு வயதுக்கு வந்த ஆணும் பெண்ணும்

உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். பொதுக்குழு கிராம முன்னேற்றம் மற்றும் கண்டல்காடு சார்ந்த விவகாரங்களில் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டதாக அமைக்கப்பட்டது. செயற்குழுவில், உள்ளூர் சமூக பிரதிநிதிகள் தவிர வனத்துறை, மீன்வளத்துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற பிற பங்குதாரர்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். செயற்குழுவில், பெண்களுக்கு 33 முதல் 50% வரை பிரதிநிதித்துவம் வழங்குவது கட்டாயமாக்கப்பட்டது. நிர்வாகக் குழு, பொதுக்குழுவின் முடிவினை செயல்படுத்த திட்டமிடல் மற்றும் அத்திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்பாக செயல்பட்டது.

### V) கண்டல்காடு கூட்டு மேலாண்மையை நடைமுறைபடுத்துவதற்க்கான இடத்தை அடையாளம் கானுதல்

திட்டத்தில் பங்கேற்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும், கூட்டு கண்டல்காடு மேலாண்மைக்கான ஒரு இடம் கண்டல்காட்டில் மக்கள் மற்றும் வனத்துறையுடன் இணைந்து தேர்வு செய்யப்பட்டது. பிச்சாவரம் கண்டல்காடு பாதுகாக்கப்பட்ட காடாக அறிவிக்கப்படுவதற்கு முன்பு, ஒவ்வொரு கிராமமும் காட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியை தங்கள் வாழ்வாதாரத்திற்காக பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்தன. அந்த இடங்களே அக்கிராமத்திற்கான தற்போதைய கூட்டு மேலாண்மைக்கான இடமாக தேர்வு செய்யப்பட்டது.

### VI) கிராம அளவிலான கூட்டு கண்டல்காடு மேலாண்மை திட்டம் தயாரித்தல்:

ஒவ்வொரு கிராமத்திலும், அக்கிராம மக்கள், வனத்துறை மற்றும் இதர பங்குதாரர்கள் இணைந்து கூட்டு கண்டல்காடு மேலாண்மை மற்றும் கிராம முன்னேற்றத்திற்கான செயல் திட்டங்களைத் தயாரித்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தப்பட்ட கிராம மேம்பாடு மற்றும் கண்டல்காடு மேலாண்மை குழுவின் செயற்குழு, திட்ட தயாரிப்பின் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஊரக திறனாய்வில் கண்டறியப்பட்ட சமூக-பொருளாதார மற்றும் கண்டல் காடு மீட்டுருவாக்கம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான

பிரச்சனைகளுக்கு கிராம மேலாண்மைக் குழு என்னென்ன தீர்வுகளை முடிவு செய்ததோ அந்த முடிவுகளே திட்டத்தின் கருப்பொருளாக இருந்தன. இத்திட்டமானது கீழ்கண்ட விபரங்களை கொண்டிருந்தது.

அ) ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

ஆ) காலவரை - எந்த தேதியில் ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு எந்த தேதியில் முடிக்க வேண்டும்

இ) ஒவ்வொரு நடவடிக்கையையும் செயல்படுத்த பங்குதாரர்களின் பொறுப்பு என்ன

ஈ) ஒவ்வொரு நடவடிக்கையையும் செயல்படுத்த எவ்வளவு நிதி தேவை, தேவையான நிதியில் கிராம மக்களின் பங்கு எவ்வளவு

உ) தேவையான நிதியில் மற்ற பங்குதாரர்களின் பங்கு எவ்வளவு

ஊ) ஒவ்வொரு நடவடிக்கையையும் செயல்படுத்த உருவாக்கப்பட்ட சிறு குழுவின் விபரம்

எ) திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதை கண்காணித்தல்

இவ்வாறு பங்குதாரர்களின் பங்கேற்புடன் கவனமாக தயாரிக்கப்பட்ட திட்டம், பொதுக்குழுவில் விவாதிக்கப்பட்டு செயல்முறைக்கு கொண்டு வரப்பட்டது

## VII) திட்டத்தை செயல்படுத்துதல்:

நிர்வாகக் குழு திட்டத்தினை பங்குதாரர்களின் ஆதரவுடன் செயல்படுத்தியது. திட்டத்தின் நிதி பல பங்குதாரர்களிடமிருந்து திரட்டப்பட்டு கிராம மேலாண்மைக் குழுவின் வங்கி கணக்கில் சேர்க்கப்பட்டது. கிராம மேலாண்மைக் குழு நிதியை முறையாகப் பயன்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

இவ்வணுகுமுறை, பிச்சாவரம் கண்டல்காட்டை சுற்றி அமைந்துள்ள கீழ்கண்ட நான்கு குக்கிராமங்களில் முதன்முறையாக செயல்படுத்தப்பட்டது.

- வடக்கு பிச்சாவரம் (விவசாய சமூகம்)
- தாண்டவராய சோழன் பேட்டை (பாரம்பரிய மீனவ சமூகம்)
- எம்ஜியார் நகர் மற்றும்
- கலைஞர் நகர் (இரண்டிலும் கண்டல் சதுப்புநிலங்களில் மீன்பிடித்தலை தொழிலாக கொண்ட இருளர் பழங்குடி சமூகம்)

**பயிற்சி:** மேற்கண்ட ஒவ்வொரு படிநிலையையும் செம்மையாக செயல்படுத்த தேவையான பயிற்சிகளை ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் கிராம மக்களுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் தொடர்ந்து வழங்கியது.

## 6.0 கண்டல்காடு மீட்ருவாக்க முறை மற்றும் கூட்டு மேலாண்மை அணுகுமுறையை விரிவுபடுத்துதல்

*கண்டல்காடு மீட்ருவாக்க முறை மற்றும் கூட்டு மேலாண்மை திட்டம், பிச்சாவரம் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட அதேசமயத்தில், தமிழ்நாட்டில் உள்ள வேதாரண்யம் - முத்துப்பேட்டை பகுதியில் உள்ள கண்டல்காடுகள், ஆந்திரப் பிரதேசத்தின் கிருட்டிணா மற்றும் கோதாவரி நதிமுகத்துவாரங்களில் உள்ள சதுப்புநிலக் கண்டல்காடுகள், மற்றும் ஒரிஸாவின் (தற்போது ஒடிசா) பித்தர்கனிகா மற்றும் தேவிநதி முகத்துவார கண்டல்காடுகள் ஆகியவற்றின் அழிவிற்காண காரணங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. இப்பகுதிகளிலும், குறிப்பாக ஆந்திராவில் இருந்த கண்டல்காடுகள், சுமார் 1880 ஆம் ஆண்டில் காப்புக்காடுகளாக அறிவிக்கப்பட்டு, கூப் முறையில் காடுகள் வெட்டப்பட்டன என்பது இவ்வாய்வின் மூலம் தெரியவந்தது. இவ்வாறு கூப் முறையில் காடுகள் வெட்டப்பட்ட இடங்களில் எல்லாம், பிச்சாவரம் கண்டல்காடு போலவே, நிலமட்டம் பள்ளமாக மாறி, அதில் ஓதநீர் தேங்கி, மண்ணின் உப்புத்தன்மை அதிகரித்து, கண்டல் மரங்கள் மீண்டும் வளர வழியில்லாத சூழ்நிலை ஏற்பட்டு, அழிவுற்ற நிலையில் இருந்தன[8]. இவ்விடங்களிலும், கண்டல்காடு மீட்ருவாக்க முறை மற்றும் கூட்டு மேலாண்மை திட்டம் சோதனை முறையில் ஆந்திர பிரதேசம், ஒடிசா, மற்றும் மேற்கு வங்க மாநில வனத்துறை மற்றும் உள்ளூர் மக்களின் பங்கேற்புடன் 1996ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை விரிவுபடுத்தப்பட்டது. முதன்முறையாக செயல்படுத்தப்பட்ட இவ்விரிவாக்கத்தில் பங்கேற்ற கிராமங்கள், திட்டத்தினால் ஏற்பட்ட பலன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

- *33 கிராமங்களை சேர்ந்த 5240 குடும்பங்கள் இத்திட்டத்தில் ஆர்வமுடன் பங்கேற்றனர்*
- *இக்குடும்பங்களின் பங்கேற்புடன் சுமார் 1445 ஹெக்டேர் அழிவுற்றிருந்த கண்டல்காடு மீட்டுருவாக்கப்பட்டது*

---

[8] Ravishankar, T., Gnanappazham, L., Ramasubramanian, R., Sridhar, R., Navamuniyammal, N. and Selvam, V., Atlas of Mangrove Wetlands of India: Part II. Andhra Pradesh, MSSRF, Chennai, 2002, p. 68

- *மீட்டுருவாக்கப்பட்ட இடங்களில் சுமார் 68 லட்சம் கண்டல் மரக்கன்றுகள் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டன*
- *சுமார் 12000 ஹெக்டேரில் இருந்த அழிவற்ற கண்டல்காடுகள் பாதுகாக்கப்ட்டன*
- *மிக முக்கியமாக, கிராம மக்கள் சமூக ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் மற்றும் அமைப்பு ரீதியாகவும் கண்டல்காடு மீட்ருவாக்கம் மற்றும் மேலாண்மையில் பங்கேற்க அனுமதி பெற்றனர்.*

## 7.0 சவால்கள்

*கண்டல்காடு மீட்டுருவாக்கத்திறக்கான நீர்சூழ்நிலையியல் தொழில் நுட்பமுறையில் (செயற்கையாக வாய்க்கால் அமைத்து ஓதநீர் தேங்காமலிருக்க செய்யும் முறை) பெரும் சாவால்கள் எதுவும் எதிர்கொள்ளப்படவில்லை. செயற்கையாக அமைக்கப்பட்ட வாய்க்கால்கள் தூர்ந்து போக வாய்ப்புகள் அதிகம் என்று கருதப்பட்டது. இருந்தபோதிலும், பொறியாளர்களின் அறிவுரைப்படி கிளை வாயக்கால்கள், பிரதான வாய்காலிளிருந்து 45 டிகிரி கோணத்தில் வெட்டப்பட்டதால், வாய்க்கால்களில் வண்டல் படிதல் பெருமளவில் குறைக்கப்பட்டது.*

*கூட்டு கண்டல்காடு மேலாண்மை அணுகுமுறையில், குறிப்பாக கிராம அளவிலான அமைப்பை நிறுவுவதிலும், மக்களின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்க்கான நடவடிக்கைகளை எடுப்பதிலும், சதுப்புநில காடு மீட்டுருவாக்கம் மற்றும் பாதுகாப்பின் நடவடிக்கைகளை முனனெடுத்து செல்வதிலும் சமசீருடன் நடைமுறைப்படுத்துவதில் பல சவால்கள் எதிர்கொள்ளப்பட்டது. திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராமங்களில், மிகவும் அதிகாரம் கொண்ட பாரம்பரியமான கட்டுப்பாட்டு (பஞ்சாயத்து) முறை நடைமுறையில் இருந்தது. இது பொதுவாக கிராமத்திற்குள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் நிலைநாட்டுதல், பிற கிராமங்களுடன் நல்லுறவைப் பேணுதல், கிராம தெய்வங்களுக்கான விழாக்கள் மற்றும் சடங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தி வந்தது. இந்த அமைப்பானது, கிராம மேம்பாடு மற்றும்*

கண்டல்காடு மேலாண்மை குழு என்ற ஒரு புதிய அமைப்பு தங்கள் கிராமத்தில் அமைந்தால் தங்களது அதிகாரம் மற்றும் பாரம்பரியமான கட்டுப்பாட்டு முறை நீர்த்துபோய்விடுமோ என்று அதன் தலைவர்கள் அச்சப்பட்டனர். அதனால் கண்டல்காடு மேலாண்மை குழு அமைக்க தயக்கம் காட்டினர். சில கிராமங்களில் குழு அமைக்க ஒப்புதல் அளிக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டது. கண்டல்காடு மேலாண்மை குழுவின் செயல்பாடுகள் சமூக-பொருளாதார மற்றும் சதுப்புநில மேலாண்மை தொடர்பான பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்தும் என்றும், பாரம்பரிய கட்டுப்பாட்டு அமைப்பின் செயல்பாடுகளில் தலையிடாது என்றும் கிராம தலைவர்களை புரிய வைக்க கணிசமான காலம் தேவைப்பட்டது[9]. பல கிராமங்களில், கண்டல்காடு மேலாண்மை குழுவில், பாரம்பரிய கட்டுப்பாட்டு அமைப்பிலிருந்து அதன் முக்கிய பிரதிநிதிகளை உறுப்பினர்களாக சேர்க்க வலியுறுத்தப்பட்டது.

கிராம மக்களின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருந்தது. சில கிராமங்களில், மக்கள் சமூக சான்றிதழ் இன்றி அரசாங்கத்தினரால் ஏழைகளுக்கு வழங்கப்படும் உதவிகளைப் பெற முடியாமலும், குழந்தைகள் பள்ளிப்படிப்பை தொடர முடியாமலும் தவித்தனர். பல கிராமங்களில், மக்கள் நிலையான வருமானமின்றி கந்து வட்டியாளர்களிடம் நிரந்தர கடனாளிகளாக சிக்குண்டிருந்தனர். சில கிராமங்களில், மக்கள் மீன்பிடிக்க படகுகளும், வலைகளும் இல்லாமல் சதுப்புநிலங்களில் கைகளால் தடவி கடினமான முறையில் மீன் பிடிக்கும் நிலையிலிருந்தனர். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துவதிலும், அதே சமயம், சதுப்புநிலக் காடுகளின் மீட்டுருவாக்கம் மற்றும் நிலையான மேலாண்மை நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதும் பெரிய சவாலாக அமைந்தது. இருப்பினும், கிராம அளவிலான கண்டல்காடு மேலாண்மை குழுவில் அரசு நிறுவனங்களின் பங்கேற்பு மக்களின் பிரச்சினைகளையும், கவலைகளைப் புரிந்துகொள்வதற்கும், கவலைகளைத் தீர்க்க

[9] Selvam, V and P. Thamizoli. 2021. Science-based and community-centred approach to restore and sustain mangrove wetlands. Current Science, 121 (10) 1288-1296

தேவையான நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்கும், அந்நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கும் பெரிதும் உதவியது[10].

மக்கள் மற்றும் வனத்துறையின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட கள மற்றும் அறிவியல் ஆய்வுக்கு முன் வனத்துறையினருக்கும், கிராமமக்களுக்கும் இடையே நம்பிக்கையின்மையும், பகையுணர்வும் நிலவி வந்தது. ஆனால், கள மற்றும் அறிவியல் ஆய்வுக்குப்பின் வனத்துறையினர், தங்களது கடந்த கால அறிவியல் பூர்வமற்ற மேலாண்மை முறைகளே சதுப்புநில கண்டல்காடுகள் அழிவுக்கு முதன்மைக் காரணம் என்று புரிந்து கொண்டனர். இப்புரிதல், வனத்துறையினருக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தியது. இரண்டாவதாக, கூட்டு வன மேலாண்மையிலிருந்து வனத்துறை பெற்ற அனுபவ அறிவு, மக்கள் பங்கேற்பு, கண்டல்காடு மீட்டுருவாக்கம் மற்றும் கண்டல்காட்டின் நீண்டகால நிலைத்த தன்மைக்கும் முக்கியமானது என்பதை உணர வைத்திருந்தது. இம்மன மாற்றம் அவர்களை கிராம மக்களுடன் நெருக்கமாக்கியது, மேலும் உள்ளூர் சமூகத்தை கண்டல்காடு மேலாண்மையில் ஒரு முக்கியமான கூட்டாளியாக ஏற்றுக்கொள்ள வைத்தது.

## 8.0 கூட்டு கண்டல்காடு மேலாண்மைக்கான அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான ஆதரவு

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் (தற்போது சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்), நான்கு உறுப்பினர்கள் கொண்ட ஒரு நிபுணர் குழுவை 2000ஆம் ஆண்டு அமைத்து (Office Memorandum vide Letter No. J-22012/19/92-CSC(M) dated 20.03.2000), கண்டல்காடு மீட்டுருவாக்க முறை மற்றும் கூட்டு மேலாண்மை அணுகுமுறை மற்றும் இவற்றினால் கிடைத்த பலன்கள் ஆகியவற்றை ஆராய்ந்து மதிப்பீடுச் செய்ய அனுப்பியது. இக்குழு, தமிழ் நாடு, ஆந்திர பிரதேசம், ஒடிசா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில்

[10] MSSRF, Annual Report 1998–99, M.S. Swaminathan Research Foundation, Chennai, 2000; http://59.160.153.188/library/sites/ default/files/AR1998-1999.pdf

கண்டல்காடுகள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட இடங்களையும், திட்டம் செயலாக்கப்பட்ட கண்டல்காடுகளையும், பார்வையிட்டும், திட்டத்தில் பங்கேற்ற மக்கள் மற்றும் வனத்துறையினரையும் சந்தித்தும் களஆய்வை மேற்க்கொண்டது. இவ்வாய்வுக் குழு தனது அறிக்கையில, மேற்கண்ட கண்டல்காடுகள் மீட்டுருவாக்க முறையும் மற்றும் மேலாண்மை அணுகுமுறையும் மிக சிறப்பானவை என்றும், இவற்றை தேசிய சதுப்புநில கண்டல் காடுகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை திட்டத்தின் மூலம் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்க்கு அறிவுறித்தியது. இந்த அறிக்கையின் அடிப்படையில், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் தமிழ் நாடு மற்றும் ஆந்திர பிரதேச மாநில வனத்துறைக்கு கூட்டு மேலாண்மை அணுகுமுறை மூலம் கண்டல்காடுகளை மீட்டுருவாக்க செய்ய அரசாணை அனுப்பியதுடன், திட்ட செயலாக்கத்திற்கு தேவையான நிதியையும் வழங்கியது. அதன்பின், ஒடிசா மற்றும் மகாராட்டிர மாநில வனத்துறையும் கண்டல்காடு மீட்டுருவாக்க முறை மற்றும் கூட்டு மேலாண்மை அணுகுமுறைகளை தங்களது மாநிலங்களிலும் விரிவாக்கம் செய்தன. இந்திய வனப் பரப்பளவை ஆய்வு செய்யும் (Forest Survey of India) நிறுவனம் தனது 2023ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் இந்திய கண்டல் காடுகளின் பரப்பளவு, 1991ஆம் ஆண்டு இருந்ததைவிட 2021ஆம் ஆண்டில், சுமார் 75500 ஹெக்டேர் அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ளது. பெரிய அளவில் நிகழ்ந்திருக்கும் இந்த மாற்றத்திற்க்கு இவ்வாராய்ச்சி கட்டுரையில் விவரிக்கப்பட்ட, ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தால் கண்டறிந்து முன்னெடுக்கப்பட்ட கண்டல்காடு மீட்டுருவாக்க செயல்முறை மற்றும் கூட்டு மேலாண்மை அணுகுமுறைகளே அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

### 9.0 முடிவுரை

இந்த ஆய்வின் முடிவுகள், இயற்கைவளங்கள் மீட்டுருவாக்கம் மற்றும் மேலாண்மையில், உள்ளூர் மக்களின் மரபான அறிவு மற்றும் பங்கேற்பு, நடைமுறையில் சாத்தியமான மற்றும் நிலையான இயற்கைவள மேலாண்மை முறைகளை கண்டறியவும், செயல்படுத்தவும் மிக அவசியமானது என்பதைக் காட்டுகிறது.

மிகவும் குறிப்பாக, தன்னை சுற்றியுள்ள இயற்கை வளங்கள் அழிவிற்கு உண்மையான காரணங்கள் என்ன, அழிவுற்ற வளங்களை எவ்வாறு மீட்டெடுக்கலாம், அவ்வாறு மீட்டெடுக்கப்பட்ட வளங்களை எப்படி பாதுகாப்பது மற்றும் எப்படிப் பயன்படுத்துவது என்பதனை உள்ளூர் மக்கள் முடிவு செய்ய வாய்ப்பளித்தால், நீடித்த நிலையான இயற்கைவள மேலாண்மை சாத்தியமே என்பதனை ஆய்வின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இருப்பினும், சமீபத்தில் நடத்தப்பட்ட மதிப்பாய்வு, கூட்டு கண்டல்காடு மேலாண்மைக்காக கிராமங்களில் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் (கிராம மேம்பாடு மற்றும் கண்டல்காடு மேலாண்மை குழு, சுற்றுச்சூழல் மேம்பாட்டுக் குழு மற்றும் கிராம வனக்குழு எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன) கண்டல்காடு மீடடுருவாக்கம் செய்வதிலும், மேலாண்மையில் முடிவெடுப்பதிலும் மற்றும் திட்டமிடுவதிலும் ஓரங்கட்டப்பட்டு வருகின்றன என்பதைக் காட்டுகிறது[11] இக்குழுக்களின் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்கள் குழுக்களை, அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வனத்துறை தங்களது திட்டங்களை களத்தில் செயல்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படுவதாக உணர்கிறார்கள். மேலும் இந்த மதிப்பாய்வு, கூட்டு கண்டல்காடு மேலாண்மை மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை தொடர்கிறது என்பதையும், ஆனால் கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களிலும் உள்ள வனத்துறை மக்களின் உண்மையான பங்கேற்புடன் கூடிய கூட்டு மேலாண்மையில் நம்பிக்கை இழந்து, இவ்வணுகுமுறையில் இருந்து தங்களை மெல்ல விலக்கிக் கொண்டுள்ளன என்பதையும் காட்டுகிறது. இன்று பெரும்பாலன இடங்களில் கூட்டு கண்டல்காடு மேலாண்மை என்பது பெயரளவிலேயே உள்ளது.

பல்வேறு மாநில வனத்துறைகளிடம் தற்போது இருக்கும் மனித வளம், அதாவது அதன் அலுவலர்கள் கூட்டு கண்டல்காடு மேலாண்மை என்பது பெயரளவிலேயே நடக்க காரணமாக இருக்கலாம்.

..........................................................................................

[11] MSSRF and IUCN, Mangrove restoration and afforestation: participatory assessment of current practices, M.S. Swaminathan Research Foundation, Chennai, 2011, p. 102; https://www.mangrovesforthefuture.org/assets/Repository/Documents/003-SG-IN-01-02-05. pdf

தற்போதைய கூட்டு கண்டல்காடு மேலாண்மை (Joint Mangrove Management) 1990களின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டபோது, கூட்டு வன மேலாண்மை (Joint Forest Management) எனும் அணுகுமுறை நடைமுறையில் அதன் உச்சத்தில் இருந்தது, கூட்டு வன மேலாண்மைக்கு மிகப்பெரிய அரசியல் மற்றும் அரசின் நிர்வாக ஆதரவு இருந்தது. அந்த காலகட்டத்தில், வனத்துறையின் நிர்வாக மற்றும் கள ஊழியர்கள் கூட்டு வன மேலாண்மை என்ற கருத்தாக்கத்திலும், மற்றும் உண்மையான மக்களின் பங்கேற்பை அடைய பின்பற்ற வேண்டிய செயல்முறை குறித்தும் முழுமையாகப் பயிற்சி பெற்றனர். இதனாலேயே, கூட்டு வன மேலாண்மை மற்றும் கூட்டு கண்டல்காடு மேலாண்மை அப்போது உண்மையாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்தப்பட்டது. தற்போதைய இளைய தலைமுறை நிர்வாக மற்றும் கள அளவிலான வனத்துறை ஊழியர்கள் கூட்டு மேலாண்மை அணுகுமுறை மற்றும் நடைமுறை பயிற்சியில் குறைந்த அளவிலான அனுபவத்தையே கொண்டுள்ளனர் அல்லது இல்லை என்றே கூறலாம். எனவே, சதுப்புநில கண்டல்காடுகளின் நீண்டகால நிலைத்ததன்மைக்கு மக்களின் பங்கேற்பு அவசியம் என்பதில் அவர்களுக்கு அதிகம் நம்பிக்கையில்லாமல் இருக்கின்றனர். மேலும், அனைத்து கண்டல்காடுகளையும் வனவிலங்கு சரணாலயம் போன்ற வனத்துறை சட்டங்களால் "பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக" அறிவித்ததும் கூட்டு மேலாண்மையை செயல்முறைபடுத்துவதில் மேலும் சிக்கலாக்கியுள்ளது.

இந்நிலைமையை மேம்படுத்த, மாநில வனத்துறை இளைய தலைமுறை அதிகாரிகள் மற்றும் கள ஊழியர்களின் கூட்டு மேலாண்மை குறித்த புரிதலை, அதனை செயலாக்க வேண்டிய திறன் ஆகியவற்றை, முறை (formal) மற்றும் முறைசாரா (informal) பயிற்சிகளை அதிகரிப்பதன் மூலம் மேம்படுத்தலாம். இன்றையச் சூழலில் இந்திய வன சேவை மற்றும் கள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பயிற்சி பாடத்திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது, தற்போதைய பயிற்சி பாடத்திட்டங்கள், தற்போதைய தேவையான கூட்டு மேலாண்மை மீதான நம்பிக்கையையும், அம்மேலாண்மை முறையை செயல்படுத்தும் திறனையும் வளர்ப்பதைவிட, காடுகளை சுரண்டுவதை நோக்கமாகக் கொண்ட காலனித்துவ மரபை பிரதிபலிப்பதாக உள்ளது.

# பிறமலைக் கள்ளர்க்குப் பாத்தியப்பட்ட கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவில் குறவர் சமுதாயத்தினர்க்கு அளிக்கப்படும் முதல் மரியாதை: ஒரு சமூக மானிடவியல் பார்வை

முனைவர் சி. மகேசுவரன்*

*கட்டுரைச்சுருக்கம்: மருது இருவர் மறைவிற்குப் பின் ஆங்கிலேய அரசால் நாடு கடத்தப்பட்ட 73 பேர்களுள் ஒருவர் 'சட மாயன் குறவர்' என்கிற ஒரு சிறு குறிப்பின் வழியே மேற் கொள்ளப்பட்ட ஆய்வால், மதுரை மாவட்டக் கருமாத்தூர் பகுதியை சார்ந்த பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினர்க்கும் குறவர் சமுதாயத்தினர்க்கும் இடையில் காலம் காலமாக நிலவி வரும் சமுதாயப் பண்பாட்டுத் தொடர்புறவை வெளிப்படுத்தும் வகையில் மலர்ந்த ஆய்வே இக்கட்டுரை. சட மாயன் குறவர் நினைவைப் போற்றும் வகையில் கருமாத்தூர் பகுதி வாழ் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினர் சட மாயன் குறவரைத் தம் உறவாகவே கருதுவதுடன் அவர் வாரிசுகளுக்கு இன்றளவு தங்கள் குலதெய்வக் கோவிலான 'ஒச்சாண்டம்மன் கோ திருவிழாவின்போது குறவர் சமுதாயத்தினர்க்கு 'முதல் மரியாதை ' அளித்திடும் பண்பாட்டு நடத்தை குறித்து சமூக மானிடவியல் பார்வையில் இக்கட்டுரை பதிவு செய்கிறது.*

## 1.0 முன்னுரை

*மதுரை மாவட்டம் கருமாத்தூரில் அமைந்துள்ள பிறமலைக் கள்ளர்க்குப் பாத்தியப்பட்ட ஒச்சாண்டம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் கோவில் திருவிழாவின்போது பள்ளயப் ('படையல்'') பொருள்களைப் பங்கிட்டுக்கொள்ள மூங்கில் நாரினால் பின்னப்பட்ட கூடைகளை உருவாக்கி அளிப்பதுடன், பிறமலைக் கள்ளர்ப் பெண்மணிகளுக்குக் காது வளர்த்தெடுக்கும் பணியில் உதவுவதனாலும் குறவர் சமுதாயத்தினர்க்குப் பரிவட்டம் கட்டிப், பள்ளயப் பொருள்களின் பங்கு அளித்து முதல் மரியாதை செய்யப்படுவதாகக் கருதப்பட்ட சமயம்சார் சடங்கு ஆற்றுகையில்*

* *முதுநிலை ஆய்வுத் தகைஞர், இந்தியச் சமூக அறிவியல்கள் ஆய்வுக் குழு) மொழியியல் துறை பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர்-641 046*
maheswaran.heritage@gmail.com

*(*Religious Observance*)* *அடங்கியுள்ள உண்மையான சமூக வரலாற்று செய்திகளை சமூக மானிடவியல் பார்வையில் அளிப்பதே இக்கட்டுரைக் களமாக அமைகிறது.*

## 2.0 குறவர், பிறமலைக் கள்ளர் தொடர்புறவு குறித்து நிலவும் இரு வரலாற்று நிகழ்வுகள் - ஒரு பார்வை

*மதுரை மாவட்டம் கருமாத்தூரை சுற்றியுள்ள பகுதிகளில் குறவர், பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர்க்கு இடையே இனங்காணலாகும் தொடர்புறவு குறித்து இரு வேறு வரலாற்று நிகழ்வுகள் நடந்துள்ளதாக நேரிடைக் களப்பணி ஆய்வுகளின்போது திரட்டப்பட்ட தகவல்கள்வழியே தெரியவருகிறது. அவை வருமாறு :*

### 2.I. நிகழ்வு

*இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி நிலவியபோது, அவர்களுடைய ஆட்சியதிகாரத்தை ஏற்றுக்கொண்ட ஜமீன்தாரர்களுக்கு உள்ளூர் வரி வசூல், திண்டல் பெறும் உரிமைகளை அளித்திருந்தனர். அவ்வகையில், மதுரை நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன்தாராக விளங்கிய சின்னக்கண்ணு சேர்வை அச்சுற்றுவட்டாரப் பகுதிகளில் வாழும் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினரிடம் வரி வசூல் செய்வதில் மிகவும் கறாராக நடந்து வந்துள்ளார் - அதாவது, வரி கட்டத் தம்மிடம் உரிய பணம் இல்லை என்று கூறுவோரை, ஜமீனிலேயே சில நாள்கள் தங்கியிருந்து தமது ஜமீன் மாளிகை மற்றும் வயல்களில் வேலை செய்திடுமாறு பணித்து அவர்களுடைய உடல் உழைப்பைச் சுரண்டியுள்ளார். இதனால் மனம் வெதும்பிய பிறமலைக் கள்ளர் சமுதாயத் தலைவர்கள் தங்களுக்குள்ளேயே இரகசியமாகக் கூடிப் பேசி, ஜமீன்தாரர் சின்னக்கண்ணு சேர்வையைக் கொன்று அழிப்போர்க்கு நிலமும் ரொக்கமும் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கின்றனர் அக்கொலை முயற்சியின்போது 'பிழைத்து வந்தால் கோவிலில் முதல் மரியாதை அளிப்பது செத்துவிட்டால் சாமியாகக் கும்பிடுவது" என்று உறுதியும் கொடுக்கின்றனர்.*

*கருமாத்தூரை அடுத்த கரிசல்பட்டியைச் சார்ந்த ஆண்டியப்பத் தேவர் என்பவர் இதற்கு உடன்பட்டு, நாகமலைப் புதுக்கோட்டை*

ஜமீன்தாரர் சின்னக்கண்ணு சேர்வையின் படைப் பிரிவிலேயே பணியாற்றி வந்த குறவரினப் படைவீரர் ஒருவருடைய உதவி, ஒத்துழைப்பை நாட, அதற்கு உடன்பட்ட அக்குறவரினப் படை வீரரும் முதலில் தமது குடும்பத்தினரை நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதியிலிருந்து கருமாத்தூரை அடுத்த கரிசல்பட்டியில் பாதுகாப்பாகக் குடியமர்த்திவிட்டு, ஆண்டியப்ப தேவருடன் நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன் மாளிகைக்கு வந்து, ஏறி வந்த குதிரையை ஜமீன் மாளிகைக்குக் கீழே பாதுகாப்பாகக் குறவரினப் படை வீரர் நிறுத்தியவாறு காத்திருக்க, ஆண்டியப்ப தேவர் ஜமீன் மாளிகைச் சுவர்மீது உடும்பு கட்டி மேலேறி, அங்கு ஓர் அறையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த ஜமீன் சின்னக்கண்ணு சேர்வையின் கழுத்தை

அறுத்ததுடன், தனது கொலை முயற்சிக்கான அடையாளமாக மேற்படி ஜமீன்தாருடைய நீண்டு வளர்ந்திருந்த தலைமுடியை வெட்டி எடுத்துக்கொண்டு தப்பிக்க முயற்சிக்கும்போது, உயிர் பிரியும் நிலையில் ஜமீன் சின்னக்கண்ணு சேர்வை உரக்கக் குரலெழுப்ப, அக்கூக்குரலைக் கேட்டு அங்கு வந்த ஜமீனின் தம்பி கொலையாளி ஆண்டியப்ப தேவரின் வயிற்றில் குத்தீட்டியால் குத்திக் குடலைச் சரித்துவிடுகிறான் குடல் வெளியே வந்த நிலையிலும் தப்பித்துக் கீழே குதித்த ஆண்டியப்ப தேவரை உடன் வந்து காத்திருந்த குறவரின

வீரன் அவரது வயிற்றைத் துண்டால் கட்டிப், பாதுகாப்பாகக் குதிரையில் ஏற்றிக்கொண்டு, கருமாத்தூர் ஊர் எல்லையிலேயே தமது உயிரை விட, அவர் உயிர் துறந்த அந்த இடத்திலேயே பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர் அவர்க்குச் சமாதியும் கட்டி வழிபடு இடமாக்கிவிட்டனர். அத்துடன், ஜமீன் சின்னக்கண்ணு சேர்வையைத் துணிவுடன் கொலை செய்தபோது உடன் துணைநின்று உதவிய குறவரின வீரனுக்கு (ஆண்டியப்ப தேவர்க்குத் தர ஒப்புக்கொண்ட) கோவில் முதல் மரியாதைஞ்யை ஆண்டுதோறும் அளிப்பது எனவும் அங்கு வாழும் பிறமலைக் கள்ளர் முடிவு செய்கின்றனர். அம்முடிவின்படி, அருகில் உள்ள ஒச்சாண்டம்மன் கோவிலில்[1] ஆண்டுதோறும் திருவிழாக் காலத்தின்போது அக்குறவர் சமுதாய வீரர்க்கும் முதல் மரியாதையாக அவர் காலத்திற்குப் பின் அவருடைய வழிவந்தோர்க்கும் பரிவட்டம் கட்டிப் பள்ளயப் பொருள்களின் பாதீடு அளிக்கப்படுகிறது.[2] கருமாத்தூரை அடுத்த கரிசல்பட்டியில் குடியமர்ந்த குறவர் சமுதாயத்தினர் அங்கேயே தொடர்ந்து வாழ்ந்துவந்ததுடன், அங்கு வாழும் பிறமலைக் கள்ளர் பெண்மணிகளுக்குக் காது வளர்ப்பதற்கும் உதவி வந்தனர்.[3] மேலும், கோவில் திருவிழாவின்போது பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர்

.........................................................................................

[1] ஒச்சாண்டம்மன் கோவில் எனப் பெரு வழக்காகக் குறிப்பிடப்படும் இக்கோவிலின் கருவறையில் இருக்கும் தெய்வம் ஆங்காள ஐயன். இவர் தமது இரு துணைவியரான கண்ணாயி, பூங்கனி ஆகியோருடன் இங்கு வீற்றிருக்கிறார். இக்கோவிலின் முகப்பில் ஒச்சாண்டம்மன் என்று பெயர் விளங்கிய ஸ்ரீ ஆங்காள ஐயன், ஸ்ரீ கண்ணாயி, பூங்கனி கோவில் என்றே பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

[2] தகவல் உதவி : திரு. பெரிய கருப்புத் தேவர், மக்கள் தொடர்பு அலுவலர் (பணி நிறைவு), மதுரை - காமராசர் பல்கலைக்கழகம். இவருடைய தொடர்பைப் பெற்றுக் கொடுத்தவர் இக்கோவில் கோடங்கி ஐயன் பிடுக்கி திரு. ரமேஷ் ஆவார்.

[3] பிறமலைக் கள்ளர் சமுதாயப் பெண்மணிகள் தங்களுடைய வெற்றிலைத் தாம்பூலம் தரித்த வாயிலிருந்து குறவர் சமுதாயப் பெண்களின் கையில் தாம்பூலத்தை உமிழ்ந்து, ‘இன்று முதல் நீங்கள் எல்லோரும் எங்களுள் ஒருவராகிவிட்டீர்கள்’’ என்று உறவுத் தொடர்பை உறுதிப்படுத்தினர் என்று முதன்மைத் தகவலாளி திரு. சங்கரமூர்த்தியின் தாயார் திருமதி. மீனா அவர்கள் நேரிடைக் களப்பணி ஆய்வின்போது இக்கட்டுரை ஆசிரியருடன் உடனிருந்த அவரது மனைவி திருமதி. சுசீலா ராணி - அவர்களிடம் கூறிடப் பதிவுசெய்துகொள்ளப்பட்டது. வாயில் தரித்த தாம்பூலத்தைப் பரிமாற்றம் செய்து கொள்ளல், என்பது பண்பாட்டு நிலையில் நெருக்க உறவைப் புலப்படுத்தும் பண்பாட்டுக் காரணி என மானிடவியலாளர் கருத்துரைப்பர் என்பது இங்கு நினைத்துப் பார்க்கத் தக்கது.

*படைத்திட்ட பள்ளயப் பொருள்களை பங்காளிகள் தமக்குள் பங்கிட்டுக்கொள்ளவும் தேவைப்படும் புதிய மூங்கில் (நார்) கூடைகளை முடைந்து கொடுக்கும் பணியிலும் குறவர் சமுதாயத்தினர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.*[4]

*நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதிக்கு மீண்டும் வந்து குடியேறி அங்கு இன்று வரை வாழ்ந்து வரும் குறவர் சமுதாய வாரிசுதாரர்க்கு உரிய கோவில் முதல் மரியாதையானது தற்போதைய வாரிசுதாரர்*[5] *திரு. சங்கரமூர்த்தி வகையறாவினர்க்குக் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு வரை தொடர்ந்து அளித்துவரப்பட்டது*[6]*. மேற்படி முதன்மைத் தகவலாளி சங்கர மூர்த்தியிடம் மேற்கொண்ட நேர்காணலின்போது, அவரது பூர்வீகம் கிழக்கு நாடு (அதாவது, இராமநாதபுரம்) என்றும் அங்கிருந்து முதலில் காரியாபட்டி பகுதிக்கும் பின்னர், சில தலைமுறைகளுக்கு முன்பு நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதிக்கு அவருடைய முன்னோர் குடியேறினர் என்றும் அருகில் உள்ள கருமாத்தூர் மற்றும் சுற்றிலும் உள்ள பிறமலைக் கள்ளர்*

........................................................................................

*[4] இவ்வாறு, கோவில் திருவிழாக் காலத்தின்போது புதிதாக முடையப்பட்ட மூங்கில் (நார்க்) கூடைகளுடன் குறவர் சமுதாயத்தினர் வருவதைப் பார்க்கும் பிறமலைக் கள்ளர் சமுதாயக் கோவில் கோடங்கி, ‘குறவர் வகையறாவினர் வந்துவிட்டனர் வழி விடுங்கப்பா” என்று குரல் எழுப்பி, புதிதாகப் பின்னனிய மூங்கில் (நார்க்) கூடைகளுடன் வரும் குறவரின மக்களை எதிர்கொண்டு வரவேற்று, உரிய குறவர் வாரிசுதாரர்க்குப் பரிவட்டம் கட்டிப் பள்ளயப் பொருள்களின் ஒரு பங்கை அளித்து முதல் மரியாதை செய்வர் - என நேரிடைக் களப்பணி நேர்காணலின்போது முதன்மைத் தகவலாளி திரு. சங்கரமூர்த்தி தெரிவித்தார்.*

*[5] இத்தகவலும் முதன்மைத் தகவலாளியான நாகமலைப் புதுக்கோட்டை திரு. சங்கரமூர்த்தி கூறியதே.*

*[6] தற்போதைய குறவர் வாரிசுதாரர் யார் என்று கண்டுபிடித்து உதவிடுமாறு மதுரையைச் சார்ந்த குறவர் சமுதாயச் செயல்பாட்டாளர் திரு. இராவணன் என்பவரை அணுகிட, அவர் தமது உறவினர் தியாகு என்பவரைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதியில் வாழ்ந்துவரும் குறவர் சமுதாயத்தினரிடம் விசாரித்து, அவருடைய மைத்துனர் முறையாகிய திரு. சங்கரமூர்த்தியே கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவிலில் திருவிழாக் காலத்தின்போது முதல் மரியாதை பெற்று வரும் உரிய வாரிசுதாரர் என்று உறுதிப்படுத்தியதன் அடிப்படையில், மேற்படித் திரு. சங்கரமூர்த்தியை முதன்மைத் தகவலாளியாகக் கொள்வதே உரிய பயன் விளைவிக்கும் என்று முடிவு செய்து, நேரிடைக் களப்பணி ஆய்வின்போது உரியவாறு நேர்காணலும் நிகழ்த்தி வேண்டிய தரவுகள் திரட்டப்பட்டன.*

*சமுதாயப் பெண்டிர்க்குக் காது வளர்க்க உதவியாக நான்கு சென்ட் நிலம் அளிக்கப்பட்டது என்றும் அதன் தொடர்ச்சியாக உரிய வாரிசுதாரராகிய தமக்கும் அண்மைக் காலம் வரை ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாக் காலத்தின்போது உரிய முதல் மரியாதை அளிக்கப்பட்டுள்ளது என்றும் மேல் விபரங்களைத் தெரிவித்தார்.*[7]

### 2.2. நிகழ்வு

*ஆங்கிலேய ஆட்சியதிகாரத்தை ஏற்க மறுத்துப் போரிட்ட சிவகங்கைச் சீமை மருது சகோதரர்களை இந்தியாவை ஆண்ட ஆங்கிலேய அரசு சிறைப் பிடித்துத் தூக்கிலிட்ட பின்னர், வேலு நாச்சியார் மருமகன் உடையணத் தேவர் உள்ளிட்ட 73 பேர்களைப் பினாங்கிற்கு நாடு கடத்தி அங்கு சிறையில் அடைத்தது. இந்த 73 பேர்களைப் பற்றிய விவரங்களைத் தமது காலா பாணி (2020) என்கிற வரலாற்றுப் புதினத்தில் பதிவிட்ட திரு. மு. ராஜேந்திரன் இ.ஆ.ப., (பணி நிறைவு) அவ்வாறு நாடு கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டோருள் மறவர் 43 பேர் அகமுடையர் இருவர், நாயக்கர் 14 பேர், சாணார் ஒருவர், பிள்ளைமார் ஐவர், பார்ப்பனர் ஒருவர், கத்தோலிக்கர் ஒருவர் எனக் குறித்துள்ளார்.*

.....................................................................................

[7] *நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன் சின்னக்கண்ணு சேர்வையைக் கொல்ல திட்டமிட்டுச் செயல்பட்ட ஆண்டியப்ப தேவர்க்குத் துணையாக உடனிருந்து உதவியதுடன், அக்கொலை முயற்சியின்போது ஜமீன் தம்பியால் வயிற்றில் குத்தப்பட்டுக், குடல் சரிந்த நிலைக்கு ஆளான ஆண்டியப்ப தேவரைக் குதிரைமீது ஏற்றிக், கருமாத்தூர் ஊர் எல்லை வரை பாதுகாப்பாகக் கொண்டுவந்து குறவரின வீரன் சேர்த்தமைக்காகவே ஆண்டியப்ப தேவர்க்கு உரிய முதல் மரியாதையை அக்குறவரின வீரர்க்கும் அவர் காலத்திற்குப் பின் வந்த வாரிசுதாரர் வரிசையில் மாயாண்டி, சங்கன், சட மாயன் என்பவர்களுக்கும் அதையடுத்து, அவ்வரிசையில் திரு. சங்கரமூர்த்திக்கும் உரிய கோவில் முதல் மரியாதை அளிக்கப்படுகிறது என்கிற வரலாற்று உண்மையை மேற்படித் திரு. சங்கரமூர்த்தியிடம் நேர்காணல் நடத்தும்வரை அவரும் அறிந்திருக்கவில்லை பிறமலைக் கள்ளரினப் பெண்களுக்குக் காது வளர்க்க உதவுதல், புது மூங்கில் கூடைகள் முடைந்துகொண்டுவந்து தருதல் உள்ளிட்டவற்றிற்காகவே உரிய முதல் மரியாதையானது தமக்கு வழங்கப்படுகிறது என்றே திரு. சங்கரமூர்த்தி எண்ணிக்கொண்டிருந்தார் என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.*

இத்தகைய பதிவிற்கு மாறாகப், பிறமலைக் கள்ளர்: வாழ்வும் வரலாறும் எனும் தமது நூலில் உசிலம்பட்டியை சார்ந்த வழக்குரைஞர் திரு. சுந்தர வந்தியத்தேவன் தாம் மேற்கொண்ட நேரிடைக் களப்பணி ஆய்வுகளின்வாயிலாகக், கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் கோடங்கி திரு. ஆங்கத்தேவர் என்பவரிடம் இருந்து ஆங்கிலேய ஆட்சியாளர்களால் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்ட 73 பேர்களுள் கருமாத்தூரை சார்ந்தோர் மூவர் என்றும் அவர்கள் ஆண்டியப்ப தேவர், கூனி மாயத் தேவர், மற்றும் சட மாயன் குறவர் என்றும் தெளிவாகப் பதிவிட்டுள்ளார்.[8] இவ்வாறு நாடு கடத்தலுக்கு உள்ளான இம்மூவருள் சட மாயன் குறவர் தவிர ஏனைய இருவரும் இடைக் காலத்திலேயே இறந்துவிட்டமையால், சட மாயன் குறவர் மட்டுமே தமது சிறைத் தண்டனைக் காலம் முடிந்து, பினாங்கிலிருந்து கருமாத்தூர் திரும்பியதாகவும் அதனால் அவர்க்கு மட்டுமே கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவிலில் சிறப்பு மரியாதை அளிக்கப்பட்டதாகவும் திரு. சுந்தர வந்தியத்தேவன் மேற்குறிப்பிட்ட தமது வரலாற்கு நூலில் முறையாகப் பதிவிட்டுள்ளார்.[9]

## 3.0 தொன்மைக் கதையாக மாற்றம் அடைந்துள்ள மேலும் ஒரு வரலாற்று நிகழ்வு பற்றிய சிறு அறிமுகம்

கருமாத்தூர் பகுதியை சார்ந்த பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர் கீழ் நாடு, மேல் நாடு என இரு வேறு நிலப்பரப்புகளில் இரு வேறுபட்ட பிரிவினராக வாழ்ந்து வந்ததாகவும் இவ்விரு

[8] மேற்படி நூலாசிரியர் திரு. சுந்தர வந்தியதேவன் – அவர்களைக் கடந்த 10.11.2024 அன்று உசிலம்பட்டிக்குச் சென்று அவரது வீட்டில் நேர்காணல் நிகழ்த்தியபோது, ‘சட மாயன் என்கிற பெயர் பிறமலைக் கள்ளர் வைத்துக்கொள்ளும் பெயர் எனவும் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினரான தாம் நினைத்திருந்தால், சட மாயன் என்பவர் குறவர் என அடையாளம் காட்டாமல் மிக எளிதாக அவரைப் பிறமலைக் கள்ளர் என்றே நூலில் பதிவிட்டிருக்கலாம் எனவும் ஆனால், தாம் வரலாற்றைப் பதிவு செய்யும்போது, உள்ளதை உள்ளவாறே பதிவிட வேண்டும் அதுவே சரியான ஆய்வு நெறி’’ எனத் தமது நூலில் முறையாகப் பதிவிட்டதாகவும் குறிப்பிட்டமை இங்குக் குறிக்கத் தக்கது.

[9] காண்க: வந்தியத்தேவன், சுந்தர 2011 பிறமலைக் கள்ளர் : வாழ்வும் வரலாறும். சென்னை : சந்தியா பதிப்பகம்.

பிரிவினர்க்கும் இடையே கருத்து முரண் ஏற்பட்டு அதனால் மோதல் நிகழ்ந்தபோது, சங்கன், மாயாண்டி என்னும் இரு குறவர் சமுதாயத்தினர் அவ்விரு பிரிவினர்களுக்கு இடையேயான பிரச்சினையில் தலையிட்டு, அப்பிறமலைக் கள்ளர் குழுக்களுக்கு இடையில் நிலவிய பகைமையைப் பேசி தீர்த்து வைத்ததாகவும் களப்பணி ஆய்வின்போது ஒரு வாய்மொழி வரலாற்று நிகழ்வு குறித்து நாகமலைப் புதுக்கோட்டை திரு. சங்கரமூர்த்தி கூறினர். இதிலிருந்து, பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்த இரு பிரிவினர்க்கு இடையே ஏற்பட்ட பகை முரணைத் தலையிட்டுப் பேசி, இணக்கமான சமுதாய உறவு மலர்ந்திட உதவிடும் அளவிற்குக் குறவர் சமுதாயத்தினர் கருமாத்தூர் பகுதியில் சமூகப் படிநிலையில் (Social Hierarchy) உயர்நிலையினராகத் திகழ்ந்து இருந்தனர் என்பது தெரியவருகிறது.[10]

மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தில் மக்கள் தொடர்பு அலுவலராகப் (Public Relation Officer) பணி புரிந்து பணி

[10] நாஞ்சில் குறவர் கோன் எனும் பெயரில் அன்றைய நாஞ்சில் நாடான இன்றைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளை ஆண்ட குறுநில மன்னராக குறவர் சமுதாயத்தினர் பேரும் புகழும் மிக்கோராக விளங்கிய வரலாற்றுச் செய்தியை இங்கே ஒப்பு நோக்கலாம்.

நிறைவு அடைந்துள்ள திரு. பெரிய கருப்புத் தேவர் அவர்களிடம் நிகழ்த்தப்பட்ட நேர்காணலின்போது அவர் தெரிவித்த கீழ்க் குறித்துள்ள ஒரு தொன்மைக் கதை (Mythological Tale) மேலே குறித்த வரலாற்று நிகழ்வுடன் ஒப்ப அமைந்துள்ளது:

'ஒரு முறை விருமன் என்கிற தெய்வத்திற்கும் பேக்காமன் என்கிற தெய்வத்திற்க்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் இருவரும் தமக்குள் போர் புரிய, அதைத் தடுத்து நிறுத்தியதுடன் அவ்விருவர்க்கும் இடையே மத்யஸ்தம் ('சமரசம்'') செய்த வைத்தது ஒரு முனி இதனாலேயே, அது மத்தியஸ்த முனி என்று இன்றும் அறியப்படலாகிறது.[11]

கீழ்நாட்டுப் பிறமலைக் கள்ளர், மேல்நாட்டுப் பிறமலைக் கள்ளர் என இரு வேறு பிரிவினராக விளங்கிய கள்ளர் சமுதாயத்தினர் இடையே தோன்றிய கருத்து வேறுபாடு, பகை முரண், மோதல், (குறவர் தலையீட்டால்) சமரசம் ஏற்படுதல் என்பனவற்றையே மேற்படி தொன்மக் கதையானது சுட்டுவதை நாம் உய்த்து உணரலாம். இதிலிருந்து, மேலே சொல்லப்பட்ட வரலாற்று நிகழ்வே பின்னர் தொன்மக் கதையாக மாற்றம் அடைந்துள்ளமை புலப்படும்.

## 4.0 நேரிடைக் களப்பணி ஆய்வுகளின் வழியே பெறப்பட்டுள்ள ஆய்வு முடிவுகள்

கடந்த 10.11.2024 அன்று கருமாத்தூர், உசிலம்பட்டி மற்றும் நாகமலைப் புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் (இக்கட்டுரை ஆசிரியர்) மேற்கொண்ட நேரிடைக் களப்பணி ஆய்வுகள் வாயிலாக கீழ்க் குறித்துள்ள ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன:

[11] இன்றும் மத்திச முனி கோவில் என்கிற பெயரில் கருமாத்தூர் நெடுஞ்சாலையில் ஒரு கோவில் உள்ளது.

*4.1.* கீழ் நாடு என்று அறியப்படும் இராமநாதபுரம் பகுதியிலிருந்து, முதலில் காரியாப்பட்டியை அடுத்த பாஞ்சார் என்கிற ஊருக்கும் பிறகு, கருமாத்தூரை ஒட்டிய கரிசல்பட்டிக்கும் பிழைப்பிற்காகக் குடியமர்ந்த குறவர் சமுதாயத்தினர் அங்கேயே தங்கி, நாளடைவில் அங்கே பூர்வீகமாக வாழ்ந்து வரும் பிறமலைக் கள்ளர் சமுதாயப் பெண்களுக்குக் காது வளர்ப்பதையும்[12] ஆண்டுதோறும் கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவின்போது பள்ளயப் ('படையல்") பொருள்களைப் (Objects of Ritual Oblation) பங்காளிகளுக்கு இடையே பங்கிட்டுக் கொள்வதற்கென மூங்கில் நாரால் புதிதாகப் பின்னப்பட்ட பள்ளயக் கூடைகளை அளிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

*4.2.* ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவின்போது தாங்கள் அளித்திடும் மூங்கிலாலான புதிய பள்ளயக் கூடைகளுக்காகவும் பிறமலைக் கள்ளரினப் பெண்மணிகளுக்குக் காது வளர்த்திட உதவுவதற்காகவுமே மேற்படித் திருவிழா நடைபெறும் நாளில் தங்களுக்குக் கோவில் முதல் மரியாதையாகப் பரிவட்டம் கட்டிப், பள்ளயப் பொருள்களின் ஒரு பங்கையும் மாயாண்டி, சங்கன், சட மாயன் குறவர் வழிவந்த தங்களுக்கு அளிப்பதாக நாகமலைப் புதுக்கோட்டையில் வாழ்ந்து வரும் திரு. சங்கரமூர்த்தி கருதி வந்துள்ளார்[13]. நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன் சின்னக்கண்ணு சேர்வையைக் கொன்றுவிட்டு, வயிற்றில் குத்தப்பட்டுக் குடல்

[12] பொதுவாகக், காது மடலின் கீழ்ப்புறத்தில் கத்தியால் கீறித் துளையிட்டுப், பின் அப்புண் ஆறிட மூலிகை மருந்திட்டு, அடுத்து அக்காது மடல் துளையில் கனமான குணுக்கு எனும் உலோக வளையங்களை ஒன்றன்பின் ஒன்றாக சேர்த்து, அதன்வாயிலாகக் காது மடலைக் கீழ் நோக்கித் தொங்குமாறு செய்வித்துக், காலப்போக்கில், தண்டட்டி, பாம்படம் என எடைமிகு காதணிகளை அணியத் தக்க வகையில் செய்வதையே காது வளர்த்தல் என்று குறிப்பிடுகின்றனர் தொடக்க காலத்தில் இது முக்குலத்தோர்க்கான இனக்குழு அடையாளமாகத் (Ethnic Indicator) திகழ்ந்து, நாளாவட்டத்தில் பெரும்பான்மைத் தென் மாவட்டப் பெண்டிரது வட்டார அடையாளமாக ஆகிவிட்டது.

[13] தற்போதைய குறவரின வாரிசுதாரர் திரு. சங்கரமூர்த்தியின் சிறிய தந்தையார் (தந்தையாரின் தம்பி) பெயரும் சட மாயன் என்கிற தகவலானது, ஒரு குல முதல்வனாக (Cult Hero) சட மாயன் கருதப்பட்டமையைக் காட்டும்.

சரிந்து தப்பிய ஆண்டியப்ப தேவர்க்கு உற்றுழியாக உதவிய குறவரினப் படை வீரனுக்கு அளித்துவந்த உரிய முதல் மரியாதையே அவரது வாரிசான தமக்குத் தற்போது வரை அளிக்கப்படுகிறது என்கிற சமூக வரலாற்று நிகழ்வு பற்றி அவர்க்குத் தெரியவில்லை.

*4.3.* பிழைப்பிற்காக நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதியிலிருந்து கருமாத்தூரை அடுத்த கரிசல்பட்டிக்கு வந்து குடியமர்ந்த குறவர் சமுதாயத்தினர் கீழ் நாடு, மேல் நாடு என இரு வேறு வாழ்விடப் பரப்புகளில் இரு பிரிவினராக வாழ்ந்து வந்த பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர்க்கு இடையே மோதல் ஏற்பட்டபோது, அவ்விரு தரப்பினர்க்கும் சமரசம் செய்து வைக்கும் அளவிற்குப் பின்னாளில் குறவரின மக்கள் சமுதாய நிலையில் உயர்ந்துவிட்டனர்.

*4.4.* நாகமலைப் புதுக்கோட்டையின் ஜமீன்தாரர் சின்னகண்ணு சேர்வையைக் கொல்வதற்குத் திட்டமிட்ட ஆண்டியப்பத் தேவர்க்கு உறுதுணையாக உடன் இருந்து, கொலை முயற்சியின்போது வயிற்றில் குத்துபட்டுக், குடல் சரிந்த நிலையில் இருந்த ஆண்டியப்ப தேவரைக் குதிரை மேல் ஏற்றிப், பாதுகாப்பாகக் கருமாத்தூர் ஊர் எல்லை வரை கொண்டு வந்து சேர்த்திட்டமைக்கு அக் குறவரின் வீரனுக்கும் அவனது காலத்திற்குப் பின் அவன் சந்ததியினர்க்கும் கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவின்போது பரிவட்டம் கட்டி, பள்ளயப் பொருள்களின் ஒரு பங்கினையும் அளித்து முதல் மரியாதை நிகழ்த்தப்படுகிறது.

*4.5.* மருது சகோதரர்கள் மறைவிற்குப் பிறகு பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்ட 73 பேர்களுள் கருமாத்தூரை சார்ந்த மூவருள் குறவரின சட மாயன் நினைவைப் போற்றும் வகையில் கருமாத்தூர் பகுதி வாழ் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர் சட மாயன் குறவரைத் தமது உறவாகவே

கருதுவதுடன், தங்களையும் குறவர் சமுதாயத்தினர் என்றே நன்றிப் பெருக்குடன் பெருமை பொங்க இன்றும் குறிப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.[14]

## 5. நிறைவுரை

மருது சகோதரர் மறைவிற்குப் பின் நாடு கடத்தப்பட்ட 73 பேர்களுள் ஒருவர் கருமாத்தூர் சட மாயன் குறவர் என்கிற ஒரு சிறு குறிப்பின்வழியே மேற்கொள்ளப்பட்ட ஆய்வினால், மதுரை மாவட்டம் கருமாத்தூர் பகுதியை சார்ந்த பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர்க்கும் குறவர் சமுதாயத்தினர்க்கும் இடையில் காலம் காலமாக நிலவும் வரலாற்றுப், பண்பாட்டுத் தொடர்புறவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய சமூக வரலாற்று ஆய்வுகள் மேன்மேலும் பெருக வேண்டும்.

[14] நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன் சின்னகண்ணு சேர்வையைக் கொல்லும் திட்டத்தில் உடனிருந்து உதவ ஒப்புக்கொண்டதுடன், அம்முயற்சியின்போது வயிற்றில் குத்துபட்டுக், குடல் சரிந்த நிலையிலிருந்த சமூகப் போராளியான ஆண்டியப்ப தேவரைப் பாதுகாப்பாகக் குதிரையில் ஏற்றிக், கருமாத்தூர் ஊர் எல்லை வரை உடன் பயனித்து உதவிய குறவரினப் படை வீரனைப் பெயர் எதுவும் குறிப்பிடாமல், குறவர் என்று மட்டுமே இவ்வாய்மொழிக் கதையில் குறிப்பிடப்பட்டாலும் அதே சம காலத்தில் பினாங்கு சிறையிலிருந்து விடுதலையடைந்து ஊர் திரும்பிய கருமாத்தூர் சட மாயன் குறவர் என்கிற பெயரையே மேற்படிக் குறவரினப் படை வீரனுக்கும் இட்டுச் சொல்லும் மரபானது பின்னாளில் ஏற்பட்டுவிட்டதாகக் கருதலாம் அதனாலேயே, பினாங்கு சிறையிலிருந்து விடுதலைக்குப் பின் ஊர் திரும்பிய சட மாயன் குறவரை ஒச்சாண்டம்மன் கோவிலின் உள்ளே அனுமதிக்கப் பிறமலைக் கள்ளர் தயங்கியபோது, படையலுக்கென உலையில் வைத்த பொங்கல் பானையானது பொங்காமல் நின்றுவிட்டதாகவும் சட மாயன் குறவரைக் கோவிலுக்கு உள்ளே வர அனுமதித்த பிறகே, பொங்கல் பானை பொங்கியதாகவும் ஒரு வாய்மொழிக் கதையும் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினரிடம் வழக்கில் உள்ளது.

## நோக்கீட்டு ஏடுகள் (தமிழில்)


| | | |
|---|---|---|
| மகேசுவரன், சி. | *2023* | ‘கொங்கு நாட்டின் இன்றைய பழங்குடியினரது வாழ்வியற்பாங்குகள்’’. பண்பாட்டு வாழ்வியல் (பண்பாட்டியல் பற்றிய முழுதளாவிய பார்வை). சென்னை : பாரதி புத்தகாலயம். |
| மகேசுவரன், சி. | *2024* | ‘குமரி மாவட்ட வேளிமலைக் குமாரகோவில் திருக்கோவில் முருகன் - வள்ளி திருமண நிகழ்வின்போது நடத்தப்படும் குறவர் படுகளம் பெறும் சிறப்பிடம்’’ (அனைத்துலக முருகன் ஆய்வு மாநாட்டில் படித்தளிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை). பழனி : இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை. |
| ராஜேந்திரன். மு. | *2020* | காலா பானி. அம்மையப்பட்டு, வந்தவாசி : அகழி பதிப்பகம். |
| வந்தியத்தேவன், சுந்தர | *2011* | பிறமலைக் கள்ளர் : வாழ்வும் வரலாறும். சென்னை : சந்தியா பதிப்பகம். |


## நன்றியுரை


*முகநூலில் பகிரப்பட்ட சட மாயன் குறவர் என்கிற ஒரு சிறு குறிப்பைத் தொடக்கப் புள்ளியாக வைத்து, நேரிடைக் களப்பணி ஆய்வுகள், தகவலாளிகளுடன் நேர்காணல்கள் உள்ளிட்ட தொடர் முயற்சிகள்வழியே குறவர், பிறமலைக் கள்ளர் என்னும் இரு வேறு சமுதாயத்தினர்க்கு இடையே நிலவிடும் தொடர்புறவை வெளிப்படுத்தி, வரலாற்றுப் பதிவின் ஒரு முழுதளாவிய வரைவாக அதனை மீட்டுருவாக்கம் செய்திட அனைத்து உதவிகளையும் புரிந்த திரு. மு. சுந்தரராஜன் (கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பணி நிறைவு), காவல் துறை, தமிழ்நாடு அரசு) - அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.*

# கொல்லிமலை மலையாளிப் பழங்குடிகளின் சிறுதானிய வேளாண்மையும் அகத்தார் வகைப்பாடும்

**ரா. ரெங்கலட்சுமி***

*கட்டுரைச் சுருக்கம்: கொல்லிமலை மலையாளிப் பழங்குடிகள் உணவுத்தேவை, உயிரியல், நடைமுறை வாழ்க்கை மற்றும் சூழலியல் சார்ந்த பட்டறிவு கொண்டு பல வகையான சிறுதானியப் பயிர் மற்றும் இரகங்களைப் பயிரிட்டு வருகின்றனர். பொதுவாக, அகத்தார் வகைப்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட பழங்குடி சமூகத்தின் அல்லது அந்த குறிப்பிட்ட வட்டாரத்தில் உள்ள சமூகங்களின் கூட்டு நினைவுத் திறன் மற்றும் பாரம்பரிய அறிவாகும். சிறுதானியங்களின் அகத்தார் வகைப்படுத்துதல், மலையாளப் பழங்குடிச் சமூகத்தின் நீண்டகால அனுபவம் எவ்வாறு அப்பயிர்களை வகைப்படுத்துவதில் அவர்கள் அவற்றைக் கண்டுணர்ந்த அனுபவத்தின் அடிப்படையில் வேறுபடுத்திப் பெயரிடுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இந்த வகைப்பாடு உயிரியல் பண்புக்கூறுகளோடு அவர்களின் சமூகப் பண்புக்கூறுகளையும் இணைத்து சிறுதானிய பன்மையை பகுத்து, வகைப்படுத்தி, பாதுகாத்து இந்த பாரம்பரிய அறிவினை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதற்குமான வழிமுறையாகவும் பயன்படுகிறது. வகைப்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்ட காரணிகள்வெளித்தோற்றத்தின்அடிப்படையில்எளிதாகவேறுபடுத்த பயன்பட்டாலும் அவை மரபணு ரீதியாக மாறாமல் சுற்றுசூழலினால் பாதிக்கப்படாமல் தொடர்ந்து அடுத்த தலைமுறைப் பயிர்களிலும் மாறாமல் இருக்கக்கூடிய பண்புகளுடன் தொடர்புடையதைக் காண முடிகிறது. வகைப்படுத்துதல், மற்றும் அதனோடு தொடர்புடைய பாரம்பரிய அறிவுத்திறனில் அவர்களின் பாலின வேறுபாடும், வயதும் முக்கியப்பங்கு வகிக்கின்றன. அகத்தார் வகைப்பாடு குறித்த புரிதலும், சிறுதானியங்கள் பயிரிடுவதில் அதன் பயன்பாடும் குறித்து ஆவணப்படுத்தும் முயற்சி அம்மக்களின் எதிர்கால உணவு உற்பத்தி, சுற்றுச்சூழல், உடல் நலம், மரபார்ந்த உரிமைகள் பாதுகாப்பு ஆகிய மேம்பாட்டுச் செயல்பாடுகளைத் திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.*

* *நிர்வாக இயக்குனர், ம.சா. சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்*

## முன்னுரை

*உலகம் முழுமையும் பழங்குடிச் சமூகங்கள் பல தலைமுறைகளாக தங்களுடைய மரபான வாழிடங்களில் இயற்கையுடன் இயைந்து வாழ்ந்து வருகின்றனர். இயற்கைச் சூழலுடன் அவர்களுக்கு இருக்கும் இந்த நெருக்கமான உறவு அவர்கள் வாழும் சூழலில் உள்ள தாவரங்கள், பறவைகள், விலங்குகள், மற்றும் பிற இயற்கை வளங்களான மண், நீர், காற்று, அதோடு தட்ப வெப்பம் இவைகள் பற்றிய தெளிவான பார்வையையும், ஆழமான அறிவையும் கொண்டு அவற்றை தங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்தியும், பாதுகாத்தும் அதோடு அவ்வளங்களை மேம்படுத்தியும் வருகின்றனர்.*

*நீண்டகால அனுபவத்தில் அவர்கள் பெற்றிருக்கும் இந்த அனுபவப் பட்டறிவு அவர்களுக்கு தங்கள் உணவிற்கான பொருள் சேகரிப்பு, பயிர் உற்பத்தி, உடல் நலம் பேணும் மருத்துவத்திற்கு பயன்படும் காட்டுத் தாவரங்கள், வனவளம், நில, நீர், மற்றும் மண் வளம், போன்ற இயற்கைவளங்களை பராமரித்து தங்களின் தேவைகளுக்கு தகுந்த முறையில் வளங்குன்றாமல் பயன்படுத்த உதவுகிறது.*

*இனக்குழுஅறிவியல் (*Ethnoscience*) ஒரு சமூகத்தின் நீண்டகால வாழ்வனுபவத்தின் அடிப்படையில் அக்குறிப்பிட்ட சமூகம் முழுமையும் பெற்றிருக்கும் கூட்டறிவு, அச்சமூகம் அதன் பல்வேறு செயல்பாடுகளுக்கான பயன்படு பொருட்கள், செயல்பாடுகள், நிகழ்வுகள் ஆகியவற்றை அச்சமூக பண்பாட்டுச் சூழலில் எவ்வாறு வகைமைப்படுத்துகிறது என்பதை அறிய உதவும் கருத்தாக்கம் (*Fowler, *1977) ஆகும். அந்த வகைப்பாடுகளின் விவரிப்புகளும், விவரணைகளும் அச்சமூக மக்களின் அகப்பார்வை நோக்கில் இருக்கும். அகத்தார் வகைப்பாட்டின் முக்கியச் சிறப்பியல்பு யாதெனில் - அதனுடைய அனுபவப் பரிமாணம் (*empirical dimension*), அதன்படி தாவரங்களை வகைப்படுத்துவதில் ஒரு தாவர இனத்திற்கானப் பெயர், அத்தாவரத்தினைக் கண்டுணர்ந்த அனுபவத்தின் அடிப்படையில் இடப்படுகிறது. பின்கண்ட மூலகாரணங்களில் ஏதாவது ஒன்று அகத்தார் வகைப்பாட்டில் ஒரு தாவர வகையினை பெயரிடுவதற்கான காரணமாக அமைகிறது. 1. ஒரு*

தாவரத்தின் பொதுத் தோற்றம் அல்லது ஒரு குறிப்பிட்ட பாகத்தின் தோற்றம், 2. தாவரத்தின் நிறம் அல்லது குறிப்பிட்ட பாகத்தின் நிறம், 3. அத்தாவரத்தின் அல்லது அதனுடைய பாகங்களின் சுவை அல்லது மணம், 4. தாவரத்தின் சாறு, 5. தாவரத்தின் அல்லது அதன் பாகங்களின் பயன்பாடு, 6. தாவரத்தின் வளர்ச்சி குணாம்சம், 7. தாவரம் தோன்றிய இடம், 8. தாவரம் வளரும் அல்லது பூக்கும் பருவம்.

மேற்கூறிய கருத்துகளின்படி உயிரியல் மற்றும் சூழலியல் சார்ந்த பட்டறிவு பழங்குடிச் சமூகங்களின் பண்பாட்டுச் செயல்பாடுகள், மொழி, மதிப்பீடுகள் ஆகியவற்றுடன் உட்பிணைந்து வகைப்படுத்தி அந்த சமூகத்தின் கூட்டறிவாக வகைப்பாடு செய்து அதை அகத்தார் வகைப்பாடாக (native classification) தினசரி நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றுகிறார்கள்.

இந்த அகத்தார் வகைப்பாட்டு முறையானது, அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கானது. இதன் மூலம் அவற்றை அனைவரும் புரிந்து கொள்ளும் மற்றும் அடையாளம் காணும் வழக்கம்/வசதி அச்சமூகம் வாழும் வட்டாரத்திக்கான நடைமுறையாக உள்ளது. இத்தகைய அகத்தார் வகைப்பாடு அச்சமூகம் முழுமைக்குமான பொது அறிவினை வெளிப்படுத்தும் பொது மொழி. இவ்வகைப்பாடு பற்றிய தகவல்கள் அவர்களின் வாய்மொழி மரபுகள், நாட்டுப்புற வழக்காறுகளான பழமொழிகள், கதைகள், பாடல்கள், பண்பாட்டு நடைமுறைகள், வழிபாட்டு முறைகள், விடுகதைகள், திருவிழா கொண்டாட்டம் என பல பண்பாட்டுக் கூறுகளில் உள்ளடங்கி இருக்கும், மேலும் இப்பண்பாட்டு வழக்காறுகள் தொடர்ந்து பயன்பாட்டில் இருப்பதின் மூலம் இக்கூட்டறிவு அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இத்தகைய அகத்தார் வகைப்பாடானது சுவீடன் நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற தாவரவியலாளர் கரோலஸ் லின்னேஸ் (Carolus Linnaeus) உருவாக்கிய உலகிற்கு பொதுவான அறிவியல் ஆய்வுமுறை சார்ந்த நவீன உயிரியல் வகைப்பாட்டு முறையிலிருந்து (Modern classification) பல பரிமாணங்களில் வேறுபட்டது. லின்னேயஸ் உருவாக்கிய இந்த பொதுவகைப்பாடு முற்றிலுமாக தாவர உயிரினங்களின் புறநிலை தோற்றத்தின் அடிப்படையில் பொதுக் காரணிகளைக் கொண்டு வகைகளாகப் வெவ்வேறு படிநிலையில்

பிரிக்கப்பட்டு தனித்தனியாக பெயரிடப்பட்டு உருவாக்கப்பட்டது. இன்றளவும் இந்த வகைப்பாட்டு முறைதான் பொதுக் கல்விப்புலங்களிலும், ஆய்வு நிறுவனங்களிலும் கல்வியாளர்கள், அறிவியலாளர்கள் மத்தியிலும் தாவரங்கள் குறித்துப் பயில்வதற்கும், ஆய்வுகள் செய்வதற்கும் அனைவராலும் பின்பற்றப்பட்டு வருகிறது. மேலும் அண்மைக்காலங்களில் நிகழ்ந்த மூலக்கூறு உயிரியல் (molecular biology) வளர்ச்சியில் நிகழ்ந்த புதிய கண்டுபிடிப்புகள் இதிலிருக்கும் வகைபாடுகளை மரபியல் ரீதியாகவும் அறிந்து கொள்ள உதவுகிறது. இவ்வகைகயான நவீன அறிவியல் வகைப்பாட்டு முறை உயிரினங்களை மரபியல் காரணிகளின் அடிப்படையிலும் வேறுபடுத்தி வகைபாடுகளை உருவாக்குகிறது.

ஆனால் இதற்குமாறாக அகத்தார் வகைப்பாடானது பழங்குடி மக்களின் பயிர்கள், தாவரங்கள், பிற உயிரினங்கள் பற்றிய அன்றாட அனுபவத்தின் அடிப்படையில் அவர்களது வாழ்க்கை/உணவு/ சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு சார்ந்து அவர்கள் அவற்றை பகுக்கிறர்கள்; வகைப்படுத்துகிறார்கள்; பயன்படுத்துகிறார்கள்.

அகத்தார் வகைப்பாடு பொதுவாக படிநிலையில், அடுத்தடுத்த அடுக்குகளாக அமைந்திருக்கும். வகைப்பாட்டிற்கு எடுத்துக்கொண்ட பொருட்களின் ஒற்றுமையின் அடிப்படையில் சிலவற்றை ஒன்றிணைப்பது, அல்லது அவற்றிக்கு இடையே இருக்கும் வேறுபாடுகளின் அடிப்படையில் வெவ்வேறு வகைகளாகப் பிரிப்பது என்பதனை கருத்தில் கொண்டு வகைப்படுத்தப்படும்.

அகத்தார் வகைப்பாடு என்பதை ஒரு குறிப்பிட்ட பழங்குடி சமூகத்தின் அல்லது அந்த குறிப்பிட்ட வட்டாரத்தில் உள்ள சமூகங்களின் கூட்டு நினைவுத் திறன் மற்றும் பாரம்பரிய அறிவு என்றும் கருதலாம். இந்த நினைவுத்திறனைக் கொண்டு அச்சமூக மக்கள் வாழ்வின் நடைமுறைகளை நன்குப் புரிந்து கொள்ளவும், தேவைக்கேற்ப அவர்கள் சரியான முடிவினை எடுக்கவும் முடியும். மேலும் இது ஏற்கனேவே கூறியபடி முக்கியமாக அவர்களது பாரம்பரிய அறிவினை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதற்குமான வழிமுறையாகவும் பயன்படுகிறது.

## பழங்குடிகளின் 'அகத்தார் வகைப்பாட்டின்' முக்கியத்துவம்

பழங்குடிகளின் வேளாண்மையானது பொதுவாகவே சுற்றுச்சூழலுக்கு பாதகம் ஏற்படாதவாறு அதனுடன் இயைந்து இயங்கும் செயல்பாடாகும். இது முக்கியமாக பல்லுயிர் பன்மையம், மண் மற்றும் நீர் பாதுகாப்பு, மண் அரிமான தடுப்பு, அம்மக்களுக்குத் தேவையான உணவு, மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, கால்நடைகளுக்கு உணவு போன்ற பல நோக்கங்களை உள்ளடக்கியது. இவ்வேளாண்முறை சுற்றுச்சூழல் பண்படும் வகையில் இருப்பதோடு அங்கிருக்கும் இயற்கை வளங்களை அடுத்த தலைமுறைக்கும் வளம் குன்றாமல் பாதுகாக்கும் தொலைநோக்கு பார்வையும், சிந்தனையும், அதையொட்டிய அவர்களது செயல்முறைகளும் கொண்டதாகும். முக்கியமாக பழங்குடிகளின் வேளாண்மை அவர்களின் பாரம்பரிய அறிவு, அவர்கள் பேசும் மொழி, அவர்களின் தனித்துவமான வாழ்க்கை முறை, அடையாளம் இவற்றோடு பொருந்தியது.

பல தலைமுறைகளாக தங்களது வாழிடங்களில் சுற்றுப்புறச் சூழலுடன் ஒன்றிணைந்து வாழும் பழங்குடி ஆண்கள் மற்றும் பெண்களின் ஆழ்ந்த அனுபவ அறிவு என்பது அவர்களது பாரம்பரிய பயிர்களை விளைவிக்கும் முறை அதனை எவ்வாறு தங்களது உணவிற்கு பயன்படுத்துவது, அவர்களது உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்வது, கால்நடைத் தீவனங்களாக உபயோகிப்பது, பயிர்களின் பன்மையத்தினைப் பாதுகாப்பது என தினசரி வாழ்வில் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது, தவிர பயிரிடும் நிலத்தின் மண் மேலாண்மை, அந்நிலத்தினைச் சுற்றியுள்ள இயற்கைச்சூழலின் மேலாண்மையைப் பாதுகாப்பது போன்ற பிற அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

அகத்தார் வகைப்படுத்துதல், பழங்குடி மக்கள் எவ்வாறு தங்களின் அன்றாட வாழ்கையின் செயல்பாடுகள், தேவைகள் இவற்றின் அடிப்படையில் தாவரங்கள், விலங்குங்கள் மற்றும் பிற இயற்கைவளங்களை பயன்படுத்தினார்கள் என்பதை அறிய உதவும். இதன் வழியாக அவர்கள் பாரம்பரிய அறிவு, பல்லுயிர் பன்மையப் பாதுகாப்பு முறைகள் மேலும் அவ்வளத்தினை எவ்வாறு

நிலையான வளங்குன்றா முறையில் பயன்படுத்துதல் மேலும் மறைந்து போகாமலிருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள், போன்றவற்றை அறிந்து கொள்ளலாம். மனித இனத்திற்கும், பிற உயிரினங்களுக்கும் இடையேயான உறவுகளை/தொடர்புகளை அறிந்து அதனை மேம்படுத்த தேவையான அணுகுமுறைகளை வகுக்க உதவி புரியும். இந்தப் புரிதலின் அடிப்படையில் அவர்கள் பயன்படுத்தி வரும் அந்தப் பாரம்பரிய பயிர்களை, தாவரங்களை மறைந்து போகும் நிலையிலிருந்து காப்பாற்றவும், மேலும் மேம்படுத்தவும் உத்திகள் வகுக்கலாம்.

அகத்தார் வகைப்படுத்துதலில் வேளாண் குடிகள் அவர்கள் பயிரிடும் பயிர்களின் உயிரியல் பண்புக்கூறுகளோடு அவர்களின் சமூகப் பண்புக்கூறுகளையும் இணைத்து வகைப்படுத்துவர். இதில் பயிர்களின் வெளிப்புறத் தோற்றம், வளரும் இடம், தகவமைத்துக்கொள்ளும் பண்பு, உழவியல் முறைகள், பயிர்களின்/தானியங்களின் பயன்பாடுகள், பயன்படுத்தும் விதம் என பல உயிரியல் மற்றும் பண்பாட்டுக்கூறுகள் அடங்கியிருக்கும். இது ஏற்கனேவே கூறியபடி அறிவியல் சார்ந்த உலகளாவிய பொது வகைப்பாடு போலன்றி ஒரு வட்டார அளவில் பயன்பாட்டில் இருக்கும் வகைப்பாடாகவே இருக்கும்.

இவற்றையெல்லாம் புரிந்து கொண்டு அம்முறையை அங்கீகரித்து அதனோடு தொடர்புடைய தனித்துவமான பாரம்பரிய அனுபவ அறிவு என நிரூபிக்கும் வாய்ப்புகள் இருப்பின் உழவர்களின் உரிமைகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகளை (Intellectual Property Right) அவ்வேளாண்முறையில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்குப் பெற்றுத் தருவதற்கும், பாதுகாப்பதற்கும் உதவியாக இருக்கும்.

## கொல்லிமலை மலையாளிப் பழங்குடிகள்

இந்தியாவின் பலமாநிலங்களில் விரிந்திருக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலையில் வாழ்ந்துவரும் பழங்குடிகள் பலவகையான சிறுதானியங்களைப் பயிரிடுவது ஒரு தனித்துவமான வேளாண்முறையாகும். இதில் தமிழ் நாட்டில் உள்ள மலையாளிப் பழங்குடிகளும் அடங்குவர். தமிழ் நாட்டில் உள்ள பழங்குடிச் சமூகங்களில் மலையாளிப் பழங்குடிச் சமூகமே அதிக மக்கள் தொகை

கொண்ட சமூகம். இச்சமூகமானது தமிழ் நாட்டில் கிழக்கு தொடர்ச்சி மலை நிலப்பரப்பில் வட மாவட்டங்களில் உள்ள கொல்லிமலை, பச்சமலை, கல்ராயன் மலை, ஜவ்வாது மலை போன்ற மலை பகுதிகளில் வேளாண்மையைப் பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

மலையாளிப் பழங்குடிகளால் கொல்லிமலை இன்று பல பயிர்களின் தாயகமாக தொன்மை மிக்க பல்லுயிர் பன்மையப் பகுதியாக இருக்கிறது. மேலும் தென்னிந்திய வரலாற்றில் கொல்லிமலைக்கு முக்கிய இடம் உண்டு. தமிழ் மொழியின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்க இலக்கியங்களில் கொல்லிமலை பற்றிய குறிப்புகளைக் காணலாம். அகநானூறு, புறநானூறு, நற்றிணை போன்ற சங்க இலக்கியங்களில் ஓரி என்ற புகழ்பெற்ற மன்னன் ஆண்ட கொல்லிமலையின் பல்லுயிர் பெருக்கத்தைப் பற்றிய பல குறிப்புகள் உள்ளன. கொல்லிமலையில் விளையும் பலாப்பழத்தின் தனித்துவத்தைப் பற்றிப் பரணர், கல்லாடனார் போன்ற சங்க காலப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனனர்.

வரலாற்றுத் தரவுகளின்படி மலையாளிகள் கொல்லிமலையின் பூர்வீகக்குடிகள் அல்ல, அவர்கள் 15 ஆம் நூற்றாண்டில் தான் கொல்லிமலைக்கு காஞ்சிபுரம் சமவெளி பகுதிலிருந்து இடம் பெயர்ந்ததாக தரவுகள் தெரிவிக்கின்றன. மலையாளிகள் சமூகம் கொல்லிமலைக்கு இடம்பெயர்ந்தது தொடர்பான வாய்மொழி வழக்காறுகள் ஆங்கிலேய இனவரைவியலாளர் தர்ஸ்டனால் (1912) பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரின் கூற்றுப்படி, மலையாளர் என்ற சொல் மலைகளில் வசிப்பவர்களைக் குறிக்கிறது (மலை - மலைகள், ஆலர் - மக்கள்). அவர்கள் வேளாண்மையைத் தொழிலாக கொண்டவர்கள் எனவே வெள்ளாளர்கள் அல்லது வேளாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். மலையாளிகள் ஏன் கொல்லிமலைக்கு வந்து குடியேறினார் என்பதற்கு பல கூற்றுகள் உள்ளன. அவர்களின் புலம்பெயர்ந்த வரலாற்றிக்கான தரவுகள் அவர்களின் நாட்டுப்புற பாடல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது, இது ‘நாட்டுக்கட்டு’ என்ற வகையாக பிரபலமாக அறியப்படுகிறது. அவர்களின் வெவ்வேறு கூற்றுகளில் புலம் பெயர்விற்கான காரணங்கள் வேறுபட்டாலும், இந்த பதிப்புகள் அனைத்தும் காஞ்

சிபுரத்தில் இருந்து புலம் பெயர்ந்த வெள்ளாளகுல விவசாயிகள் என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

கொல்லிமலை, தமிழ்நாட்டிலுள்ள நாமக்கல் மாவட்டத்தில், சிறுநீரகபீன்ஸ் வடிவில் 283 சதுர கிமீ பரப்பளவைக் கொண்டுள்ள மலைப் பகுதியாகும். கடல் மட்டத்தில் இருந்து இம்மலை 3,500 அடி உயரத்திற்கு மேலே உள்ளது. மலையின் மிக உயர்ந்த இடம் கடல் மட்டத்திலிருந்து 4663 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது. கொல்லிமலை 16 பஞ்சாயத்து கிராமங்களையும், 273 குக்கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது. கொல்லிமலையின் உட்பகுதி பல மலை முகடுகளையும், மலைச்சரிவுகளையும் பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளது. கொல்லிமலையின் வடக்குப் பகுதி அதிக சமவெளி பகுதியினையும் பிற பகுதிகள் அதிக மலைப்பாங்கான பகுதிகளையும், காடுகளையும் கொண்டுள்ளன. இப்புவியியல் அமைப்பு, மலையாளிப் பழங்குடி மக்களின் வேளாண்மை பல்லுயிர் பன்மையம் கொண்ட பகுதியாக திகழ்வதற்கு ஒரு முக்கிய காரணியாகும்.

மலையாளிப் பழங்குடி மக்களின் வாழ்வாதாரம் பாரம்பரியமாக விவசாயத்தைச்சார்ந்தது. அவர்கள் தங்களின் முன்னோர்களிடமிருந்து பெற்ற பாரம்பரிய அறிவு மற்றும் அவர்களின் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் இயற்கை வளங்களை தங்களின் வாழ்வாதாரத்திற்கு உகந்த முறையில் பயன்படுத்தி பயிரிட்டு வந்தனர். மலையாளிகள் பின்பற்றிய பாரம்பரிய விவசாயம் மற்றும் மரப்பயிர் வளர்ப்பு முறை அவர்களின் வாழ்விலும் வாழ்வாதாரத்திலும் முக்கிய பங்கு வகித்தது. கடந்த காலத்தில் அவர்களின் பாரம்பரிய விவசாயம் அதிக அளவு வேளாண் பல்லுயிர் பன்மையத்துடன் தங்கள் குடும்பத்தின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு பயிர்களை விளைவிக்கும் வேளாண்மைமுறையாக இருந்தது. அவர்களது வேளாண்மையில் முக்கியமான பயிர்களாக பலவகையான பாரம்பரிய சிறு தானியங்கள், நெல், பயறு வகைகள், மரவள்ளிக்கிழங்கு, அன்னாசி போன்றவை இருந்தன. அவற்றில் சிறு தானியங்களை முக்கியமாக அவர்களின் உணவுத் தேவைக்காகப் பயிரிட்டுப் பயன்படுத்தி வந்தனர். மனிதன் ஆதியில் பயிர் செய்ய தொடங்கிய போது முதன் முதலில் பயிர் செய்தது வெவ்வேறு

வகையான சிறுதானிய பயிர்களே ஆகும். உலகில் உற்பத்தியாகும் சிறுதானியங்களில் 90 விழுக்காடு மக்களுக்கு உணவாகப் பயன்படுகிறது. இன்றும் உலகில் குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க கண்டங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் முக்கிய உணவாக சிறுதானியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் கடந்த நாற்பது வருடங்களில் மலையாளிகளின் உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டு நெல் அவர்களின் முக்கிய உணவு தானியமாக மாறியிருக்கிறது. இதனால் தற்போது சிறுதானியங்களின் பயிரிடும் முறை மாறி அதனைச் சார்ந்த பாரம்பரிய அறிவும் அதனோடு தொடர்புடைய பண்பாட்டுச் செயல்பாடுகளும் மாறி வருகின்றன. சந்தையின் தேவைக்கான பணப்பயிர்களின் ஊடுருவல், முக்கியமாக மரவள்ளிக்கிழங்கு மற்றும் ஓரளவிற்கு அன்னாசிப்பழம் மற்றும் இவற்றைத்தொடர்ந்து வந்த சில்வர் ஓக் (Silveroak), காபி, மிளகு மற்றும் பிற தோட்டப் பயிர்கள், விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை தன்னிறைவு விவசாய உற்பத்தி முறையிலிருந்து பணப்பயிர் சார்ந்த உற்பத்திக்கு மாற்றியது. இது முக்கியமாக பல வகையான சிறுதானிய பயிர்களின் உற்பத்தியினை பாதித்தது, இதனால் மலையாளி மக்களின் உணவுப் பழக்கத்திலும் மாறுதல் ஏற்பட்டது. கடந்த நாற்பது ஆண்டுகளாக சிறுதானியங்கள் பயிரிடும் பரப்பும், உற்பத்தியளவும் கொல்லிமலையில் தொடர்ந்து குறைந்து கொண்டு வருகிறது. சிறுதானியங்கள் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து மிக்க உணவு இதனால் சிறுதானியங்கள் என்பதற்கு மாற்றாக ஊட்டச்சத்து தானியங்கள் (Nutri millets) என்று புதிய பெயருடன் அழைக்கப்படுவது வழக்கமாகி வருகிறது.

## மலையாளிப் பழங்குடிகளின் தனித்துவமான வேளாண்மை

கொல்லிமலையிலுள்ள மலையாளிப் பழங்குடிகள் தங்களது நீண்டகால அனுபவத்தில் பெற்ற பாரம்பரிய அறிவினையும் அங்குள்ள இயற்கை வளங்களையும் தேவைக்கேற்ப பண்படுத்தி மலை சரிவுகளில் உள்ள நிலங்களைச் சீர் செய்து எளிய முறையில் பயிர் செய்து வருகின்றனர். கொல்லிமலையில் சிறுதானியங்களில் இருக்கும் 'பன்மையம்' அத்தானியங்களுக்கே உள்ள தனிச்சிறப்பாகும். இதனால் இத்தானியங்களைப் கொல்லிமலையின்

நிலப்பரப்பில் பல்வேறு தட்பவெப்ப நிலையுள்ள பகுதிகளிலும் விளைவிக்க முடியும். தட்பவெப்பச் சூழலுக்கேற்பத் தகவமைத்துக் கொள்வதற்கான மாறுதல்களுடன் பல்வேறு இரகங்களை கொண்ட உள்வகைகள் உருவாகியிருப்பதால் வெவ்வேறு இயற்கைச் சூழ்நிலைகளிலும் சிறுதானியங்கள் விளைகின்றன. இதனால் ஒரு குறிப்பிட்ட ரகங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் அல்லது வட்டாரங்களில் மட்டுமே விளையும் தன்மையைக் கொண்டிருக்கிறது (தமிழ் ஒளி, 2020).

அவர்களின் அடுக்குநிலை வகைப்பாடு என்பதன் பொருள், பொதுவாக பயிர் வகைத்தாவரங்கள் மர வகை என்றும் நிலத்தில் விளைவிக்கும் பலவகைப் பயிர்கள், பழ வகை, கிழங்கு வகை, தானியப்பயிர் வகை என்றும் பிரிக்கப்படுகிறது, பிறகு தானியப்பயிர்கள் நெல், என்றும் சிறுதானியப்பயிர்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டு மீண்டும் சிறுதானியங்கள் பல வகைகளாகவும் மீண்டும் ஒவ்வொரு சிறுதானிய வகைகளிலும் உள்வகைகள் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மலையாளி பழங்குடி சமூகத்தினர் காலங்காலமாக அவர்களது முக்கிய உணவுப் பயிர்களான சிறுதானியங்களை எவ்வாறு விளைவித்தனர், பலவகையான சிறுதானியங்களை பாகுபடுத்தி வகைப்பாடு செய்து பயன்படுத்தினர், பாகுபடுத்த பயன்படும் காரணிகள், அப்பயிர்கள் குறித்த அவர்களது பாரம்பரிய அறிவு ஆகியவற்றை பின்வரும் பகுதியில் பார்க்கலாம்.

மலையாளிகள் பயிரிடும் சிறுதானியப் பயிர்களின் பட்டியலில் திணை, சாமை, கேழ்வரகு, வரகு, பனிவரகு ஆகிய ஐந்து வகைப்பயிர்கள் இடம் பெறுகின்றன. கொல்லிமலையின் வானிலை மற்றும் புவியமைப்பு ஆகியவை ஏற்கனேவே கூறியபடி எல்லா இடங்களிலும் ஒரே சீராக இருப்பதில்லை இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. இம்மாற்றங்களுக்கேற்ப குறிப்பிட்ட பகுதியின் சூழ்நிலைக்கும், நிலஅமைப்பிற்கும், மண்ணின் வகைக்கும் ஏற்ப அங்கு விளையும் சிறுதானியப் பயிர்களில் உள்ள பலவகையான இரகங்கள் அவைகளுக்குப் பொருத்தமானப் நிலப்பகுதிகளில் பயிரிடப்படுகின்றன (Rengalakshmi, 2005). இந்த ரகங்கள் முதிர்வு காலங்கள்/பயிரின் வயது, புறத் தோற்றம், வளர்ச்சி, மற்றும்

உணவாகப் பயன்படுத்தும் போது இருக்கும் தனித்துவமான சுவை, ஆகிய முக்கிய அம்சங்களில் ஒன்றிற்கொன்று வேறுபடுகின்றன.

நிலத்தின் அமைப்பினை பொறுத்து மலையாளிகள் வேளாண்மை செய்யும் நிலத்தினை மூன்று வகைகளாக பிரித்து அவைகளுக்கு

தனித்தனி பெயரிட்டு பயன்படுத்துகிறார்கள் அவை முறையே 1.வயல், 2. மேட்டாங்காடு, 3. கொல்லக்காடு அல்லது கொத்துக்காடு.

*வயல்:* இது மலை பள்ளத்தாக்குகளில் நீர்வரத்து அதிகம் உள்ள பகுதி, இங்கு பாரம்பரிய நெல் வகைகளைப் பயிரிடுகிறார்கள். வயல் வண்டல் மண்ணால் உருவான இரு மலைக்களுக்கிடையேயான பள்ளத்தாக்கு பகுதியாகும். இந்நிலத்தில் நீரோடைகள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருப்பதால் நெல் மட்டுமே பயிரிட முடியும். நீரோடை, நிலத்தடி நீர் மட்டம், மண்ணின் ஆழம் மற்றும் மண்ணின் ஈரப்பதத்தினைப் பொறுத்து வயலினை உழவு செய்யும் விதம், உரமிடும் முறை, பயிரிடும் நெல்லின் இரகங்கள், ஒரு வருடத்தில் எத்தனை முறை பயிர் செய்வது என்பன வேறுபடுன்றன.

*மேட்டாங்காடு:* மலைச்சரிவுகளில் உள்ள நிலப்பரப்பினை அதன் சாய்வுத் தன்மைக்கு ஏற்ப பல அடுக்குகளாகப் பிரித்து கற்களைக் கொண்டு அரண் அமைத்து பயிரிட ஏதுவாக நிலத்தை சமன் செய்து பயிரிடப் பயன்படுத்துவார்கள். இதனை ஆண்டு முழுவதும் தொடர்ந்து பயிர் செய்யப் பயன் படுத்துகிறார்கள். இங்கு பயிரிடப்படும் பயிர் வகைகள் மானாவாரி நெல், சிறு தானிய

இரகங்கள், பயறு வகைப் பயிர்கள், மரவள்ளி கிழங்கு ஆகியவை. கலப்பு பயிர் (mixed cropping) சாகுபடி இந்த மேட்டாங்காட்டில் நடைமுறையில் உள்ள முக்கியமான விவசாய முறையாகும். கலப்பு பயிர் முறை வயலில் ஐந்திற்கும் அதிகமான பயிர் வகைகளை கலந்து ஒரு நிலத்தில் ஒரே நேரத்தில் விதைக்கப்பட்டு நான்கிலிருந்து எட்டு மாதங்கள் வரையிலும் ஒவ்வொரு வகைப் பயிரும் முதிர்ச்சி அடையும் தருவாயில் அறுவடை செய்யப்படும் ஒரு உத்தி ஆகும். இது அவர்களுக்கு ஆண்டு முழுவதும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு பின்பற்றப்படுகிற வேளாண்முறையாகும். இதில் தங்களின் வீட்டுக்குத் தேவையான தானியம், பயறு, கடுகு, மொச்சை, காய்கறிகளுடன் வீட்டின் கூரை வேய மற்றும் கயிறு தயாரிக்க தேவையான நார்கள் ஆகியவை கிடைக்கும். இம்முறையின் மூலம் வெவ்வேறு உணவு மற்றும் ஊட்டச்சத்து கொண்ட பயிர்கள், வேறுபட்ட முதிர்வு காலங்கள், வீட்டுத் தேவைகள் மற்றும் வானிலை தொடர்பான இடர்களைத் தாங்கும் திறன் என கலவையானப் பயிரினங்கள் பயிரிடப்படுகிறது. இந்தமுறையில், உணவுப் பயிர்களான சிறுதானியங்களில் கேழ்வரகு, சாமை மற்றும் திணை போன்ற முக்கியப் பயிர்கள் தவறாமல் சேர்த்துப் பயிரிடப்படும்.

*கொல்லக்காடு அல்லது கொத்துக்காடு:* இது மலைச்சரிவுகளின் உயரமான மேல்பகுதிகளில் பாறைகளுடன் காணப்படும் நிலப்பகுதியாகும். இப்பகுதிகளில் உள்ள பலவகைத் தாவரங்களைக் கொண்ட புதர்களை வெட்டி எரித்து, நிலத்தினை பயிரிடுவதற்கு ஏற்ப தயார்படுத்தப்படுகிறது. இடப்பெயர்வு வேளாண்மை (Shifting or slash and burn cultivation) என்கிற பயிர்-தரிசு சுழற்சி முறையில் மூன்று முதல் ஐந்து வருட இடைவெளியில் பயிரும் தரிசும் மாறி மாறி வரும். கொல்லக்காட்டில் புதர்களை அகற்றி சிறுதானியங்கள் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு பயிர் செய்வார்கள். சாகுபடிக்குப் பிறகு, அடுத்த அதே போல மூன்று முதல் ஐந்து வருடங்களுக்கு வருடங்களுக்கு மீண்டும் புதர்கள் வளரும், பின்னர் மீண்டும் அடுத்த பயிர் சாகுபடிக்காக புதர்கள் வெட்டி எரிக்கப்பட்டு பயிரிடப்படும். புதர்களின் வளர்ச்சி விகிதம், ஆட்கள் கிடைப்பது, மழை பொழிவு போன்றவற்றைப் பொறுத்து ஒரே வயலில் அடுத்தடுத்து பயிர்களுக்கு இடையேயான தரிசு

இடைவெளி இருக்கும். செங்குத்தான கற்கள் நிறைந்த பகுதி, மேலும் நிலம் அதிகமாக சரளை மண்ணாக இருப்பதால் இங்கு உழவு செய்ய முடியாது, எனவே நிலம் கை கொத்து அல்லது மண்வெட்டி கொண்டு பண்படுத்தப்படுகிறது. இந்த நிலங்களில் நீண்ட கால பயிர்களான பெருஞ்சாமை மற்றும் பெருந்திணை போன்ற ரகங்கள் பொதுவாக பயிரிடத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இதனால் இந்நிலப்பகுதியில் வருடத்தில் ஒரே ஒரு பயிர் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் தற்போது, கொல்லக்காடு என்பது சில இடங்களில் அன்னாசிப்பழம் மற்றும் சில்வர் ஓக் போன்ற பிற நீண்டகால கனி மற்றும் மரப் பயிர்கள் பயிரிட பயன்படுத்தப்படுகிறது.

சிறுதானியப்பயிர்கள் மேட்டு நிலம், கொல்லக்காடு ஆகிய இரண்டு வகை நிலப் பகுதிகளிலும் பயிரிடப்படும். மேட்டு நிலத்தில் குறுகிய காலப் (மூன்றிலிருந்து நான்கு மாதம் வரை) பயிர் ரகங்களையும், கொல்லக்காட்டில் நீண்ட கால (ஐந்திலிருந்து ஏழு மாதம் வரை) பயிர் ரகங்களையும் பயிர் செய்வார்கள். பொதுவாக மலையாளி வேளாண் குடிகள் குறைந்தது இரண்டு அல்லது மூன்று வகையான சிறுதானிய பயிர்ரகங்களை முக்கியமாக தங்கள் குடும்பத்திற்கான உணவுத் தேவைக்காக தங்களிடம் இருக்கும் நில வகைப்பாட்டிற்கு ஏற்ப தொடர்ந்து பயிரிட்டு வருகின்றனர்.

சிறுதானியப் பயிர்களின் பயன்பாடு என்பது அப்பயிர்களிலிருந்து கிடைக்கும் தானியங்கள் மனிதர்களுக்கும், வைக்கோல் கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுகிறது. வைக்கோல் முந்தைய காலங்களில் வீடுகளுக்குக் கூரையாகவும் பயன்படுத்தப்பட்டது, தற்போது அந்த வழக்கம் அருகிவருகிறது. கரோலஸ் லின்னேஸ் அறிவியல் வகைப்பாட்டில் சிறுதானியங்கள் அனைத்தும் புல்வகைகளாக (Grass species) வகைப்படுத்தப்படுகிறது.

கொல்லிமலை சிறுதானியப்பயிர் ரகங்களுக்கும் அவற்றின் பல்லுயிர் பன்மையத்திற்கும் பெயர் பெற்ற இடம். மலையாளிப் பழங்குடிகள் அவர்களது வேளாண்நிலங்களில் சாமையில் (Little millet) ஏழு இரகங்களும், திணையில் (Fox tail millet) ஆறு இரகங்களும், கேழ்வரகில் (Finger millet) ஆறு இரகங்களும் (Finger millet), வரகில் (Kodo millet) இரண்டு இரகங்களும் சாகுபடி செய்கின்றனர். இந்த இரகங்களை அடுக்கு நிலைகளாக வகைப்பாடு

செய்வதில் அவர்களின் நுணுக்கமான அறிவு மற்றும் பயிரினங்களின் குணாம்சங்கள் பற்றிய அனுபவம் தெளிவாக வெளிப்படுகிறது.

மலையாளிகள் பாரம்பரியமாய் விளைவிக்கும் மேற்குறிப்பிட்ட நான்கு வகையான சிறுதானியப் பயிர்களை, அவற்றின் தண்டுப் பகுதியின் தடிமன், சொனை (சிறிய ரோமங்கள் போன்ற தூவிகள்), இலை வடிவம், பயிரின் அமைப்பு, கதிர் வடிவம் மற்றும் அமைப்பு, தானியத்தின் வடிவம், பருமன் அல்லது உருவளவு, நிறம் மற்றும் அதோடு அத்தானியத்தில் செய்யப்படும் உணவின் சுவை, தரம் ஆகிய காரணிகளை கருத்தில் கொண்டு வகைப்படுத்துகின்றனர்.

தங்களின் நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் கிடைத்த ஆழமான புரிதலையும், பரந்த அறிவினையும் பயன்படுத்தி இரண்டு முறைகளில் மலையாளிகள் சிறுதானியங்களை பிரித்து வகைப்பாடு செய்கிறார்கள்.

- முதலாவது வகைப்பாடு பயிர்களின் வெளிப்புற தோற்றத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பெயரிடல் முறையாகும். மலையாளிகள் வெவ்வேறு சிறு தானிய இரகங்களுக்கு சில குறிப்பிட்ட வெளிப்புறத் தோற்றக் காரணிகளின் அடிப்படையில் பெயரிட்டு பயன்படுத்தி வருகிறார்கள் அந்தப் பெயர்களைக் கொண்டு பயிர்களை வகைப்படுத்துகிறார்கள்.
- இரண்டாவதானது இரகங்களின் பயன்பாட்டினைப் பொறுத்து பெயரிட்டு அதனை வகைப்படுத்துதல் ஆகும்.

**தோற்றப் பெயரிடல் வகைப்பாடு:** இது பயிரினங்களின் வெளிப்புற கட்டமைப்பு அல்லது தோற்றம், உழவியல் செயல் முறைகள், பயிரின் உயரம், பயிரினுடைய கதிரின் அமைப்பு மற்றும் தானியமணிகள் கதிரில் எவ்வாறு அடுக்கப்பட்டுள்ளன மற்றும் உணவில் அவற்றின் சுவை, நிறம் ஆகியவற்றின் அடிப்படையில் அக்குறிப்பிட்ட தானியத்திற்குப் பெயரிடப்படுகிறது. அவ்வாறு வேறுபடுத்தும் மற்றும் பெயரிடும் வகைகளில் பெரும்பாலும் அவை மரபணுச்சார்ந்து சுற்றுசூழலினால் பாதிக்கப்படாத காரணிகளாக உள்ளது. இவை அந்த மக்களின் வேறுபடுத்தும் காரணிகளின் நிலைத்த தன்மையையும் ஆழமான புரிதலையும் வெளிப்படுத்துகிறது. இதனால் அந்த பயிரினைப் பார்த்தவுடன் அதை அடையாளம்

காணலாம். இவ்வகையான சிறுதானிய வகைப்பாட்டில் ஒருரகத்தில் முக்கியமாகப் பயன் படுத்தப்படும் பயிரின் பாகங்கள், அல்லது அந்த ரகத்தைக் நன்கு கண்டுணர்ந்த விதம் அந்த ரகத்திற்கு இடப்பட்டிருக்கும் பெயரில் வெளிப்படும். இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இவ்வகைப்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்ட காரணிகள்வெளித்தோற்றத்தின்அடிப்படையில்எளிதாகவேறுபடுத்த பயன்பட்டாலும் அவை மரபணு ரீதியாக மாறாமல் சுற்றுசூழலினால் பாதிக்கப்படாமல் தொடர்ந்து அடுத்த தலைமுறைப் பயிர்களிலும் மாறாமல் இருக்கக்கூடிய பண்புகளுடன் தொடர்புடையது. இங்கு எடுத்துக்காட்டாக சாமை மற்றும் திணை இரகங்களை மலையாளிகள் எவ்வாறு ஒன்றிலிருந்து மற்றதை வேறுபடுத்தி அதை வகைப்படுத்துகின்றனர் என்பதைக் காணலாம்.

- மல்லியசாமை அல்லது வெள்ளசாமை: இந்த தானிய அரிசியினை சமைக்கும் போது சோறானது மல்லிகைப் பூ போன்று நிறத்தில் வெண்மையாகவும், பூ போன்று மென்மையாகவும் இருக்கும். இதனால் இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.
- சடைசாமை: இந்த ரகத்தில் பயிர் நன்கு விளைந்த பின் அதன் கதிரானது இரண்டு அல்லது மூன்று வரிசையில் தலைமுடியில் சடை பின்னியது போன்று தோற்றத்தில் இருக்கும்.
- திரிகுலசாமை: இந்த இரகத்தின் விளைந்த கதிர்கள் மெல்லியதாக இருக்கும், கதிரில் தானியமணிகள் ஒன்றுடனொன்று கோர்த்தாற்போல், திரி போன்று அமைப்புடன் காணப்படும்.
- பில்லு சாமை: இதன் தண்டுப்பகுதி மிகவும் சன்னமாகவும், மெல்லியதாவும் புற்களின் தண்டு போன்று தோற்றமளிக்கும். மலையாளிகள் பேச்சு வழக்கில் ‘புல்’ என்கிற வார்த்தையை ‘பில்லு’ என்றே அழைக்கின்றனர்.
- கட்டவெட்டி சாமை: இதன் தண்டுப் பகுதி தடிமனாக (மரக்கட்டைப் போன்று) உறுதியாக இருக்கும். அறுவடை செய்யும்போது அதன் தண்டினை அரிவாள் கொண்டு வெட்ட வேண்டியிருக்கிறது என்பதால் இந்த பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.
- கோட்டைப்பெட்டி சாமை: இந்த ரகம் பொதுவாக அதிகமான மகசூலை கொடுக்கும். இந்த இரகத்தினை பயிர் செய்தால் கோட்டை கோட்டையாய் கட்டி சேமிக்க அறுவடை கிடைக்கும்.

கோட்டை என்பது அவர்கள் பாரம்பரியமாக தானியங்களை சேமிக்கப் பயன்படுத்தும் ஒரு முறை.

- பெருஞ்சாமை: என்கிற இந்த ரகம் பயிரின் தோற்றத்தில் மற்ற சாமை ரகங்களை விடப் பெரியதாகவும், வளர்ந்து உயரமானதாகவும் இருக்கும், மேலும் இந்த இரகத்தின் தானியங்களின் நிறத்தினையும் கணக்கில் கொண்டு இரண்டு வகைகளாக தானியங்களின் நிறம் வெள்ளையாக இருப்பின் அது வெள்ளப்பெருஞ்சாமை அல்லது தானியங்களின் நிறம் கருப்பாக இருப்பின் அது கரும்பெருஞ்சாமை என்று வகைப்படுத்துகின்றனர்.

இதே போன்று காரணிகளின் அடிப்படையில் பெயரிடும் முறையில் அவர்கள் விளைவிக்கும் மற்றொரு முக்கிய சிறுதானியப் பயிரான திணைப் பயிரிலும் எவ்வாறு இரகங்களை வகைப்படுத்துகின்றனர் என்பதையும் இங்கு காணலாம்.

- கிள்ளான் திணை: இந்தப் பயிரின் கதிரினை அறுவடை செய்யும் முறையின் அடிப்படையில் இந்த பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரகத்தில் கதிர் விளைந்த பிறகு அதனைக் கையால் கிள்ளி அறுவடை செய்வர்.
- மொசக்கண்ண திணை: இந்த இரகத்தின் கதிரில் சொனை மொசமொசவென அதிக அளவு நெருக்கமாக காணப்படும்.
- கோரன் திணை: இந்த இரகத்தின் பயிர் அமைப்பு கோரைப்புல் போன்று அதிக தண்டுகளுடனும் ஒவ்வொரு பயிரிலும் குறைந்தது மூன்றுக்கும் மேற்பட்ட கதிர்களுடனும் காணப்படும்
- கருந்திணை மற்றும் செந்திணை: இந்த ரகங்களின் பெயர்கள் தானியத்தின் நிறத்தினைக் கொண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. தானியங்களின் நிறத்தினைப் பார்த்தவுடனே வேறுபடுத்தி அறியலாம், தானியத்தின் நிறம் கருப்பாக இருப்பின் கருத்திணை, சிவப்பு நிறத்தில் இருப்பின் செந்திணையாகும்.
- பாலந்திணை: இந்த ராகத்தின் பெயரும் தானியத்தின் நிறத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரகத்தில் தானியமணிகள் பால் போன்று வெள்ளை நிறத்தில் காணப்படும்.

இவ்வாறாக பழங்குடி மக்களின் அகத்தார் வகைப்பாட்டில் வெளிப்புறப் பண்புகள், உழவியல் செயல்பாடுகள், தானியங்களின்

உணவு சார்ந்த பண்புகள் ஆகியவை காரணிகளாக அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய பெயரிடல் முறை, பயிர்களின் உயிரியல் பண்புகள் பற்றிய அறிவு, நடைமுறையில் பெற்ற அனுபவம் போன்றவை பழங்குடி மக்களின் வகைப்பாட்டு அறிவினை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக இவ்வாறு பெயரிடுவது அனைவரும் ரகங்கள் பற்றி எளிதில் அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கிறது தவிர அவர்கள் விளைவிக்கும் பயிர் இரகங்கள் பற்றிய அவர்களின் துல்லியமான புரிதலையும், அறிவையும் பிரதிபலிக்கிறது.

**பயன்பாட்டின் அடிப்படையில் இரகங்களை வகைப்படுத்துதல்**

பயன்பாட்டு அடைப்படையில் வகைப்படுத்துவதில் ஒவ்வொரு இரகத்திற்கும் அதன் பயன்பாட்டு மதிப்புகள் காரணிகளாகப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு பயன்படுத்துவதில் மலையாளிகளின் சிறுதானியப் பயிர்களின் சாகுபடி முறைகள், பயிர்செய்யப்படும் நிலத்தின் மண் மற்றும் நில அமைப்புகளைப் பயன்படுத்துதல், அறுவடைக்குப்பின் அவற்றை அரிசியாக்கி சமைக்கும் போது அனுபவிக்கும் உணவின் சுவை ஆகியக் காரணிகளைக் கொண்டு மலையாளிகள் இனங்களை அவர்களின் பயன்பாட்டு நோக்கத்திற்காக வகைப்படுத்துகிறார்கள். இம்முறையில் உழவியல் பண்புகள் (அ) காரணிகள் அதிகமாக பயன்பாட்டில் உள்ளது. அதனை அட்டவணையில் காணலாம்.

| பயன்பாட்டு காரணிகள் | மல்லிய சாமை | திரிகுல சாமை | சடைச் சாமை | பெருஞ் சாமை | கோட்டப் பெட்டி சாமை | கட்ட வெட்டி சாமை | பில்லு சாமை |
|---|---|---|---|---|---|---|---|
| அறுவடை முறை<br>• அடி அறுப்பு<br>• மேல் அறுப்பு | <br>+<br>– | <br>+<br>– | <br>+<br>– | <br>–<br>+ | <br>–<br>+ | <br>–<br>+ | <br>+<br>– |
| பயிர் முதிர்ச்சியடையும் காலம்<br>• குறுகிய காலப் பயிர் (3-4 மாதங்கள்)<br>• நீண்ட காலப் பயிர் (5-6 மாதங்கள்) | <br>+<br>– | <br>+<br>– | <br>+<br>– | <br>–<br>+ | <br>–<br>+ | <br>–<br>+ | <br>+<br>– |
| நிலஅமைப்பு<br>• மேட்டாங்காடு<br>• கொல்லக்காடு | <br>+<br>– | <br>+<br>– | <br>+<br>– | <br>–<br>+ | <br>–<br>+ | <br>–<br>+ | <br>+<br>– |
| பயிரிடும் முறை<br>• ஊடு பயிர்<br>• தனிப் பயிர் | <br>–<br>+ | <br>–<br>+ | <br>–<br>+ | <br>+<br>– | <br>+<br>– | <br>+<br>– | <br>–<br>+ |
| வறட்சித் தாங்கும் திறன்<br>• அதிகம்<br>• குறைவு | <br>–<br>+ | <br>–<br>+ | <br>–<br>+ | <br>+<br>– | <br>+<br>– | <br>–<br>+ | <br>–<br>+ |
| தானியங்களை அரிசியாக்குதல்<br>• இரண்டு முறை குத்துதல் (1)<br>• மூன்று அல்லது நான்கு முறை குத்துதல் (2)<br>• நான்கிற்கும் அதிக முறை குத்துதல் (3) | *1* | *1* | *1* | *2* | *2* | *3* | *1* |
| உணவின் சுவை<br>• அதிக சுவை (1)<br>• மிதமான சுவை (2)<br>• குறைந்த சுவை (3) | *1* | *3* | *2* | *1* | *2* | *1* | *2* |
| கால்நடைத் தீவன மதிப்பு<br>• உகந்தது<br>• இல்லை | <br>+<br>– | <br>+<br>– | <br>+<br>– | <br>–<br>+ | <br>–<br>+ | <br>–<br>+ | <br>+<br>– |

பயிரிடப்படும் நிலவகை (மேட்டாங்காடு மற்றும் கொல்லக்காடு), மண்வளம் (அதிகம் மற்றும் குறைவு) பயிரிடும் முறைமை, தனிப் பயிர் மற்றும் ஊடு பயிர், வருடம் முழுவதும் ஒரு பயிர் அல்லது அறுவடைக்குப் பின் இன்னொரு பயிர் என ஆண்டிற்கு இரண்டு பயிர் செய்வது, இவ்வாறாக குறிப்பிட்ட நோக்கத்திற்காக சில இரகங்களை தேர்வு செய்வதில் மலையாளி பழங்குடிகளின் வகைப்பாடு எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்று புரிந்து கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட இரகத்தின் இரண்டு வகையானப் பயன்கள் (உணவு மற்றும் தீவனம்), அறுவடை முறை (கதிரை மட்டும் அறுவடை செய்தல் அல்லது முழு பயிரையும் அறுத்தல்), மற்றும் பயிரின் வளர்ச்சி நாட்கள் (குறுகிய மற்றும் நீண்ட கால பயிரினங்கள்) ஆகியன முக்கிய வகைப்பாட்டுக் காரணிகளாகப் இதில் பயன்படுத்தப்படுகின்றன.

**அகத்தார் வகைப்பாட்டில் பழங்குடிகளின் அறிவு: பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகள்**

மலையாளி பழங்குடிகளின் முக்கிய பாரம்பரிய உணவுப் பயிர்களான சிறுதானியங்களின் அகத்தார் வகைப்பாடு பற்றிய அறிவு என்பது, வேளாண் செயல்பாடுகளில் ஈடுபடும் பாலினம்- ஆண், பெண், வயதின் அடிப்படையில் பெற்ற அனுபவம், ஒருவருக்கு வேளாண்மையில் இருக்கும் ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் அமைகிறது.

இவ்வாறு வகைப்படுத்தும்போது ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் விதையின் நிறம் மற்றும் பயிரின் வளர்ச்சியினை பற்றிய காரணிகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் பெண்கள் இவற்றுடன் கொல்லிமலையில் இந்த இனங்கள் எந்த ஊரில் அதிகம் பயிரிடப்படுகிறது, அவை நன்கு வளர்வதற்குரிய உகந்த மண் மற்றும் வானிலை காரணிகள், அவற்றின் உயரம், கதிரின் அமைப்பு மற்றும் வடிவம், பதப்படுத்தலில் இவற்றின் பண்பு, உணவின் சுவை, தரம், அவற்றின் மூலம் பெரும் உடல் நலப் பயன்கள் ஆகியவை குறித்து கவனம் செலுத்துவர்.

சிறுதானிய சாகுபடியில் பொதுவாக பாலின அடிப்படையில் வேலை பாகுபாடு என்பது ஆண்கள் உழுதல், விதைத்தல் மற்றும் குறுக்கு உழவு போன்ற பணிகளையும் பெண்கள் களை எடுத்தல், பயிரின் வளர்ச்சியினை கண்காணித்தல் மற்றும் அறுவடை, விதைத்தேர்வு, விதைசேமிப்பு மற்றும் விதைப்பரிமாற்றம் போன்ற வேலைகளைப் பொறுப்பெடுத்து ஈடுபடுகின்றனர். தவிர எப்போது விதைக்க வேண்டும், என்ன இரகங்களைப் பயிரிடவேண்டும், எந்த மாதிரியான பயிர்முறையினை பின்பற்றவேண்டும். போன்ற வேலைகளையும் முடிவுகளையும் ஆண் மற்றும் பெண் இருவரும் கலந்து பேசி முடிவு செய்கின்றனர்.

நாற்பது வயதுக்கு மேல் உள்ள ஆண்களும், பெண்களும் பயிர், தானியம் இவற்றின் வெளிப்புற பண்புகள், வளர்வதற்குத் தேவையான காலநிலை மற்றும் மண்ணின் தன்மை, பயிரிடும்முறை, உணவிற்கான பயன்பாடு மற்றும் சுவை போன்ற காரணிகளை அனுபவத்தின் வழியாக தெரிந்து கொண்டு பயன்படுத்துவதில் ஈடுபடுகின்றனர். ஆனால் நாற்பது வயதிற்குக் கீழுள்ள மலையாளிகளுக்கு இரகங்களை இனங்கண்டு வேறுபடுத்துவதில் போதிய அனுபவம் இருப்பதில்லை. எனவே அவற்றை பற்றிய அறிவும் குறைவாகவே உள்ளது. அவர்களுக்கு பயிர்களின் அடிப்படையில்

சிறுதானியங்களை வகைப்படுத்தல் மட்டுமே தெரிகிறது. ஆனால் இந்த வயதுடையோரில் ஆண்களை காட்டிலும் பெண்கள் விதைத் தேர்வு, உணவு பற்றிய பண்புகள், சாகுபடி முறைகள் போன்றவற்றின் அடிப்படையில் வகைப்படுத்துவதில் தேர்ந்திருக்கிறார்கள். இது போன்ற பல்வேறு வகையான காரணிகளை பெண்கள் நுட்பமாக தெரிந்து கொண்டு பயன்படுத்தும் திறன் கொண்டுள்ளனர்.

ஆனால் ஆண்கள் மகசூல் மற்றும் வேளாண் உழவியல் நடைமுறைகளை கொண்டு வேறுபடுத்துகிறார்கள். குறிப்பாக பெண்கள் தரமான விதைகளை தேர்ந்தெடுக்கும் பொறுப்பில் இருப்பதால் அவர்களின் பல்வேறு இரகங்களின் மரபியல் குணங்களை நன்கு அறிந்து வைத்துள்ளனர். இதனால் வகைப்பாடு குறித்து பெண்களின் அனுபவ அறிவு தங்கள் நிலத்தில் இருக்கும் இயற்கை வளங்களை எவ்வாறு செழுமையாகப் பயன்படுத்துவது எந்த இரகத்தினைப் பயிரிடுவது என்ற நோக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. விதை மேலாண்மை, அறுவடைக்கு பிந்திய மேலாண்மை, சிறுதானிய அரிசியினைக் கொண்டு உணவு சமைப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுவதால் பெண்கள் சிறுதானியங்களின் நுட்பமான பண்புகளை நன்கறிந்து அவற்றை இத்தானியங்களை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்துகிறார்கள்.

## அகத்தார் வகைப்பாட்டினை அறிந்து கொள்வதின் தேவையும், பயன்களும்

மலையாளி பழங்குடிகளின் அகத்தார் வகைப்பாடு பற்றிய ஆய்வு அவர்களின் வாழ்க்கை முறை, வேளாண் நடைமுறை மற்றும் அங்கு நிலவும் இயற்கை மற்றும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய புரிதல்களை வெளிக்காட்டுகிறது. இந்த பல்லுயிர் பன்மையம் குறித்த பாரம்பரிய அறிவு அப்பழங்குடி மக்களின் ஒட்டு மொத்த பாரம்பரிய அறிவில் ஒன்றிணைந்திருக்கும் ஒரு பகுதியாகும். இதைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் மேம்பாட்டுச் செயல்பாடுகளை திட்டமிடுவது அம்மக்களின் ஒட்டு மொத்த எதிர்கால உணவு, உற்பத்தி, சுற்றுச்சூழல், சுகாதாரம், மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உதவியாகவும் உகந்ததாகவும் இருக்கும்.

இது போன்ற அகத்தார் வகைப்பாடு மிகமுக்கியமாக பயிர்களின் பலவகையான ரகங்களை/மரபணு வளங்களை பாதுகாப்பதற்கு பயன்படும். எவ்வாறெனில் ஒரு குறிப்பிட்ட பயிர் வகையின் வெவ்வேறு ரகங்கள், அந்த ரகங்களுக்கு இடையில் இருக்கும் ஒற்றுமை, வேற்றுமைகளை அறிந்த கொள்வதின் வாயிலாக எவ்வாறு அக்குறிப்பிட்டப் பயிர் பன்மையத்தோடு மரபணுவளங்களையும் உள்ளடக்கியிருக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்கான வாயிலாக அமையும். இப்புரிதலும், அறிவும் அவற்றைப் பாதுகாப்பதற்கான சரியான திட்டங்கள் உருவாக்கப் பயன்படும்.

மலையாளப் பழங்குடிகளின் இவ்வகைப்பாட்டினை ஆவணப்படுத்துவது அவசியம். இதன் மூலம் அப்பயிர்களின் முக்கியத்துவம், அவசியம் பற்றி வெளியுலகம் அறிந்து கொள்ளும். இது போன்று என்ன வகையான காரணிகள் அடிப்படையில் சிறுதானியங்கள் உள்ளூர் மக்களால் வகைப்படுத்தப்படுகிறது என்பது குறித்தப் புரிதல் ஏற்கனவே கூறியது போல சிறுதானியப்பயிர்கள் மறைந்து கொண்டிருப்பதற்கான காரணங்களை கண்டறிந்து அப்பயிர்களின் வளர்ச்சி மற்றும் மேம்படுத்துவதற்கான சரியான திட்டங்கள் உருவாக்கப் பயன்பாடும். இதில் குறிப்பாக பாலின அடிப்படையில் சிறுதானிய உற்பத்தியில் பெண்களின் பங்கினையும், அப்பயிர் வகைகள் குறித்து அவர்களுக்கு இருக்கும் பாரம்பரிய அறிவினையும் பதிவு செய்யவேண்டியது அவசியம்.

இன்றைக்கு மிக வேகமாக நவீனமயமாகிக் கொண்டிருக்கும் வேளாண்மையில், சாகுபடி செய்வதற்கான பயிர்த் தேர்வை விவசாயின் விருப்பத்திற்குப் பதிலாக சந்தையின் தேவை முடிவு செய்யக் கூடிய இன்றைய சூழலில் மறைந்து வரும் வேளாண் பல்லுயிர் பன்மையத்தினை பாதுகாக்கவும், அதன் மூலன் எதிர் காலத்தில் உணவுப் பாதுகாப்பிற்கு முக்கிய பங்காற்றக்கூடிய சிறுதானிய/ஊட்டச்சத்து தானியப் பயிர்களை பாதுகாத்து மேம்படுத்த திட்டங்கள் உருவாக்கவும் இந்த ஆவணம் பயன்படும்.

இது போன்று ஒரு சமூகத்தின் கூட்டறிவினைப் பிரதிபலிக்கும் அகத்தார் வகைப்பாட்டினை ஆவணப்படுத்தும் முயற்சி அனுபவங்களின், ஆதாரங்களின் அடிப்படையில் உருவான

இக்கூட்டறிவு அவர்களது மரபார்ந்த உரிமைகளை தாவர வகைகள் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (2001)[12] ன் அடிப்படையில் பாதுகாப்பதற்கும் மேலும் அவ்வறிவு அரசின் கொள்கைத் துணையோடு மதிப்பூட்டல் பெற்று (அறிவு சார் சொத்துரிமை பெறுவது போன்ற செயல்முறை மூலம்) அம்மக்களுக்கு பயனளிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம். அதோடு இந்த 'பண்பாட்டு பல்லுயிர் பன்மைய மரபு வழிச் சொத்தினை (Bio-cultural heritage)[13] பாதுகாத்து மேம்படுத்துவதற்கான உரிமைகளை அச்சமூக மக்கள் பல்லுயிர் பன்மையச் சட்டம் 2002 (National Biodiversity Act 2002)[14] கீழ் கோரவும் பயன்படும்.

..........

[12] இச்சட்டம், பயிரின மரபியல் வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் கிடைக்கச் செய்வதில் விஞ்ஞானிகளுக்கிணையான உரிமைகளை விவசாயிகள் பெறுவதை நடைமுறைப்படுத்தல், புதிய இரகங்களை உருவாக்கும் போது எந்த சூழலிலும் விவசாயிகளின் பங்களிப்புகள் தொடர்பான உரிமைகள் அங்கீகரித்து பாதுகாக்கப்படுதல் மற்றும் பாரம்பரிய ரகங்களை விவசாயிகள் தொடர்ந்து சேமித்து, உபயோகப்படுத்தி பிற விவசாயிகளுடன் பகிர்ந்துகொள்ளும் உரிமையினை உறுதிசெய்வதாகும்.

[13] உயிரியல் மற்றும் பண்பாட்டுப் பன்மையம் ஆகியவற்றுக்கு இடையேயான ஆழமான, பிரிக்க முடியாத இணைப்பானது, பழங்குடி மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் பாரம்பரிய அறிவு, நடைமுறைகள், மொழிகள் மற்றும் அறநெறிகளை உள்ளடக்கியது, அவை அவர்கள் சார்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகளால் வடிவமைக்கப்படுகின்றன.

[14] இச்சட்டம் உயிரியல் பன்மையத்தினை பாதுகாத்தல், உயிரியல் வளங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளின் நியாயமான மற்றும் சமமான பகிர்வை அவற்றை பாதுகாக்கும் சமூகங்களுக்கு உறுதிசெய்தல், அவர்களின் பாரம்பரிய அறிவு மற்றும் நடைமுறைகளை அங்கீகரித்து பாதுகாப்பதற்கான கட்டமைப்பை நடைமுறைப்படுத்துகிறது

## குறிப்புகள்


- *தமிழ் ஒளி, பெ. 2020. சிறுதானியங்களின் தனித்துவம் என்ன?* https://www.hindutamil.in/news/supplements/uyir-moochi/545320-millets.html தகவலைக் தேடிக் கண்டது 15 November 2025
- Fowler, C.S. 1977. Ethnoecoloy In Donald L.Hardesty (Ed.) Ecological Anthropology, New York. John Wiley and Sons
- Edgar Thurston. 1912. Castes and Tribes of Southern India. Madras.
- Rengalakshmi. R. 2004. Folk Biological Classification of Minor Millet Species in Kolli Hills, India, Journal of Ethnobiology 25:1.

# மானிடவியலில் மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ள நேரும் சிக்கல்கள்

**எத்திராஜ் அகிலன்***

*கடந்த பத்தாண்டுகளாக, ஓய்வுநேரப் பணியாக மொழிபெயர்ப்பில் ஈடுபட்டு வருகிறேன். இப்பணியில் எதிர்கொள்ள நேரும் சவால்களே என்னை ஈர்க்கும் அம்சங்கள். இலக்கியப் பிரதிகளை மொழிபெயர்ப்பதிலேயே நான் அதிகமாய் ஆர்வம் காட்டி வருகிறேன். சிறு பத்திரிகை எனும் பெயரில் அவ்வப்போது வெளியாகும் சிற்றேட்டிற்காக, க்லாட் லவி ஸ்ட்ராஸின் தொன்மமும் அர்த்தமும் (*Myth and Meaning*) என்ற நூலின் ஒரு பகுதியை மொழிபெயர்க்கும் வாய்ப்பு சமீபத்தில் அமைந்தது. கனடா நாட்டு ஒலிபரப்பு நிறுவனத்திற்கு க்லாட் லவி ஸ்ட்ராஸ் ஆற்றிய ஐந்து உரைகளின் தொகுப்பே இந்நூல். தொன்மங்களையும் மானுட அறிவு வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவத்தையும் பற்றிய வாழ்நாள் ஆய்வுகள் மூலம் தனக்குக் கிட்டியிருக்கும் நுண்ணறிவை உலகின் தலையாய சிந்தனையாளர்களுள் ஒருவரான க்லாட் லவி ஸ்ட்ராஸ் இந்த ஐந்து உரைகளில் வழங்குகிறார்.*

*இந்தப் பிரதியை மொழிபெயர்க்கையில் எனக்கு எழுந்த சந்தேகங்களை விளங்கிக் கொள்ள நெடுங்கால நண்பர் முனைவர் தமிழ் ஒளியை அணுகினேன். அவருடைய அனுபவமிக்க அறிவு எனக்குப் பலவிதங்களில் வழிகாட்டியது. அப்பொழுது அவர் நான் எதிர்கொண்ட மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் குறித்து ஒரு சிறு குறிப்பைத் தான் தொடங்கவிருக்கும் மானிடவியல் மின்னிதழில் எழுதலாமே என்று பரிந்துரைத்தார். அதன் வெளிப்பாடே இந்தச் சிறு கட்டுரை.*

* *மேனாள் கல்லூரி முதல்வர், வாசவி கல்லூரி*

மிகச்சிறிய அறிமுகம் (A Very Short Introduction) எனும் பொதுத்தலைப்பில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகப் பதிப்பகம் பெருவாரியான எண்ணிக்கையில் நூல்களை வெளியிட்டிருக்கிறது. அவற்றுள் Translation எனும் நூல் படிக்கச் சுவையானது. Translation எனும் பதமே அது சொல்ல நினைக்கும் முழுமையான அர்த்தத்தைத் தந்து விடுவதில்லை என்பதைப் பல எடுத்துக்காட்டுகளோடு வேடிக்கையாக நிறுவியிருப்பார் நூலாசிரியர் மேத்யூ ரெனால்ட்ஸ். முனைவர் தமிழ் ஒளி ஒருங்கிணைத்து நிர்வகித்து வரும் 'தமிழில் மானிடவியல்' வாட்ஸ்அப் குழுவில் ஜெயகரனின் மூதாதையரைத் தேடி எனும் நூலை ஒட்டி, anthropology எனும் ஆங்கிலச் சொல்லை மானிடவியல் என்று மொழிபெயர்ப்பது சரியா எனும் விவாதம் நடைபெற்றது நினைவிருக்கிறது. மானிடவியல்/மானுடவியல் என்ற தமிழ்ச் சொல், ஆங்கிலச் சொல்லான 'anthropology' என்பதற்கான முழுமையான அர்த்தத்தைத் தருவதில்லை என்பது பொதுவான ஒரு கருத்து. Anthropology என்ற சொல், கிரேக்க மொழியில் இருந்து உருவானது. கிரேக்க மொழியில், anthropos என்றால் மனிதன், 'logos' என்றால் ஆய்வு அல்லது அறிவியல். ஆக, 'மனிதன் பற்றிய அறிவியல் பூர்வமான ஆய்வு' என்பதே இதன் நேரடிப் பொருள். இதில் உடலியல், பண்பாட்டியல், மொழியியல், தொல்பொருளியல், சமூக அமைப்புகள், நம்பிக்கைகள், உறவுமுறைகள், வரலாறு, அரசியல், பொருளாதாரம், பாலினம், மரபுகள் என அனைத்தும் அடங்கும். மேற்கத்திய அறிவியல் மரபில், இது முழுமையான (holistic) அணுகுமுறையைக் கொண்டது. மானிடவியல் என்ற தமிழ்ச்சொல், 'மானிடம்' (மனித இனம்) - 'இயல்' (இயல்புகளை ஆராயும் துறை) என்ற பொருளில் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சொல், 'மனித இயல்புகள் பற்றிய ஆய்வு' என்ற பொருளைக் கொடுத்தாலும், 'anthropology' என்ற சொல்லின் பன்முகப் பரிமாணங்களை முழுமையாக உள்ளடக்குவதில்லை. மாறாக, உயிரியல் கூறு பற்றிய குறிப்பு மட்டுமே மறைந்துள்ளது.

மனிதவியல், மானுடவியல், மானிடவியல், மாந்தவியல், மாந்தரியல் எனப் பல்வேறான சொற்களும் Anthropology எனும் சொல்லைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. மனிதவியல் என்பது "மனிதன்" என்ற சொல் வாயிலாக அடிப்படை அர்த்தத்தைத் தருகிறது. "இயல்" என்பது அறிவியல் பாணியைச் சுட்டும். இந்தப்

பயன்பாட்டில் பண்பாட்டு ஆழம் சற்றுக் குறைவாகத் தெரிகிறது. மானுடவியல் எனும் பயன்பாட்டில், 'மானுடம்' எனும் சொல் மனித இனத்தின் பண்பாட்டு, சமூக பரிமாணங்களைத் தருகின்ற போதும், "humanism" எனும் அர்த்தத்தைக் கொடுக்கும் சிக்கல் இருக்கிறது. 'மாந்தவியல்' அல்லது 'மாந்தரியல்' எனும் பயன்பாடுகள் இலக்கிய பாணியில் இனிமை தருவதாகத் தோன்றினாலும், இவை அறிவியல் புலங்களில் பெருமளவிலான புழக்கத்தில் இல்லை. மானிடவியல் எனும் பயன்பாட்டில் 'மானிடம்' என்பது உயிரியலோடு சமூக அம்சங்களையும் இணைக்கும் சொல்லாகத் தோன்றுகிறது.

'Anthropology' என்ற சொல்லின் முழுமையான அர்த்தத்தை வெளிப்படுத்த, 'மானிடவியல்' என்ற சொல்லுக்குப் பதிலாக, பண்பாட்டு மானுடவியல் (cultural anthropology), சமூக மானுடவியல் (social anthropology), உயிரியல் மானுடவியல்( (biological anthropology) போன்ற துணைத் துறைச் சொற்களைப் பயன்படுத்தும்போதுதான் அதன் உண்மையான பொருளைத் துல்லியமாக வெளிப்படுத்த முடியும். இருப்பினும், இத்துறையின் மொத்தக் கருத்தையும் ஒரு சொல்லில் கொண்டுவருவது சவாலான காரியமாகவே உள்ளது. மனிதன் என்பவன் யார்? அவன் ஓர் உடலா? பண்பாடா? மொழியா? நினைவா? Anthropology எனும் சொல், அவனை முழுமையாகப் பார்க்கும் ஒரு நுண்ணோக்கி. தமிழில், அந்தக் நுண்ணோக்கிக்குப் பொருத்தமான சொல்லை இன்னும் நாம் கண்டடையவில்லை.

மானிடவியலில் பல கருத்துகள், மேற்கத்தியச் சமூகங்களை மையமாகக் கொண்டு உருவானவை. அவற்றைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களுக்கு, தமிழில் நேரடியான, துல்லியமான நிகர்ச் சொற்கள் (exact equivalents) கிடைப்பது அரிது. உதாரணமாக, 'kinship', 'ritual', 'taboo' போன்ற சொற்களை நேரடியாக மொழிபெயர்ப்பது கடினம். kinship-ä உறவுமுறை என மொழிபெயர்த்தாலும், மானிடவியல் ஆய்வுகளில் அது குறிக்கும் விரிவான, சிக்கலான கட்டமைப்பை முழுமையாக உணர்த்தாது. இதேபோல், ritual-ஐ சடங்கு என்றும், taboo-ஐ விலக்கு என்றும் மொழிபெயர்ப்பது, மூலச் சொல்லின் ஆழமான, கலாசாரப் பின்னணியை இழக்கச் செய்துவிடும்.

சில மானிடவியல் கருத்துகள், மேற்கத்திய சமூகங்களின் தனித்துவமானபண்பாட்டுச்சூழலில்இருந்துஉருவானவை.அவற்றை நேரடியாகத் தமிழில் மொழிபெயர்க்கும்போது, தமிழ்ச் சமூகத்தின் யதார்த்தத்துடன் அவை பொருந்தாமல் போகலாம். உதாரணமாக, 'class' (வர்க்கம்) மற்றும் 'caste' (சாதி) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு. மானிடவியலில் இவ்விரண்டு சொற்களும் வெவ்வேறு சமூகப் படிநிலைகளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இந்தியச் சமூகச் சூழலில், சாதி முறை என்பது மிகவும் ஆழமான, சிக்கலான ஒன்றாகும். எனவே, 'caste' என்ற ஆங்கிலச் சொல்லை, தமிழில் 'சாதி' என்று மொழிபெயர்க்கும்போது, அதன் சமூகவியல், வரலாற்றுப் பரிமாணங்களை முழுமையாக உணர்த்துவது சவாலாக இருக்கும். அதே போன்று, தமிழ்ச் சமூகத்தில் 'குடும்ப மையம்' மற்றும் 'சமூக ஒற்றுமை' போன்ற சூழலுக்குள் ஆங்கிலச் சொல்லான 'individualism' என்ற கருத்து சற்றே மாறுபட்டுப் புழங்குகிறது.

மானிடவியல் சொற்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதென்பது வெறும் வார்த்தைகளை மட்டும் மாற்றுவதாக மட்டுமே அமைந்துவிடக் கூடாது. அது பண்பாட்டுப் புரிதல்களையும், கருத்துகளையும் துல்லியமாகப் பரிமாறிக்கொள்வதாக இருக்க வேண்டும். இத்தகைய மொழிபெயர்ப்புக்கு, மொழியறிவோடு, மானிடவியல் துறையில் ஆழமான அறிவும் அவசியமாகிறது. நான் முன்னர் குறிப்பிட்ட லவி ஸ்ட்ராஸின் தொன்மமும் அர்த்தமும் நூலில், இரண்டாவது உரையின் தலைப்பு, 'Primitive' Thinking & the 'Civilized' Mind. இதில் Primitive எனும் சொல்லை எவ்வாறு மொழிபெயர்ப்பது எனும் சிக்கல் எழுந்த போது, 'நாகரிக முதிர்ச்சியற்ற' சிந்தனையும் 'நாகரிக' மனமும் என மொழிபெயர்க்கலாமென்று நண்பர் தமிழ் ஒளி ஆலோசனை கூறினார். தொலைபேசியில் அதற்கான காரணங்களை விரிவாக எடுத்துரைத்த பிறகு அதை ஏற்றுக்கொண்டேன். அதே போல், லவி ஸ்ட்ராஸின், Totemism எனும் நூலின் தலைப்பை குழூக்குறியியல் என்று தமிழாக்கம் செய்யவும் அவர் பரிந்துரைத்தார். The Savage Mind எனும் நூலின் தலைப்பைப் பண்படா மனம் என்றும் மொழிபெயர்க்க வழிகாட்டினார். இந்த நூல்களைப் பற்றிய அறிவு அவருக்கு இருந்ததாலேயே இது போன்ற பிழையில்லாத மொழியாக்கம் எனக்கு சாத்தியமானது.

Anthropology உரைகள் பல நேரங்களில் தத்துவ அடிப்படையிலானவை. Derrida, Foucault போன்றோர் எழுதிய உரைகளை மொழிபெயர்க்கும் போது, தமிழில் அவற்றின் ஆழம், பன்மை, ambiguity ஆகியன பெரும் சிக்கலை ஏற்படுத்துவனவாக இருக்கும். Anthropology-யில் பயன்படுத்தப்படும் "ethnocentrism", "liminality", போன்ற சொற்களுக்கு நேரிணையான தமிழ்ப் பதங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழில் ஒரு துல்லியமான நிகர்ச்சொல் இல்லாதபோது, புதிய சொற்களை உருவாக்க வேண்டி வரலாம். அப்படி உருவாக்கும் சொற்கள், படிப்பவர்களுக்குப் புரியும்படியாகவும், துறைசார்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் இருக்க வேண்டும். இது ஒரு சிக்கலான பணி. உதாரணமாக, 'ethnography' என்ற சொல்லுக்கு, இனப்பண்பாட்டு ஆய்வு அல்லது இனக்குழுப் புலம்சார் ஆய்வு போன்ற சொற்களைப் பயன்படுத்தலாம். ஆனால், இச்சொற்கள், 'ethnography' என்ற சொல்லின் பன்முகப் பரிமாணத்தை முழுமையாகப் பிரதிபலிக்கிறதா என்பதில் கருத்து வேறுபாடுகள் எழக்கூடும்.

தமிழில் மானுடவியலுக்கான ஒரு துல்லியமான, விரிவான கலைச்சொல் அகராதி (glossary of terms) இல்லாதது பெருங்குறை. இதனால், ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளரும் ஒவ்வொருவிதமான சொற்களைப் பயன்படுத்த நேரிடுகிறது. இது குழப்பத்தை உண்டாக்கி, துறைசார்ந்த புரிந்துகொள்தலைக் கடினமாக்கும். அனைவரும் ஒருமித்து ஏற்றுக்கொள்ளும் சொற்களை வரையறுத்து, அவற்றைப் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது இன்றைய உடனடித் தேவை. தேவைப்படும் துறைகளுக்கான கலைச்சொல் அகராதிகளை உருவாக்குவதிலும், உருவான அகராதிளைத் தேவைக்கேற்ப மேம்படுத்துவதிலும் அரசும் பிற கல்வியியல், ஆய்வியல் துறைகளும் கவனம் செலுத்துவது சிறப்பாக இருக்கும். இன்றைய செயற்கை நுண்ணறிவுச் சூழலில் அது எளிதாகக் கைகூடும் பணியாகவே இருக்கும்.